ஶ்ரீ

உ

ஓம் மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீவித்யா அல்லது சாக்த தர்சனம்

[சாக்த தர்சனம், சிவ-சக்தி தத்வம், மந்திரங்களின் சிறப்பும் சக்தியும், ஸ்ரீ சக்ரம் – நவாவரணங்கள், நவராத்ரி பூஜை முதலான பல விஷயங்களடங்கியது]

இயற்றியவர் :

ஸ்ரீ P. K. ஷண்முகநாதன், B. A., B. L.

(சிதானந்தநாதன்)

திண்டுக்கல்

பதிப்பாளர் :

ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஸநாதன தர்ம வித்யா ஸமிதி

ராஜா அண்ணாமலைபுரம், சென்னை.

தீபாவளி

(11—11—66)

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்

ஸ்ரீரங்கம்

3-3

படங்களின் விளக்கம்

மூகப்புப்படம் ஸ்ரீசக்ரம் : அடியிலுள்ள சுலோகத்தின் கருத்து: நான்கு சிவ ஸ்வரூபமான கோணங்கள் (மேல்நோக்கியவை), ஐந்து தேவீ ஸ்வரூபமான கோணங்கள் (கீழ் நோக்கியவை) இவை ஒன்பதும் மூலப்ரகிருதிகள், எட்டு தளங்கள், பதினறு தளங்கள், மூன்று மேகலைகள் (வட்டங்கள்), நான்கு வாசல்களுள்ள ரேகைகள் (மூன்று பூபுரங்கள்) இவைகளின் சமஷ்டி, (பிந்து உள்பட) நாற்பத்திநான்கு (கோணம்) களாக ஹே பகவதி! உன்னுடைய இருப்பிடமாகிய கோணங்களாகின்றன. (38-39 பக்கங்களைப் பார்க்கவும்)

ஸ்ரீ ராஜராஜேச்வரீ : அவள் அமர்ந்திருக்கும் மஞ்சம் பஞ்ச பிரம்மங்களாலானது. ஸ்ருஷ்டி கர்த்தா பிரம்மா, பாலனம்செய்யும் விஷ்ணு, ஸம்ஹாரம் செய்யும் ருத்ரன், திரோதானம் செய்யும் ஈச்வரன், அனுக்ரஹம் (மோக்ஷம்) கொடுக்கும் சதாசிவன் இவர்கள் இந்த ஐந்து தொழில்களையும் தேவியின் சக்தியைக்கொண்டு செய்கிருர்கள். தேவியே பஞ்சக்ருத்யபராயணு (20—21, 28—29 பக்கங்களைப் பார்க்கவும்)

தேவீ சாரதா : பிரம்மவித்யாஸ்வரூபிணீ, குணுதீதா.

தேவீ குமாரி : ஸர்வ ஜகத்தையும் தோற்றுவித்த ஜனனீ ஆனுலும் நித்யகுமாரி, ஆனந்தரூபிணீ, புக்தி முக்திப்ரதாயினி.

தேவீ மீனுக்ஷி : ச்யாமளா, மாதங்கீ என்றெல்லாம் அழைக்கப் படும் ஸ்ரீ ராஜராஜேச்வரி. ஆக்ஞா சக்ரத்தின்மேல் பிந்துமண்டல வாஸிநீ. மதுராபுரியில் ஆலயத்தில் நடக்கும் பூஜைகளில் மீனுக்ஷியை ஆறு காலங்களிலும் ஆறு ரூபங்களில் (பாலாமுதல் மஹாஷோடசீ வரை) தியானிப்பது முறை.

தேவீ துர்கா : (மஹிஷாஸுரமர்தினி) அநாத்ம விருத்திகளுக்கு மூலமான அஹம்காரம் மஹிஷன். அவனையும் அவனுடன் சேர்ந்த அஸுரர்களையும் (விருத்திகளையும்) அழிக்கும் சித்ரூபிணி—ஞானச்சுடர் தேவீ மஹிஷாஸுரமர்தினீ (97ம் பக்கம் பார்க்கவும்)

தேவீ ஸரஸ்வதீ : அக்ஷமாலை, அம்ருதகலசம், புஸ்தகம், முத்ரை இவைகளுடன் காட்சி அளிக்கிருள்; ஞானுநந்தமயீ.

தேவீ லக்ஷ்மி : பத்மஹஸ்தை, மோக்ஷ ஸாம்ராஜ்யம் வரை ஸகல ஸௌபாக்யங்களையும் அளிப்பவள்.

தேவீ ஸௌபாக்ய த்ரிபுரஸுந்தரீ : லலிதா ஸஹஸ்ர நாமத்தின் தியான சுலோகத்தில் உள்ள **पाणिभ्यामलिपूर्णरत्नचषकं रक्तोत्पलं बिभ्रतीं** - மது நிறைந்த ரத்ன கலசத்தையும், செங்குவளைப் புஷ்பத்தையும் தரிக்கிறவள். திரிபுரம் என்ற பதத்தின் கருத்துக்கள் 35, 48 பக்கங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன இந்த முப்புரத்துக்கு அதிஷ்டாத்ரியான ஸுந்தரீ தேவி,


குறிப்பு :—

மஹிஷாஸுரமர்த்தினி : மகாபலிபுரத்திலுள்ள ஒரு குகைக் கோயிலிலுள்ள சிற்பம் இங்கு தரப்பட்டிருக்கிறது. இது பல்லவ அரசன் நரஸிம்ம வர்மன் I மாமல்லன் (சுமார் கி. பி. 630—58) நிறுவின கோயில். துர்காதேவீ அஷ்ட புஜங்களோடு கூடியவள். இரண்டு கைகளால் வில்லை வளைத்து பாணப்ரயோகம் செய்கிறாள். இரண்டு கைகளிலும் கத்தியாலும், ஈட்டியாலும் கீழிருக்கும் அஸுரர்களை வதம் செய்கிறாள். மிஞ்சிய நான்கு கைகளில், மணி, சக்ரம், பாசம், அங்குசம் இவைகளைத் தரித்திருக்கிறாள். அநாயாஸமாக சிங்கத்தில் வீற்றிருக்கிறாள். சுற்றி யோகினீ கணங்கள். தேவியின் முகத்தில் புன்னகை, செய்கை வீரம் கொண்டது. சிங்கமும் பராக்கிரமத்தை வெளிக் காட்டுகிறது.

மஹிஷனின் தோற்றத்திலும் கர்வம், மதம் இவை நன்கு விளங்குகின்றன. அழகு, வசீகரம், வீரம், இவை ஒன்று கூடிய சிற்பம் இது. ("a sculpture remarkable for its beauty, grace and virility") பல்லவ சிற்பக்கலையின் மேன்மையை இங்கு காணலாம். **தேவீமாகாத்மியம்** அத். II சு. 48—53 ; அத். IV சு. 12—13 இவைகளில் சொல்லப்பட்டவை இந்த சிற்பத்தில் காணப்படுகின்றன.

தேவீ லக்ஷ்மீ : தஞ்சையில் சோழ சக்ரவர்த்தி ராஜராஜன் I எடுப்பித்த "ராஜராஜேச்வரம்" (பிரஹதீச்வரம்) ஆலயத்தில் இருக்கும் சிற்பம். காலம் கி. பி. 1009.

தேவீ ஸரஸ்வதி : ராஜராஜனுடைய மகன் ராஜேந்திரன் I கங்கைகொண்ட சோழபுரத்தில் நிர்மாணம் செய்த பெரிய ஆலயத்திலுள்ளது. காலம் 1030.



श्रीचक्रम्

ஸ்ரீசக்ரம்

चतुर्भिः श्रीकण्ठैः शिवयुवतिभिः पञ्चभिरपि
प्रभिन्नाभिः शंभोर्नवभिरपि मूलप्रकृतिभिः ।
चतुश्चत्वारिंशद्वसुदलकलाश्रत्रिवलय-
त्रिरेखाभिः सार्धं तव शरणकोणाः परिणताः ॥

—सौन्दर्यलहरी श्लो० ११

॥ श्रीः ॥



பதிப்பாளர் முன்னுரை

श्रीमातृचिन्तनरतः श्रीशाङ्करभाष्यजलधिराकेन्दुः।
श्रीबोधदाननिरतः श्रीमान्मम मनसि देशिकः स्फुरतु ॥

— பக்திஸுதா தரங்கிணீ

'ப்ரஹ்ம வித்யையின் ஸாதன சாஸ்திரமே ஸ்ரீ வித்யா' என்பது சான்றோர்களின் தீர்ப்பு. வேதத்தைத்தழுவிய ஆறு விதமான ஸகுணோபாஸனங்களை ஸ்ரீ சங்கரபகவத்பாதர் உபதேசித்தருளினர். அவைகளில் ஒன்று சிறப்பான தேவீ வழிபாடு. இதன் ரஹஸ்யங்கள் ஆகம, தந்திர சாஸ்திரங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. 'தேவியின் நிர்பந்தத்தால் பகவான் பசுபதி அகில புருஷார்த்தங்களையும் தரக்கூடிய சிறந்த தேவீ தந்திரத்தை உலகுக்கு அளித்தார்' என்று 'ஸௌந்தர்யலஹரியில்' (சுலோகம் 31) ஸ்ரீ சங்கர பகவத்பாதர் கூறியிருக்கிறார். மஹாதேவனின் வதனகமலத்திலிருந்து உதித்த சாஸ்திரத்தையே தக்ஷிணாமூர்த்தி திருக்கோலத்தில் அவரது சிஷ்யர்களான ஸநகர், ஸநந்தனர், ஸநத்குமாரர் மூவரும், மேலும் வஸிஷ்டரும், சுகரும், ஆகிய ஐவர் 'சுபாகமபஞ்சகம்' என்று தொகுக்கப்பட்ட சாஸ்திரத்தை நிறுவினர்கள். ஸ்ரீ கோவிந்தபகவத்பாதர் 'ஸுபகோதயம்' என்ற நூலில் தேவீ உபாஸனையை விளக்கினர். அதை அனுசரித்தே சங்கரபகவத்பாதரும் 'ஸௌந்தர்யலஹரி' என்ற ஸ்தோத்ர ரத்னத்தை இயற்றினர். ஞானம், யோகம், த்யான மூலமான ஆந்தரபூஜை, பாஹ்யபூஜை, சிவசக்தி ஐக்யம், ஜீவப்ரஹ்ம ஐக்யம், குண்டலினீயோகம், பிரஹ்மாண்டம் பிண்டாண்டம் இவைகளின் அமைப்பு, தேவியின் ஸௌந்தர்யம், முதலிய பல அரிய ரகஸ்யங்களை

தன்னுள் அடக்கி பிரகாசிக்கும் மந்த்ர கர்ப்பமான ஸ்தோத்திரமே 'ஸௌந்தர்யலஹரீ'. நம் நாட்டில் பல ஆலயங்களில் ஸ்ரீசக்ர பிரதிஷ்டை செய்து அங்குள்ள தேவியின் மூர்த்திகளின் ஸாந்நித்யத்தை பன்மடங்கு அதிகப்படுத்தியதுடன், தாங்களால் முதல் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட சிருங்கேரி தக்ஷிணாம்னாய பீடத்தில் ஸ்ரீசக்ரத்தின் பேரில்தான் சாரதா தேவியை ஸ்ரீ பகவத்பாதர் பிரதிஷ்டை செய்தார். இந்த தர்ம பீடத்தை அலங்கரித்த ஜகத்குருக்கள் எல்லோரும் இப்போதைய ஜகத்குரு உள்பட ஸ்ரீ வித்யா உபாஸகர்களே. 'ஸ்ரீ வித்யா ஜபதத்பராய நம:' (**श्रीविद्या-जपतत्पराय नमः**) 'சக்ரேச்வரீ மஹாவித்யா ரஹஸ்யார்த்தஸுபோதகாய நம:' (**चक्रेश्वरी महाविद्या रहस्यार्थ सुबोधकाय नमः**) என்றெல்லாம் அவர்களை அஷ்டோத்தரசத நாமாவளி மூலம் போற்றிவருகிறோம். ஸ்ரீ வித்யாரண்யரிடம் ஸ்ரீ வித்யா தீக்ஷைபெற்ற ஒரு மகானின் சிஷ்ய பரம்பரை 'கத்யவல்லரீ' என்ற நூலில் இருப்பதாகவும், அது பீஹாரில் ஸிதாமடியில் கிடைத்திருப்பதாகவும், நண்பர் குருபக்தரத்னம் **K. R.** வெங்கடராமன் இயற்றிய **'The Throne of Transcendental Wisdom'** என்ற நூலின் வாயிலாக அறிகிறோம். ஸ்ரீ சங்கரர் ஸ்ரீ வித்யாரண்யர் இவர்களைப்போலவே சிருங்கேரி ஜகத்குருக்கள் ஆலயங்களில் ஸ்ரீ சக்ர பிரதிஷ்டை செய்து வந்திருக்கிறார்கள். பிரதி சுக்ரவாரம், நவராத்ரி முதலான ஸுதினங்களில் சிருங்கேரி மடத்தில் நடக்கும் நவாவரணார்ச்சனமும், ஸுவாஸினீ பூஜையும் காணக்கிடைக்காத காட்சியாகும்.

இந்த மஹத்தான வித்யையின் ரகஸியங்களை சுலபமான ரீதியில் நமக்கு வழங்கியிருக்கிறார் நண்பர் ஸ்ரீ **P. K.** ஷண்முக நாதன். ஜகத்குரு சந்திரசேகர பாரதீ மஹா ஸ்வாமிகளின் வதனகமலத்திலிருந்து உதித்த சில உபதேசங்களும், அப்போது நேரில் கண்ட ஆச்சரிய நிகழ்ச்சியுமே நண்பருக்கு மந்த்ர சாஸ்திர ஆராய்ச்சியில் ஊக்கமளித்தன. பல ஆண்டுகளின் ஆராய்ச்சி, குருவின் உபதேசம், தீவிரமான ஸாதனங்கள் மூலம் அரிய அனுபவம், இவை எல்லாம் அமைந்ததே ஸ்ரீ ஷண்முகநாதனின் சமய வாழ்க்கை. அத்துடன் விசேஷமாக சிருங்கேரி மஹா ஸந்நிதானத்தின் அருள் மூலம் வேதாந்தத்திலும், ஸித்தாந்தத்திலும் சீரிய பயிற்சி. இப் பெருமை வாய்ந்தவர் இந்நூலை நமக்குத் தந்திருப்பது நம் பாக்கியமே.

ஸ்ரீ ஷண்முகநாதனை சங்கர ஸேவா ஸமிதியின் தொண்டர்களுக்கு அறிமுகப்படுத்தியவர் ஸ்ரீ இலஞ்சி சிதம்பரம் பிள்ளை. இந்த நூலையும் மற்றும் சில நூல்களையும் எழுதி ஸமிதிக்குத் தொண்டு செய்யும்படி தூண்டியவரும் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையே. அவர்களுக்கு நம் நன்றி.

இப்போது இந்த நூலை வெளியிடும் திவ்ய ஸ்தலத்தில் 1965ம் ஆண்டில் நவராத்ரி பூஜை, ஸஹஸ்ர சண்டீ ஹோமம், அதிருத்ர ஹோமம், லக்ஷ்மீ ஹோமம், புருஷஸூக்த ஹோமம், கோடி அர்ச்சனைகள் முதலிய மஹாயக்ஞங்களை நம் குருநாதர் சிருங்கேரி மஹா ஸந்நிதானம் நடத்தி வைத்தார்கள். இங்கேயே அவர்கள் 'வர்தந்தி' என்கிற ஜன்ம தின விழாவும் கொண்டாடப்பட்டது. ஒரு ஆண்டுக்குப் பின் அதே சுப தினமாகிய ஜகத்குரு 'வர்தந்தி' தினத்தில் தீபாவளி யன்று 'ஸ்ரீ வித்யா' என்ற இந்த நூல் வெளிவருகிறது. இதுவும் ஸ்ரீ ஜகத்குருவின் அருளே. தீபாவளி தினமாகிய இன்று சிதாநந்த ஸ்வரூபிணியாகிய லோக மாதா நம் எல்லோரின் உள்ளத்திலும் ஞான தீபம் பிரகாசிக்க அருள வேண்டுமாகப் பிரார்த்திப்போம்.

சிருங்கேரி ஜகத்குரு ஸநாதன தர்ம
வித்யா ஸமிதி, 'நவஸூஜா'
ராஜா அண்ணாமலைபுரம்
சென்னை-28.
8—10—1966.

வை. வைத்திய சுப்ரமண்யன்,
காரியதரிசி.

ஓம் மஹா திரிபுரஸுந்தர்யை நம:

நூலாசிரியரின் முகவுரை

मातस्ते महिमा वक्तुं शिवेनापि न शक्यते ।
भक्त्याहं स्तोतुमिच्छामि प्रसीद मम सर्वदा ॥

உலகம் தோன்றி மனிதனின் அறிவு முதிர்ச்சியடைந்த காலத்திலிருந்து அவனுக்கு பிரபஞ்சம் ஓர் புதிராகவேயிருந்திருக்கவேண்டும். தனக்கு அந்யமாக பற்பல ஜீவராசிகளையும், மரம், செடி, கொடி மலை ஆறு கடல் போன்றவைகளையும் மழை, புயல் இடி மின்னல் முதலியவற்றையும் அவன் ஓர் அற்புதமாகவே பார்த்திருப்பான். தன் செயலுக்கும், ஆற்றலுக்கும், அறிவுக்கும் மிஞ்சியிருந்த ஒவ்வொன்றையும் தெய்வமாகவே கண்டு வழிபட்டான். அறிவு முதிர முதிர அவை யாவும் ஓர் நியதியில் கட்டுப்பட்டு நடப்பதை உணர்ந்தான். பின் அந்த நியதியை உண்டுபண்ணினவர் யார்? அவர் எங்கிருக்கிறார்? என்று ஆராய ஆரம்பித்தான். அதோடு மனிதன் பிறப்பதும் இறப்பதும் அவனுக்கு ஓர் புதிராகவே இருந்தது. உடலை விட்டு உயிர் வேறாக இருப்பதைக் கண்டான். ஆனால் அவன் அதன் செயலைப்பார்க்க முடிந்ததேயொழிய அதன் ஸ்வரூபத்தை அறிய முடியவில்லை. மனிதன் போன்றே மற்ற ஜீவராசிகளும் தோன்றி, இருந்து மடிவதையும் கண்டான். எதிலிருந்து இதெல்லாம் தோன்றியதோ, எதினால் இவையாவும் ஜீவிக்கின்றனவோ, எதிலே முடிவில் லயம் அடைகின்றதோ அதை ஆராயவேண்டும் என்று முடிவுகட்டினான். பல கலாச்சாரங்களில், பல நாடுகளில், பல சீதோஷ்ண நிலையிலிருந்த அறிவாளிகள் யாவரும் ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமலே இந்த ஆராய்ச்சியில் இறங்கினர். போக்கு வரத்து ஸாதனங்கள் இல்லாத காலத்தில் ஒருவருக்கொருவர் தத்தம் கருத்துக்களை பரிமாறிக்கொள்ள இயலவில்லை.

அவரவருக்கு ஏற்பட்டுள்ள அனுபவமும், அபிலாஷையும், அதற்கேற்றபடி தோன்றும் யுக்திகளும், ஸாதனங்களும், அவற்றிற்கு அனுசரணையாக எடுத்துக்கொண்ட பிரமாணங்களும், அந்தந்த காலதேச வர்த்தமானங்களையும், சூழ்நிலையையும், கலாச்சாரத்தையும் பொறுத்து வெவ்வேறாக அமைவது இயல்புதானே? தொன்று தொட்டுப் பல தேசங்களில், பல காலங்களில் தோன்றிய இந்த ஆராய்ச்சியின் பலனே "சமயங்கள்" என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. நமது முன்னோர்கள் ஆராய்ச்சி செய்து முடிவு

கட்டின உண்மைகளை இன்றளவும் போற்றிப் பாதுகாத்து வந்ததின் காரணமாக ஏனைய சமய சித்தாந்தங்கள் மறைந்தும் மாறுபட்டும் சிதைந்தும் போனதுபோலப் போய்விடாமல் இன்றும் புதுமெருகுடன் மிளிர்கின்றது. இவைகளையே நாம் வேதம் என்று பஹுமானிக் கின்றோம். இந்த வேதம் "அபௌருஷேயம்" என்று தீர்மானிக் கிறோம். அதன் அடிப்படையில் பல சமய சித்தாந்தங்கள் தோன்றின. வேதத்துக்கு வ்யாக்யானம் செய்யும் முறையிலும், அதை மறுக்கும் முறையிலும் பலப் புதுக் கருத்துக்களும் பிரகடனப்படுத்தப்பட்டன. சாருவாகம் போன்ற புறப்புறச் சமயங்களும், மீமாம்ஸை போன்ற அகப்புறச்சமயங்களும் தோன்றின. ஒரு காலத்தில் நம் நாட்டில் நிலவிவந்த சமயங்கள் கணக்கில்லாதவை. அவற்றில் பல மிக இழிந்த கோட்பாடுகளையுடையவை. அவற்றிற்குள் ஒற்றுமை காண்பது மிகக்கடினம். அப்படியிருந்தும் அவற்றுள் ஒற்றுமை யிருக்கின்றது என்று காட்ட முன்வந்தவர் ஸாக்ஷாத் கயிலாயபதியின் அவதாரமாகிய ஸ்ரீ பகவத் பாதாள்தான். அதற்கு முன் யாரும் இத்தகைய அபூர்வக்கொள்கையைப் பரப்ப முன்வரவில்லை என்றே சொல்லலாம். மாறிக்கொண்டேயிருக்கும் பிரபஞ்சத்தில் மாறுதல் இல்லாத ஓர் பரம தத்துவம் இருக்கின்றது. அழிந்துபோகும் உலகில் அழியாத, அழிக்க முடியாத வஸ்து ஒன்று உண்டு. அதுவே மனித னுள்ளும், மற்றெல்லாப் பொருள்களிலும் सूत्रे मणिगणा इव "ஸூத்ரே மணிகணு இவ" என்றபடி ஏகமாய், அனுதியாய் சாஸ்வத மாய் இருக்கின்றது. அது ஸத்யம், ஞானம், அனந்தம் ப்ரஹ்ம என்ற பரமதத்வம். அதுவே ஆன்மா. அது அழிவற்றது. மாறுதலில்லாதது. ஸர்வவியாபகமாய் உள்ளது. முற்றறிவுடையது. ஆனந்தமய மானது என்று முடிவுகட்டிக் கூறினர். ஆயினும் உலகத்திலுள்ள பல்வேறு நாமரூப பேதங்களையும், அவ்வவற்றின் தோற்றம், வளர்ச்சி, முடிவு முதலிய மாறுபாடுகளில் இருக்கும் விசித்ரத்தையும் அவர் காணுமலில்லை. இவைகள் இவ்வாறு தோன்றுவதற்கு ஓர் காரணம் இருந்தே தீரவேண்டும் என்பதை ஆராய்ந்தார். உண்மைப் பொருள் ஒன்றேயாயினும் எண்ணற்ற நாமரூபபேதங்கள் அந்த உண்மைப் பொருளில் எவ்வாறு ஆரோபித்தன? அல்லது எவ்வாறு ஆரோபிக்கப்பட்டன? இந்நிலையில் அவர் பரிணுமவாதத்தையும் ஒப்புக்கொள்ளவேண்டி வந்தது. பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு உயிரும், கர்மாவினுல் கட்டுப்பட்டிருப்பதையும், பூர்வஜன்மவாசனை தொடர்ந்து செயல்படுவதையும் கண்ட ஸ்ரீ பகவத்பாதாள் தோற்றம் எல்லாம் பொய் அனவ மத்தியில் வந்த கர்மபல தோஷங்களால்

உண்டானது. அதுவும் நம்முடைய "அவித்யை" அல்லது அஞ்ஞானத்தாலேயே ஏற்பட்டது என்றுணர்ந்தார். அவரவரின் கர்மபலனுக்குத் தக்கவாறு அவர்களின் தநு கரண புவன போகங் களும், சித்தவிருத்தியும், அறிவுத்திறனும், பழக்கவழக்கங்களும் அமைகின்றன. அவை உண்மைப்பொருளை பாதிப்பதில்லை. தோற்ற முடையதற்குத்தான் இந்த "ஆபாஸம்". தோற்றமும் அழிவும் இல்லாத "ஸத்"திற்கு இது கிடையாது. வியாவகாரிகதசையில் இவை யாவும் உண்மை என்று ஒப்புக்கொண்டாலொழிய உலகம் நடக்காது. உலக நியதி இதுதான். ஆனால் பாரமார்த்திக தசையில் சுத்த ஸத்வமான ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம். ஜகத்மித்யை. ஞானம் உண்டாகும் போது இந்த வித்யாஸங்கள் தானே மறையும். அங்கே காண்பவனுமில்லை, காணப்படும் பொருள்களுமில்லை. காட்சியுமில்லை. இதுதான் எல்லாச் சமயக்கொள்கைகளையும் ஒன்று சேர்க்கும் உண்மை தத்துவம். அவனவன் ஆன்ம விகாஸத்துக்குத் தகுந்த சூழ்நிலைகளை அவனே உண்டு பண்ணிக்கொள்கிறான். இந்த நிலைமையில் மனிதன் எப்படியிருந்தால் என்ன? அவன் வணங்கும் தெய்வம் எதுவானால் என்ன? அவன் வழிபாட்டு முறை எத்தகைய தாயிருந்தால் என்ன? இருப்பது ஒரே வஸ்து. இரண்டாவது கிடையாது. எல்லா உயிர்களுக்கும் அதுவே ஸநாதனமாகிய பீஜம், பிறப்பிடம். ஸத்வ ரஜஸ் தமோ குணங்களைச் சார்ந்த மனநிலை களெல்லாம் அதிலிருந்தே தோன்றின. அவை அதனுள் இருக் கின்றது. அவற்றுள் அது இல்லை. இந்த மூன்றுகுணங்களாலாகிய எண்ணங்களால் உலகெல்லாம் மயங்கிப்போய் இவற்றினும் மேலானதும், அழியாத இயல்புடையதுமான அதை உணராதிருக் கின்றது. இந்த குணமயமாகிய 'தேவமாயை' கடத்தற்கரியது. ஞானம் தோன்றும் காலத்தில் இந்த மாயை அழியும். ஞானத்துக்கு பக்தி தேவை. பக்திக்கு ஸகுணோபாஸனை தேவை. ஸகுணோபாஸனை யிலிருந்தே நிர்குணோபாஸனைக்குச் செல்ல இயலும். ஸகுணோபாஸனை யில் மூர்த்திபேதம் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கின்றது. அது அவரவர் ஆன்ம பரிபக்குவத்துக்கு ஏற்ப ஏற்படுகின்றது. அவ்யக்த மாயிருக்கும் ஒன்றை அவரவர் தத்தம் இஷ்டம் போல் நாம ரூப கரசரணாதிகளை கற்பித்துக்கொண்டு வழிபடுகின்றனர். ஆனால் யாவரும் எங்ஙனும் வழிபடுவது ஒரே வஸ்துவைத்தான். எந்தெந்த ரூபத்தில் எந்தெந்த மூர்த்தியை வழிபட்டாலும் முடிவில் அவ்வழிபாடு அதையே சாருகின்றது, இதில் சந்தேகமேயில்லை. ஸர்வக்ஞனும், ஸர்வசக்தனும் ஸர்வ வியாபியாயும் இருக்கும் அந்த பரம தத்துவம் இப்படித்தான்

இருக்கும் இப்படியிருக்காது என்று சொல்ல நாம் யார்? ஸகல நாம ரூப பேதங்களும் அதுவாகவே யிருக்கும்போது எதை வழிபட்டால் என்ன? இன்றியமையாதது பக்தி ஒன்றே. கண்ணப்பர் இறைச் சியை இறைவனுக்கு அர்ப்பணிக்கவில்லையா? ஆனால் அவர் போன்று இறைவனுக்காக தன் கண்ணையும் அர்ப்பணிக்கத்தயாராய் இருக்கவேண்டும். அதுதான் தீவிரபக்தி. அங்கு தேகாபிமானமே இல்லை. எல்லாம் அவனுடையது என்று முதலில் உணர்ந்து, முடிவில் எல்லாம் அவனே என்று அமர்ந்து விடுகின்றது.

ஸகுணோபாஸனை பலதிறப்பட்டுத் திகழ்வதைப் பார்க்கிறோம். சிலர் "மந்திர விதியின் மரபுளிபிழாஅது" இருந்து பக்தி செய் கின்றனர். சிலர் மந்த்ரம் தந்த்ரம் யாதொன்றுமில்லாமலே வழிபடு கின்றனர். உபாஸனை என்பது என்ன? குருஸம்பிரதாயத்தை அனுசரித்து சக்ஷுராதிகரணங்களை அதனதன் இயற்கை விஷயங் களிலிருந்து திருப்பிஅவற்றை மனத்தில் சேர்த்து, அந்த மனத்தை புத்தியில் ஐக்கியப்படுத்தி, அந்த புத்தி விருத்தியை சுருதி ஸ்மிருதி கள் போதிக்கும் முறையில் உபாஸனா தேவதையிடம் பொருத்தி, தீர்க்க காலமாக, வேறு எண்ணங்களின்றி நிரந்தரமாக ஆதரவோடு உபாஸ்யப் பொருளை புத்தி விருத்தியில் நிலைக்கச்செய்வதாகும். அப்பொழுது "நான் ஒரு மனிதன்" என்ற எண்ணம் மாறி "உபாஸிக்கப்படும் தேவதையே நான்" என்ற எண்ணம் உண்டா கின்றது. இதை சாக்தத்தில் "சதுர்வித ஐக்கியானுஸந்தானம்" என்று சொல்லுவார்கள். இது மூன்று வகைப்படும். 1. ஸ்தூல உபாஸனை. இது ஸகுண ஸாகார தியானமாகும். இதுதான் நம் போன்ற சாமான்யர்களின் வழிபாடு. 2. ஸூக்ஷ்ம உபாஸனை. இது உபாஸ்ய தேவதையின் மந்த்ராத்மகமான எழுத்துக்களின் ஸ்வரூபமேயாகும். இதில் சிலர் ஸ்தூல உபாஸனையில் இருக்கும் தேவதா மூர்த்தியின் உருவத்துக்கு பதிலாக யந்த்ரத்தை வைத்துக் கொள்வார்கள். 3. பராரூப உபாஸனை. இது நிர்விகல்ப சைதன்ய மாத்ரமாய் அறியப்படும் சுத்த ஸத்வப்ரதான மனோவிருத்தி வடிவின தாகும்.

"தன்னந்தனி நின்றது தானறிய
இன்னம் ஒருவர்க்கிசைவிப்பதுவோ"

என்று அருணகிரியார் சொல்லும் நிலை. இது மனோவாசாமகோசர மானது. அத்விதீய ப்ரஹ்மாபின்ன ஆத்மஸ்வரூப சித்சக்தியேயாகும்.

आत्मलाभान्न परं विद्यते "ஆத்மலாபான் ந பரம் வித்யதே"

என்றபடி ஆத்மஸாக்ஷாத்காரத்துக்காகவே ஸகல நிகமாகமங்களும் பரமேச்வரனுல் உண்டாக்கப்பட்டன. இத்தகைய ஆத்மஸாக்ஷாத்காரத்தை சுலபமாய் மனிதன் அடைவதற்கு ஸாதனமாய் இருப்பது தான் "ஸ்ரீவித்யை" என்று வித்வான்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஏனைய சித்தாந்தங்களில் ப்ரஹ்மமே சிவனுகவோ, நாராயணனுகவோ, கணபதியாகவோ, முருகனுகவோ பரிணமிக்கின்றது என்று கருதப்படுகின்றது. ஆனுல் ஸ்ரீவித்யையில் மட்டும் ப்ரஹ்மமே பராசக்தி. அவளன்றி வேறென்றுமில்லை. ஆற்றலை அதை உடையவனின்றும் பிரிக்கமுடியாது. ப்ரஹ்மத்தின் அளப்பரிய ஆற்றலே சக்தி என்று அழைக்கப்படுகின்றது, என்ற உண்மையை போதிக்கின்றது. இதை பகவத்பாதாள் தமது ஸௌந்தர்யலஹரி 97வது சுலோகத்தில்,

गिरामाहुर्देवीं द्रुहिणगृहिणीमागमविदो
हरेः पत्नीं पद्मां हरसहचरीमद्रितनयाम् ।
तुरीया कापि त्वं दुरधिगमनिस्सीममहिमा
महामाया विश्वं भ्रमयसि परब्रह्ममहिषि ॥

கிராமாஹுர் தேவீம் த்ருஹிண க்ருஹிணீம் ஆகமவிதோ
ஹரே: பத்னீம் பத்மாம் ஹர ஸஹசரீம் அத்ரிதநயாம் ।
துரீயா காऽபி த்வம் துரதிகம நிஸ்ஸீம மஹிமா
மஹா மாயா விஸ்வம் ப்ரமயஸி பரப்ரஹ்ம மஹிஷி ॥

என்கின்றுர். வேதாகம ரஹஸ்யத்தை அறிந்தவர்களும் கூட தேவியின் ஸ்வரூபத்தை அறிய முடியாமல் அவளை ஸரஸ்வதீ என்றும், லக்ஷ்மீ என்றும் பார்வதீ என்றும் பலவாருகக் கூறுகின்றுர்கள். ஆனுல் பரதேவதையோ இத்தகையவள் என்று கூற முடியாதபடி, அடைதற்கரியவளாய் எல்லையில்லாதவளாய், ப்ரஹ்மத்தின் "மஹாமாயா" சக்தியாய் உலகத்தை ப்ரமிக்கச் செய்கின்றுள் என்பது தாற்பரியம். அதாவது மூன்று விதமாயுள்ள குணங்களும் ஸாம்யநிலையை அடைந்த மகாமாயையையே உபாதியாக உடைய ஸத்சித் ஆனந்த கனமான ப்ரஹ்மமே தேவி என்பதாகின்றது. இந்த துரீயதத்துவம் यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह "யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ" என்ற மஹிமையோடு கூடினது. ஆகையால் அம்பாளை "ஸர்வ சைதன்ய ஸ்வரூபா" என்று வித்வான்கள் வர்ணிக்கின்றுர்கள். அவளுடைய தத்வவிளக்கத்தை ஸ்ரீவித்யை என்றும் ப்ரஹ்மவித்யை

என்றும் கூறுகிருர்கள். மாயா ஸம்பந்தம் இல்லாத ப்ரஹ்மத்தை போதிக்கும் சாஸ்த்ரத்தை வேதாந்தமென்றும் மாயையையும் ப்ரஹ்மத்தையும் அபின்னமாக ஸம்பந்தப்படுத்தி போதிக்கும் சாஸ்த்ரத்தை சாக்த தந்த்ரம் என்றும் கூறுவார்கள். அதாவது ஆற்றலை தன்னுள் அடக்கியிருக்கும் நிலையில் ப்ரஹ்மம் என்றும், ஆற்றலை வெளிப்படுத்தும் நிலையில் சக்தியென்றும் கூறப்படுகின்றது. இரண்டும் ஒரே தத்துவம்தான். குழந்தை பிறந்த உடனே பெற்றோர்கள் "சபேசன்" என்று பெயரிட்டார்கள். அவன் டாக்டர் படிப்புப் படித்து பரீக்ஷையில் தேறினன். அப்போது அவனை டாக்டர் என்று கூறுகிறோம். அவனது மருத்துவ ஆற்றலை அவனிடமிருந்து பிரித்துப் பார்க்க முடியுமா? அதுபோலத் தான். ஆற்றலில்லாத ப்ரஹ்மம் "நிரர்த்த:" என்கின்றது சூத ஸம்ஹிதை. இந்த முறையில்தான் சாக்த சித்தாந்தத்தை இந்நூலில் விளக்க அடியேன் முயற்சி செய்திருக்கிறேன். இதை எழுத சென்னை ப்ரஹ்மஸ்ரீ ந. சுப்ரமண்ய அய்யர் இயற்றிய "ஸபர்யா பத்ததி வாஸனு" என்ற நூல் பெரிதும் உதவியாக இருந்தது. வித்வான்களும் உபாஸகர்களும் நூலின் குறைபாடுகளை க்ஷமித்து அங்கீகரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

கிழக்கே வங்காளக்குடாக்கடல் முதல் மேற்கே அரபிக்கடல் வரையிலும் தெற்கே கன்யாகுமரி முதல் வடக்கே ஹிமாசலம் வரையிலும் வித்வான்களாகிற ஸ்ரீ வித்யோபாசகர்கள் எங்கெங்கு இருக்கின்ருர்களோ அவர்கள் யாவருடைய பாத கமலங்களுக்கும் என் நமஸ்காரம் உரித்தாகுக. அடியேனுடைய முயற்சியை அங்கீகாரம் பண்ணி அதனை அச்சேற்ற முன்வந்த சிருங்கேரி ஜகத்குரு ஸநாதன தர்ம வித்யா ஸமிதிக்கும் அதன் காரியதர்சி குருபக்தசிரோமணி ஸ்ரீ V. வைத்யசுப்ரமண்யய்யர் அவர்கட்கும் என் தாழ்மையான வணக்கம் உரித்தாகுக. குறிப்பாய் இலஞ்சி வள்ளல் I. A சிதம்பரம் பிள்ளை அவர்கட்கும், சங்கர சேவா சமிதி காரியதர்சி K V. சுப்பரத்னம் அய்யர் அவர்கட்கும் ஸ்ரீ சங்கர க்ருபா ஆசிரியர் குருபக்தரத்னம் ப்ரஹ்மஸ்ரீ K. R. வெங்கடராமன் அவர்கட்கும், உதவி ஆசிரியர் வியாகரண சிரோமணி வேதாந்தவித்வான் ப்ரஹ்மஸ்ரீ K. S. வெங்கடராம சாஸ்திரிகள் அவர்கட்கும் என் மனங்கனிந்த நன்றி உரித்தாகும். அதிலும் ப்ரஹ்மஸ்ரீK. S. வெங்கடராம சாஸ்திரிகள் எடுத்துக்கொண்ட பிரயாசை சொல்லத்தரமல்ல. அன்னுர் ப்ரூஃப் பார்த்து பிழையறத் திருத்தி அதிவிரைவில் அச்சிட உதவி புரிந்திருக்கிருர்கள். அவர்கள் இந்த நூலை ஒரு பொருட்டாக

எண்ணி அங்கீகரித்ததே நான் செய்த பாக்யம். மேலே சொன்ன எல்லா நண்பர்களுக்கும் தேவியின் பரிபூர்ண கடாக்ஷம் என்றும் நிலவிவர வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். எனது கையெழுத்து பிரதியை பரிசோதித்துத் திருத்திக்கொடுத்த என் நண்பர் திண்டுக்கல் வக்கீல் ப்ரஹ்மஸ்ரீ S. சுந்தரமய்யர் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இதனை விரைவில் அச்சுவாஹன மேற்றி வெளியிட்ட ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ் ஸிண்டிகேட்டுக்கு என் நன்றி உரித்தாகுக.

யாவற்றிற்கும் மேலாக அடியேன் செய்த பாக்யம் சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ மஹாஸன்னிதானங்களின் ஆசியைப் பெற்றதுதான். 1958-ம் ஆண்டில் மஹாஸன்னிதானங்களை குற்றாலத்தில் தர்சிக்கும் வாய்ப்புக்கிட்டியது. அது என் பூர்வஜன்ம புண்யம் என்றே கருது கிறேன். நான்கு தினங்கள் அடியேனோடு ஸ்ரீ வித்யை பற்றி ஸம் பாஷித்தார்கள். அவர்களுடைய கடாக்ஷவீக்ஷண்யமே இந்த நூலை எழுத உறுதுணையாக இருந்தது. அவர்கள் அடியேன்மீது கொண்ட கருணைக்கு எல்லையே இல்லை. ஆகவே இந்நூலை சிருங்கேரி ஸம்ஸ் தானம், ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் பொன்னார் திருவடிக் கமலங்களில் என் அன்புக் காணிக்கையாக ஸமர்ப்பிக்கின்றேன். அவர்களும் இதனை ஏற்று அருள்வார்கள் என நம்புகிறேன்.

"நாயேனையு மிங்கொரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமகளே செங்கண்மால் திருதங்கைச்சியே".

—அபிராமி அந்தாதி 61

திண்டுக்கல்
10—10—66

இங்ஙனம்,
பெ. கா. ஷண்முகநாதன்.

பொருளடக்கம்

॥ श्रीः ॥

ஸ்ரீ வித்யா

முதலாவது அத்தியாயம்

உபோத்காதம்

ஸ்ரீவித்யை அல்லது சாக்ததர்சனம் என்பது நம் ஹிந்து சமயத்தில் அடங்கிய ஆறு மதங்களில் ஒன்று. பிரபஞ்சத்தின் சிருஷ்டி ஸ்திதி லய காரணமாக இருக்கும் பரம் பொருளைப் பெண்பாலாக வழிபடுவது இந்த சித்தாந்தம். வேதத்தில் இப்பொருளை ப்ரம்ஹம் என்றும், ஆத்மா என்றும், ஸத் என்றும் கூறப்பட்டிருக்கிறது. சைவம் சிவம் என்கின்றது. வைஷ்ணவம் ஸ்ரீமந் நாராயணன் என்கின்றது. விவிலியன் நூலில் பரமண்டலத்திலிருக்கும் எங்கள் பிதா என்கிறது. யூதர்கள் ஜிஹோவா என்கின்றனர். மகமதியர் அல்லா என்கின்றனர். நாம் அதை சக்தி, பராசக்தி, மஹாமாயா, லலிதா, திரிபுரசுந்தரி என்று அழைக்கின்றோம்.

சக்தி வழிபாடு மிகப்புராதனமானது. ஈஜிப்டு முதலிய அயல் நாடுகளிலும், பண்டைக்காலத்தில் இந்த வழிபாடு இருந்ததாக ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றார்கள். நம் நாட்டில் மொஹஞ்சதரோ, ஹரப்பா முதலியஇடங்களில் செய்யப்படும் புதைபொருள் ஆராய்ச்சியில் அந்த நாகரீகங்கள் பரவியிருந்த காலங்களில் சக்தி வழிபாடு இருந்ததாகத் தெரியவருகின்றது. இதன் தொன்மை இவ்வளவு என்று அளவிட முடியாது. மனிதனுடைய அறிவில் தன்னை ஈன்றெடுத்த தாயார் வணக்கத்துக்கு உரியவள் என்ற உணர்ச்சி என்று ஏற்பட்டதோ அன்றே இந்த வழிபாடும் ஆரம்பித்து விட்டது என்னலாம். பல நாடுகளிலும், பல மொழிகளிலும் உலகத்தைப் பெண்பாலாகக்கருதியே வந்திருக்கிறார்கள். கல்வி, செல்வம், ஆற்றல் முதலியவற்றையும் பெண்பால் பெயர்கள் வைத்தே அழைத்து வந்திருக்கின்றனர். பூமிதேவி, ஸரஸ்வதி, லக்ஷ்மி, துர்க்கை என்றெல்லாம் இருப்பதைப் பார்க்கிறோம். ப்ரக்ருதி அல்லது ஆங்கிலத்தில் கூறப்படும்

Nature பெண்பாலாகவே உள்ளது (**Virgin**) கன்னி என்று மேனாட்டினரும் கூறுகின்றனர். இந்த ஒரு விஷயத்தில் தொன்று தொட்டு எல்லா நாடுகளும் எல்லா மக்களும், எல்லா பாஷைகளும், முற்காலம் முதல் தற்காலம் வரை ஒரே மாதிரியாக இருப்பதுவே ஓர் ஆச்சரியமல்லவா!

ஆயினும் தற்காலத்தில் "சக்திவழிபாடு" என்பது ஏதோ ஒரு அநுசிதமான சம்பிரதாயம் என்று சிலரால் கருதப்படுகின்றது. இவ்வழி பாட்டின் உண்மையை அறியாததாலும், சில போலிகளின் அநாகரிக அனுஷ்டானங்களாலும் இவ்விதத் தவறுதலான அபிப்பிராயம் ஏற்பட்டு உள்ளது. வேதாகமங்களால் அங்கீகரிக்கப்பட்டதாயும், மிகப்பழமை வாய்ந்ததாயும், ஹயக்ரீவர், அகஸ்தியர், லோபாமுத்ரை, மன்மதன், துர்வாஸர், விச்வாமித்ரர், தத்தாத்ரேயர், பரசுராமர்போன்ற புராணபுருஷர் களாலும், ஸ்ரீசங்கரர், ஸ்ரீதரர், பாஸ்கரராயர், இராமகிருஷ்ணபரமஹம்ஸர், முத்துசாமி தீக்ஷிதர், அப்பயதீக்ஷிதர், அபிராமிபட்டர்போன்ற மஹான் களாலும் அவலம்பிக்கப்பட்டதாயுமுள்ள ஸ்ரீ வித்யா தர்சனத்துக்கு ஏன் இத்தகைய இழுக்கு வரவேண்டும்? அறியாமையே காரணம்.

இந்த அறியாமைக்கும் சில காரணங்கள் உள. முதலாவது சாக்த தந்த்ர சாஸ்த்ரங்கள் "குஹ்யாத் குஹ்யதரம்" அதாவது ரகசியத்திலும் அதிரகசியம் என்று இருப்பதால்தான். இந்தச் சீரிய சித்தாந்தம் குரு சிஷ்ய பரம்பரையிலேயே இதுகாறும் தொடர்ந்து வந்திருக்கின்றது. சாக்த வழிபாட்டுக்கே இந்த குரு பரம்பரா ஞானம் அவசியம். குலார்ணவ தந்த்ரத்தில்,

"அன்யாஸ்து ஸகலா வித்யா: ப்ரகடா கணிகா இவ।
இயந்து ஶாம்பவீ வித்யா குப்தா குலவதூரிவ ॥"

(अन्यास्तु सकला विद्याः प्रकटा गणिका इव ।
इयं तु शांभवी विद्या गुप्ता कुलवधूरिव ॥)

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது "ஏனைய வித்யைகள் வேசிகளைப்போல; ஸ்ரீ வித்யையானது குலஸ்திரீபோன்றது," என்று. இதையே பரசுராமகல்ப சூத்ரத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.

'வேச்யா இவ ப்ரகடா: வேதாதிவித்யா:, ஸர்வேஷு தர்சனேஷு குப்தேயம் வித்யா'

(वेश्या इव प्रकटा वेदादिविद्याः । सर्वेषु दर्शनेषु गुप्तेयं विद्या ।)

ஆகவே பரிபக்குவமில்லாத அதிகாரிகளுக்கு இதை உபதேசம் செய்யக்கூடாது அப்படிச்செய்தால் "ப்ராகட்யாத் நிரய:" என்றபடி நரகம் ஏற்படும். ஆகையால் இந்த வித்யையை "ஸ்வமாத்ரு ஜாரவத்" என்று அதிரஹஸ்யமாகக் காப்பாற்றவேண்டும்.

இரண்டாவதாக சில போலிகள் தங்களை சாக்தர்கள் என்று சொல்லிக்கொண்டு வெறும்வேஷம் போட்டுக்கொண்டு பஞ்சமகார ப்ரவ்ருத்தியில் ஈடுபட்டு ஜனங்களை மயக்கியும் ஏமாற்றியும் திரிவதால் இந்த தர்சனத்துக்கு அபகீர்த்தியை சம்பாதித்து விட்டனர். இவர்கள் க்ஷுத்ரதேவதைகளை உபாஸித்து அல்ப சித்திகளையடைந்து தாம் பெரிய ஞானிகள் போன்றும், தேவியின் ப்ரசாதம் பெற்றவர் என்றும் பறை சாற்றிக்கொண்டு திரிகின்றனர்.

மூன்றுவதாக சாக்த சித்தாந்தத்தைப்பற்றிய நூல்கள் யாவும் ஸம்ஸ்கிருதமொழியில் இருப்பதால் சாமான்ய மக்களுக்குக் கிடைப்ப தரிதாகிவிட்டது. இந்தக்குறை இக்காலத்தில் ஓரளவு நிவர்த்திக்கப்பட்டு வருகின்றது. "ஆர்தர் ஏவலன்" என்ற ஆங்கிலேய ஆசிரியர் அநேக சாக்த சாஸ்த்ரங்களை பிரசுரம் செய்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் நமக்கு அளித்திருக்கின்றார். சமீப காலத்தில் சித்தியான சிறந்த அநுபூதிமான் பிரஹ்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமண்ய அய்யர் என்பவர்கள் சில தந்த்ர நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து உதவியிருக்கிறார்கள். கும்பகோணம் வக்கீல் காலஞ்சென்ற G. V. கணேசய்யர் என்பவர் லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யம், ஸௌந்தர்யலஹரி பாஷ்யம் என்ற இரண்டு சிறந்த நூல்களைத் தமிழில் அளித்துள்ளார். இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த "அண்ணா" என்ற உரை ஆசிரியர் தேவீமாஹாத்மியம், ஸௌந்தர்யலஹரி, லலிதாஸஹஸ்ரநாமம்போன்ற நூல்களுக்குத் தமிழாக்கம் கொடுத்திருக்கின்றார். ஸம்ஸ்கிருதமொழிப்பயிற்சி சிறிதும் இல்லாதவர்களும் இந்நூல்களைப் படித்து பயனடையலாம்.

நான்காவதாக சில வைதிக அந்தணர்கள்கூட சாக்தம் "வேத பாஹ்யம்" என்று நிஷித்தமாய்ப் பேசுவதையும் கேட்கின்றோம். சாக்த ரஹஸ்யங்களையே அறியாத சில பண்டிதர்கள் சாக்த நூல்களுக்கு உரை எழுதத்துணிந்து மக்களை சந்தேகத்தில் இழுத்து விடுகிறார்கள். ஷண் மதங்கள் என்று சொல்லப்பட்ட சைவம், சாக்தம், வைஷ்ணவம், கௌமாரம், காணபத்யம், ஸௌரம் என்ற ஆறு சமயங்களுமே இறைவனாலேயே, ஆன்மாக்களின் விகாஸத்துக்கும், அதிகாரி பேதத் துக்கும் தகுந்தபடி தோற்றுவிக்கப்பட்டன.

"ஸர்வதர்சனநிந்தா" सर्वदर्शनानिन्दा

என்று பரசுராம கல்பஸூத்ரத்தில் கூறியிருப்பதுபோல எந்த சமயத்தை யும் நிந்தனை செய்வது பெரிய அபசாரமேயாகும். பகவான் கீதையில் பல இடங்களில் இதனை வலியுறுத்துகின்றார்.

"ந புத்திபேதம் ஜனயேத் அக்ஞானும் கர்மஸங்கினும். (3. 26).

न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसंगिनाम्

அறிவுடையோன் கர்மத்தில் பற்றுடைய அஞ்ஞானிகளுக்கு புத்திபேதம் விளைவிக்கக்கூடாது. எல்லா சமயங்களிலும் உள்ள கடவுள் ஒருவரே. சகல சாஸ்த்ரங்களாலும் பிரகடனப்படுத்தப்படும் இறைவன் ஒருவனே.

"வேதைச்ச ஸர்வை: அஹமேவ வேத்ய: (கீதை 15. 15.)

वेदैश्च सर्वैरहमेव वेद्यः

என்று பகவான் உபதேசிக்கின்றார். மேலும், கீதை 4ம் அத்தியாயம் 11-வது சுலோகத்தில் "யாவர் என்னை எவ்விதமாய் உபாஸிக்கின்றார் களோ அவர்களை அவ்விதமே நான் அநுக்ரஹிக்கின்றேன். மனிதர் யாங்கணும் என்னையே வழிபடுகிறார்கள்" என்றும் 7ம் அத்தியாயம் 21வது சுலோகத்தில் "எந்த எந்த பக்தன் நம்பிக்கையுடன் எந்த எந்த வடிவத்தை வழிபட விரும்புகிறானோ, அவனவனுடைய அசையாத சிரத்தைக்குத் தக்கபடி அந்த அந்த வடிவத்தை நானே மேற்கொள் கிறேன்" என்றும் கூறுகின்றார். இதைவிட ஸர்வ சமய ஸமரஸம்

கூறமுடியுமா ? இந்த சாக்கியங்களில் புறப்புறச் சமயங்களாகிற இஸ்லாம், கிருஸ்தவம், பௌத்தம், க்ஷமணம், எல்லாம்கூட அடங்குமே.

ஆதிசங்கரர் அத்வைதக்கொள்கையை ஐயம் திரிபுஅற ஸ்தாபித்து நிர்குண ப்ரஹ்மமே ஸத்யம் என்ற பேருண்மையை நிலைநாட்டினாலும் சாதாரண மக்கள் அதனைப்பின்பற்றி அனுபவத்துக்குக் கொண்டுவர முடியாது என்பதை உணர்ந்தவராய் ஷண்மதஸ்தாபனம் செய்து ஒவ்வொரு மூர்த்திக்கும் வேதபரமாகவும், ஆகமபரமாகவும் அநேக ஸ்தோத்திரங்களை நமக்கு அருளிச்செய்திருக்கின்றார். அவற்றில் “ஸௌந்தர்யலஹரி” தலைசிறந்த கிரந்தம். இது சாக்தத்தின் பிரஸ்தானத்ரயத்தில் ஒன்றாகவே கருதப்படுகின்றது.

ஆக இதுவரை உபோத்காதமாகக் கூறியதிலிருந்து நாம் அறிய வேண்டியது என்ன ? சாக்தம் என்பது ஷண்மதங்களில் ஒன்று. அது வேதபாஹ்யம் அல்ல. அதைப்பற்றிய தப்பு அபிப்பிராயங்கள் அறியாமையால் ஏற்பட்டவை. சிறந்த ரிஷிகளாலும், மஹான்களாலும் கையாளப்பட்ட, அது மிகரஹஸ்யமானது. குருசிஷ்ய பரம்பரையாகவே உபதேசிக்கப்பட்டு அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றது. அவ்வாறு தான் இருக்கவும் வேண்டும் என்பது நியதி.

சாக்த சித்தாந்தத்தின் சிறப்பு

உலகில் நாம் பல வஸ்துக்களைப் பார்க்கின்றோம். அவைகளில் சிலவற்றின்மீது விருப்பம் அல்லது பிரியம் ஏற்படுகின்றது. சிலவற்றின் மீது வெறுப்பு ஏற்படுகின்றது. இன்னும் சிலவற்றின்மீது இரண்டும் ஏற்படாமல் அலக்ஷியமாய் இருந்துவிடுகின்றோம். இவற்றை முறையே அபேக்ஷை, வியபேக்ஷை, உபேக்ஷை என்று கூறலாம். நமது சுகத் துக்கும் இன்பத்துக்கும் அனுகூலமான பொருள்களின் மீது பிரியம் அல்லது அபேக்ஷை ஏற்படுகின்றது. அழகான பொருள்கள் மண முள்ள புஷ்பங்கள் சிறந்த காவியங்கள், ஓவியங்கள், ருசியான போஜன வகைகள் இந்த ரகத்தைச் சேர்ந்தவை. பொதுவாக இவை கூறப் பட்டன. சிலருக்கு சங்கீதம் பிடிக்காது, சிலருக்கு இனிப்பு பிடிக்காது, இவ்வாறு ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று பிடிக்காது.

ஏனெனில் அது கர்மானுசாரமான பின்னருசி என்றுதான் கூற வேண்டும். யாவரும் ஒரே வஸ்துவை ஒரே தரத்தில் விரும்புவதும் இல்லை, வெறுப்பதும் இல்லை. தனக்குத் துன்பத்தையோ பீதியையோ கொடுக்கும் வஸ்துக்களைக் கண்டால் அவற்றின்மீது வெறுப்பு ஏற்படுகின்றது. பாம்பு, தேள், புலி, பகைவன் முதலியவற்றின்மீது வெறுப்பு ஏற்படுகின்றது. இவை இரண்டுமல்லாதனவும் யாதொரு பயனும் அளிக்காதனவுமான உடைந்த ஓடுகள், மண்புழுதி, கந்தல் போன்றவற்றில் நாம் அலக்ஷியமாய் இருந்துவிடுகிறோம்.

இதுபோன்று நம்முடைய அனுபவத்தில் முன்பின்பாராத யாரையாவது பார்த்தமாத்திரத்தில் நம்மையும் அறியாமலே இம்மூன்று உணர்ச்சிகளில் ஏதாவது ஒன்று ஏற்படுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இது ஏன் என்று நம்மால் கூறவும் முடியாது. இதையும் பூர்வஜன்ம வாஸனை என்றுதான் கூறமுடியும். இந்த மூன்றும் நாம் மனதாலும், இந்திரியங்களாலும் கிரஹிக்கும் பாஹ்யவஸ்துக்கள் மீது உண்டாகும் உணர்ச்சிகள், ஆனால் நாம் பார்க்காததும், அறியாததும், அனுமானப் பிரமாணத்தாலேயே அது இருப்பதாக முடிவுகட்டக்கூடியதுமான நம்முள் இருக்கும் ஆன்மா மீது நமக்கு இருக்கும் உணர்ச்சியை இம்மூன்றில் எதென்பது ? நிச்சயமாக வெறுப்பும் இல்லை அலக்ஷியமும் இல்லை. தற்கொலை செய்து கொள்கிறவன்கூட அச்செய்கையால் தன் உயிருக்கு ஏதோ நன்மை ஏற்படும் என்றோ அல்லது தனக்கு ஏற்பட்ட இன்னலை நிவர்த்தி செய்து கொள்ளலாமென்றோதான் தற்கொலைக்குத் துணிகின்றான். பாஹ்யவஸ்துக்களின்மீது நமக்கு ஏற்படும் பிரியத்தைக் காட்டிலும் நமது ஆன்மாவின்மீது நமக்கு இருக்கும் பிரியத்தை பிரியதமம் என்றுகூடக் கூறலாம். நமக்குப் பிரியமான வஸ்துக்கள் எல்லாவற்றையும்விட பரமபிரியமான வஸ்து ஆன்மாதான். நாம் நமது ஆன்மாமீது கொண்ட இந்த அத்யந்த பிரியத்தால்தான் பாஹ்யவஸ்துக்களின்மீது அபேக்ஷையோ, வியபேக்ஷையோ உபேக்ஷையோ உண்டாகின்றது. அதனால்தான் பிருஹதாரண்ய உபநிஷத்

"ஆத்மனஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி"

(आत्मनस्तु कामाय सर्वं प्रियं भवति)

என்று அறுதியிட்டுக் கூறுகின்றது. நமக்குப்பிரியமான வஸ்துக்களை யடைய எவ்வளவு முயற்சி எடுத்துக்கொள்கின்றோம் ? அதுபோல நமக்குப்பிரியதமமான வஸ்துவாகின்ற ஆன்மாவை அறியவும் அடைய வும் அதிகமான முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டாமா ? ஆன்மாவை அறிவதையும் அடைவதையும்விட நமக்கு ஆனந்தம் தரும் வேறு காரியம் இல்லவேயில்லை. இதை சுருதி,

"ஆத்மலாபாந் ந பரம் வித்யதே"

(आत्मलाभात् न परं विद्यते)

என்கின்றது. ஆன்மசாக்ஷாத்காரத்தை அடைவதுதான் பரம புருஷார்த்தம். அதனாலேயே மனிதன் "இன்பமே எந்நாளும் துன்ப மில்லை" என்ற பேரானந்தப் பெருவாழ்வையடைகின்றான்.

"தரதி சோகம் ஆத்மவித்"

(तरति शोकमात्मवित्)

என்கின்றது சுருதி. ஆன்மஞானி சோகக்கடலைத் தாண்டிவிடுகிறான். சோகக்கடல் என்பது லௌகிக துக்கங்கள் மட்டும் அல்ல. திரும்பத் திரும்பப் பிறந்தும் இறந்தும் படும் பவஸாகரம் என்ற துக்கம். இந்தப் பேரின்ப வாழ்வை அளிக்கும் வித்யைக்கு ப்ரஹ்ம வித்யை என்று பெயர்.

"பிரஹ்ம வித்யைவ ஸ்ரீ வித்யேதி ப்ரதிபாதிதம்"

(ब्रह्मविद्यैव श्रीविद्येति प्रतिपादितम्)

என்ற திரிபுரோபநிஷத் வாக்யப்படி ஸ்ரீவித்யையே பிரம்ஹ வித்யை யாகும். சங்கர பகவத் பாதாள் தமது ஸ்ரீதேவீ வேதபாதஸ்தவம் 77-வது சுலோகத்தில் "மஹேச்வரியாகிய பரதேவதை தமது ஆத்ம சொரூபமே என்பதை அறியாமல், ஐயோ பாவம் ! ஜனங்கள் ஆத்ம ஹத்தி செய்கின்றவராய் நரகத்தில் விழுகின்றனர் !" என்று அங்கலாய்த்திருக்கிறார். ஆக பிரஹ்ம சாக்ஷாத்காரத்தை அத்விதீயமாக அனுபவிக்க ஸ்ரீ வித்யையே சிறந்த சாதனமாகும். அதனால்தான் இது மற்றெல்லா சாதனங்களை விட மிக சிரேஷ்டமாகக் கருதப்படுகின்றது.

ஸ்ரீ வித்யையை அறிந்தவனே வித்வான் என்ற சொல்லுக்குப் பொருளாவான் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

லலிதா திரிசதீ பலசுருதி 24, 25, 26 சுலோகங்களில் கூறியிருக்கிறபடி "பஞ்சதசாக்ஷரி என்ற காதி வித்யையானது யார் ஒருவருக்குப் புனர் ஜன்மம் கிடையாதோ அவராலும் அல்லது யார் ஸ்வயமாகவே சங்கர ஸ்வரூபமாக இருக்கிறாரோ அவராலுமேதான் அடைய முடியும். இவ்விதம் மந்த்ர சாஸ்த்ரங்களில் ஸ்ரீ வித்யையின் மஹிமை பலவிதமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ வித்யையால் மோக்ஷப் பிராப்தி ஏற்படுகிறது என்பதில் சந்தேகமே கிடையாது. சில்பம் முதலிய கலைகளை அறிந்தவனை வித்வான் என்று சொல்லுவதில்லை. வித்யை என்பது மோக்ஷத்துக்கு ஸாதனமாக இருக்கவேண்டும். அதுவே ஸ்ரீ வித்யை என்பதில் ஸந்தேகமில்லை" என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஸூதஸம்ஹிதையிலும் சாக்த உபாஸனையைப்பற்றி வெகுவாக சிலாகித்துக் கூறப்பட்டிருக்கின்றது. சக்தி உபாஸனையால் ஸாதகன் அடையமுடியாத வஸ்துவே இல்லை. அது ஐஹிக ஆமுஷ்மிக பலன்களை எளிதில் தரக்கூடியது என்பதை மஹாகவி காளிதாஸன் தனது சியாமளா தண்டகத்தில் கூறியிருக்கின்றார்.

"கிம் ந ஸித்த்யேத் வபு: ச்யாமளம் கோமளம் சந்த்ரசூடான்விதம் தாவகம் த்யாயத:"

(किं न सिध्येत् वपुः श्यामलं कोमलं चन्द्रचूडान्वितं तावकं ध्यायतः)

அதாவது அதிகோமளமும் சியாமளமும் சந்த்ரகலை அணிந்ததுமான உன் உருவை எவன் தியானிக்கின்றானோ அவனுக்கு எந்த ஸித்திதான் சாத்தியமாகாது? என்று கேட்கின்றார். ஆகவே உலகில் ஜன்மா எடுத்த ஒவ்வொருவரும் இகபர சுகங்களையடைய தேவீ வழிபாட்டைச் செய்வது அவசியமாகின்றது.

இரண்டாவது அத்தியாயம்

பராசக்தியும் பிரஹ்மமும்

வேதங்களில் பிரஸ்தாபிக்கப்படும் ப்ரஹ்மமும் சாக்தத்தில் வழிபடப் படும் தேவியும் வேறல்ல. ஒரே வஸ்துவின் இரண்டு உருவங்களே யாகும். இந்த அகண்ட பிரபஞ்சத்தைப் பார்க்கும் தோறும் இதற்கு மூலகாரணம் ஒன்று இருக்கவேண்டும் என்று நாம் அனுமானிக்கலாம். ஒன்றுமில்லாத சூன்யத்திலிருந்து யாதும் தோன்றியிருக்கமுடியாது. சில சித்தாந்த சாஸ்த்ரங்களில் கூறப்படும் "பாழ்" என்ற பதத்துக்கு சூன்யம் என்று பொருள் அல்ல. சொல்லும் பொருளும் பாழான அல்லது அற்ற இடம் என்றுதான் பொருள். இந்த மூலகாரணம் எது? அது எத்தகையது? என்ற சர்ச்சைகளை மக்களுக்கு அறிவு தோன்றியது முதல் ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். பல காலங்களில், பல நாடுகளில் பல அறிஞர்கள் பல முடிவுகளுக்கு வந்திருக்கின்றனர். ஆயினும் மூல காரணம் ஒன்று உண்டு என்பதில் அவர்களுக்குள் அபிப்பிராய பேதமே கிடையாது. இருப்பது ஒரே வஸ்துதான்; ஆனால் அதற்குப் பல பெயரிட்டு வழங்கிவந்திருக்கின்றனர்.

"ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி"

(एकं सत् विप्रा बहुधा वदन्ति)

என்று வேதம் கூறுவதுபோல, இருப்பது ஒரே பொருளாயினும் அறிஞர்கள் பல பெயரிட்டு வழங்குகின்றனர். வேதம் அதை 'பிரம்ஹம்' என்றும் 'ஸத்' என்றும் 'ஆத்மா' என்றும் மூன்று சொற்களால் குறிக் கின்றது. அதன் லக்ஷணத்தை வேதம் கூற முயற்சிக்கின்றது.

"யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ"

(यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह)

என்று தைத்திரீய உபநிஷத் கூறிவிட்டு

"யதோ வா இமானி பூதானி ஜாயந்தே। யேந ஜாதானி ஜீவந்தி। யத் ப்ரயந்தி அபிஸம்விசந்தி। தத் விஜிக்ஞாஸஸ்வ। தத் ப்ரம்ஹேதி।

(यतो वा इमानि भूतानि जायन्ते। येन जातानि जीवन्ति। यत्प्रयन्त्यभिसंविशन्ति। तद्विजिज्ञासस्व। तद्ब्रह्मेति)

அதாவது "நாம் பார்க்கும் ஸகல பூதங்களும் எதினின்று தோன்றினவோ, தோன்றின அவையெல்லாம் எதனுல் ஜீவித்து இருக்கின்றனவோ, பின்பு அழிவு காலத்தில் எதனிடம் சென்று லயமடைகின்றனவோ அதுவே பிரஹ்மம், அதையே அறிய இச்சை கொள்க" என்று பொருள். முண்டகோபநிஷத்தில் அங்கிரஸ் என்பவர் சௌனகருக்குக் கூறியதாக பரதத்வ லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

"யத் தத் அத்ரேச்யம், அக்ராஹ்யம், அகோத்ரம், அவர்ணம், அசக்ஷு:ச்ரோத்ரம், ததபாணிபாதம் 1 நித்யம், விபும் ஸர்வகதம், ஸுஸூக்ஷ்மம், ததவ்யயம், யத் பூதயோநிம், பரிபச்யந்தி தீரா:"

(यत्तदद्रेश्यमग्राह्यमगोत्रमवर्णमचक्षुश्श्रोत्रं तदपाणिपादं। नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मं तदव्ययं यद्भूतयोनिं परिपश्यन्ति धीराः)

அதாவது "ஞானேந்திரியங்களால் பார்க்கப்படாததாயும், கர்மேந்திரியங்களால் எட்டமுடியாததாயும், கோத்ரம். அல்லது மூலம் இல்லாததாயும், வர்ணம் அல்லது குணமில்லாததாயும், கண் காதுபோன்ற ஞானேந்திரியங்களற்றதாயும், கைகால்போன்ற கர்மேந்திரியங்களற்றதாயும், நித்திய வஸ்துவாயும், நாநாவித தோற்றமளிக்கும் விபுவாயும், எங்கும் நிறைந்ததாயும், அதிஸூக்ஷ்மமானதாயும், நாசமற்றதாயும், எல்லா பூதங்களுக்கும் பிறப்பிடமாயும் இருப்பதாக அறிஞர்கள் அதனைப் பார்க்கிறார்கள்" என்று.

இந்த ப்ரஹ்மத்தை சைவசித்தாந்தம் சிவம் என்று குறிக்கின்றது. ஆதித்தமிழன் "கந்தழி" என்று அழகாகக் கூறினன். கந்து + அழி கட்டற்றவன். கட்டில்லாதவன், என்று பொருள். ஆக பிரபஞ்ச மூலகாரண வஸ்து பரத்வ நிலையில் நாமரூப ரஹிதமாய், குணங்குறியற்றதாய், சொரூபவிச்ராந்தியாய், உபாதி ரஹிதமாய், தான் ஒன்றிலும் பற்றிக்கொள்ளாமல் ஸர்வசாக்ஷியாய், யாவற்றிற்கும் ஆதியாய், தனக்கு ஆதியில்லாததாய், நிருபாதிக ஸம்வித்ரூபமாய் இருக்கும். இதை 'ஸத்'

என்ற பதத்தால் உபநிஷதங்கள் குறிப்பிடுகின்றன. அதுவே முதலில் இருந்தது.

"ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" (सदेव सोम्येदमग्र आसीत्)

அதாவது "ஸத் என்பதே முதன் முதலில் இருந்தது. அல்லது முதன் முதலில் யாவும் ஸத்தாகவேயிருந்தது".

இவ்வாறு நாமரூப ரஹிதமான நிர்குண "ஸத்"திலிருந்து இந்த நாமரூப பிரபஞ்சம் எப்படி உண்டாயிற்று ? சாமான்னிய மக்களாகிய நாம் ஏதாவது ஒன்றைச் செய்யவேண்டுமானுல் அதைச்செய்வதற்கு ஆற்றல் அல்லது சக்தி தேவைப்படுகின்றது. மனிதனுடைய ஆற்றலைக் கொண்டுதான் அவனவனுக்குப் பெயரும் இடுகின்றோம். மருத்துவ சிகிச்சையென்ற ஆற்றல் உடையவனை வைத்தியன் என்று கூறு கின்றோம். மண்பாண்டம் செய்யும் ஆற்றல் உடையவனைக் குயவன் என்கின்றோம். பிள்ளைகளுக்கு வித்யாப்பியாஸம் செய்ய ஆற்ற லுடையவனை உபாத்தியாயர் என்கின்றோம். ஒவ்வொருவருக்கும் இந்த ஆற்றல் அவனுள் அடங்கிக் கிடக்கின்றது. அந்த ஆற்றலை அவனின் றும் பிரிக்கமுடியாது. தனது ஆற்றலை செயல்படுத்த சந்தர்ப்பம் வாய்க் கும்போதுதான் அந்த ஆற்றல் வெளிப்படுகின்றது. மரவேலை செய்ய ஆற்றல் உடையவனைத் தச்சன் என்கின்றோம். ஆனுல் அவனுக்கு வேலையில்லாதபோது அவ்வாற்றல் அவனுள் ஒடுங்கிக்கிடக்கின்றது. யாராவது ஒருவர் தச்சனிடம் ஓர் நாற்காலி செய்யச்சொன்னுல் உடனே அத்தச்சன் அதற்கு வேண்டிய உபகரணங்களை சேகரித்து நாற்காலி செய்கின்ருன். அப்போதுதான் அவ்வாற்றல் வெளிப்படுகின்றது. அப்பொழுது அவன் தன்னிலும் வேருன நாற்காலி என்ற பொருளை சிருஷ்டிக்கிருன்.

அதேபோல நிற்குணமான பிரம்ஹத்தினிடம் அதன் ஆற்றல் ஒன்றியிருக்கின்றது. அது அக்னியில் சூடுபோல அபின்னமாய், அத்விதீயமாய் ஒடுங்கிக்கிடக்கின்றது. இந்த ஆற்றலைத்தான் சக்தி யென்று கூறுகின்றோம். இந்த சக்தியின் அதிஷ்டானத்தினுலேயே நிஷ்கள பிரம்ஹம் சிருஷ்டி உன்முகமாகி தொழிற்படுகின்றது. இதை சாந்தோக்ய உபநிஷத்,

"தைதக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி"

(तदैक्षत बहु स्यां प्रजायेयेति)

என்று கூறுகின்றது. அதாவது இந்த நிர்க்குண பிரம்ஹ வஸ்து "நான் பலவாக விரிவேன்" என்று சங்கல்பித்தது. நிர்குண, நிஷ்கள, உபாதிரஹித, நாமரூபமற்ற சுத்த சைதன்யமான பிரம்ஹத்துக்கு "நான்" என்ற உணர்ச்சி அல்லது "பாவம்" ஏற்படக் காரணம் இல்லை. இந்த நான் என்ற உணர்ச்சியானது பிரம்ஹத்துக்கு அதனுள் அபின்னமாய் ஒடுங்கிக் கிடக்கும் சக்தியினுலேயே உண்டாகின்றது. பிரம்ஹம் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல. ஆனுல் அதனுள் ஒன்றியிருக்கும் சக்தியைப் பெண்பாலாகக் கூறுவதால் சிவத்தை ஆண்பாலாகக் கூறுவது உபசார வழக்கு. ஆகவே பிரம்ஹத்தைத் தொழிற்படுத்தும் சக்தியை "அஹந்தா ரூபிணி" என்றும், "பராஹந்தா" என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதாவது சிவத்துக்கு நான் என்ற பாவத்தை உண்டாக்கியவள். சங்கரரும்

"புரமதிது: ஆஹோபுருஷிகா" (पुरमथितुराहोपुरुषिका)

என்ருர். அதாவது "த்ரிபுராந்தகனுன பரமசிவனுடைய அஹங்கார ரூபிணி" என்பது பொருள். ப்ரம்ஹத்தின் அங்குராவஸ்தையையே சக்தி என்று ஸூதஸம்ஹிதையும் கூறுகின்றது. ஆக ஒரே வஸ்து ஒடுக்கத்தில் பிரம்ஹம் அல்லது சிவம் என்றும் விரிவில் சக்தியென்றும் கூறுகிருேம். பிரம்ஹத்தின் பிரகாசாம்சம் அல்லது ஸ்வஸ்வரூபத்தின் விமர்சாம்சம் அல்லது விரிவடைந்த அவஸ்தையே சக்தியாகும். இரண்டும் வேறல்ல. ஒரே பொருளின் இரண்டு பரிணுமங்கள். அக்னியென்றும் சூடு என்றும் பிரித்துச் சொன்னுலும் உண்மையில் அவை இரண்டும் ஒரே வஸ்துவின் இரண்டு பாவங்கள். சக்தியின் அதிஷ்டானத்தால் பிரம்ஹத்தில் ஓர் ஸூக்ஷ்ம ஸ்பந்தனம் அல்லது அசைவு, துடிப்பு (**Vibration**) ஏற்படுகின்றது. எப்பொழுது அசைவு இருக்கின்றதோ அப்பொழுது நாதம் அல்லது ஓசையும் உண்டாகித் தீரவேண்டும். **Motion and Sound are co-relative** என்பது தற்கால விக்ஞானம். இந்த ஸ்பந்த சப்தங்களே பிந்து நாதம் என்றும், பிரணவம் என்றும் கூறுகிருேம். இதுவே முதல் ஸ்புரணம்,

சக்தியில்லாத பிரம்ஹத்தை நாம் அனுஸந்தானம்பண்ண முடியுமா? அத்தகைய ஆற்றலற்ற வஸ்துவை ப்ரம்ஹம் என்றுதான் கூறமுடியுமா? அளப்பரிய பிரபஞ்சத்தின் மூலகாரண வஸ்துவை ஆற்றலற்றது என்று கூறலாமா? ஆகவே சக்தியற்ற சிவம் "நிரர்த்தக:" என்கின்றது ஸூதஸம்ஹிதை.

"ஜகத் காரணமாபன்ன: ஶிவோ யோ முநிஸத்தமா: I
ஸா தஸ்யாபி பவேத் ஶக்திஸ்தயா ஹீநோ நிரர்தக: II 4-13-4.

(जगत्कारणमापन्नः शिवो यो मुनिसत्तमाः ।
सा तस्यापि भवेत् शक्तिस्तया हीनो निरर्थकः ॥)

அதாவது ஹே முனிசிரேஷ்டர்களே! ஜகத்துக்குக் காரணத் தன்மையையடையும் சிவம் எவரோ அவருடைய சக்தியாக அவள் ஆகின்ருள். அவள் இல்லாவிடில் அவர் பிரயோஜனமற்றவராகிருர்" என்று. இதை சங்கரர் தமது ஸௌந்தர்யலஹரியில்

சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்
ந சேதேவம் தேவோ ந கலு குசல: ஸ்பந்திதுமபி I

(शिवः शक्त्या युक्तो यदि भवति शक्तः प्रभवितुम्
न चेदेवं देवो न खलु कुशलः स्पन्दितुमपि ।)

என்கின்ருர். அதாவது "மங்களமூர்த்தியான மஹாதேவன் பராசக்தியாகிய உன்னுடன் கூடியவராக இருந்தால் மட்டுமே பிரபஞ்சத்தை ஆக்கி அளித்துத் துடைக்கும் காரியங்களைச் செய்யத் திறமையுடையவராவார். அவ்வாறு கூடியிராவிடிலோ அவர் அசைவதற்குக் கூட சாமர்த்தியமுடையவர் ஆகமாட்டாரல்லவா?" என்று பொருள்.

ஸூதஸம்ஹிதை 4வது யக்ஞவைபவ கண்டம் 13வது அத்யாயம் 4 முதல் 30 சுலோகங்கள் முடிய சக்தியின் பிராதான்யம் கூறப்பட்டிருக்கின்றது. அந்த அத்தியாயத்தின் 2, 3 சுலோகங்களுக்கு பகவான் ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் எழுதிய தாத்பர்யதீபிகை என்ற வியாக்யானத்தில் கூறியுள்ளதை அப்படியே மொழிபெயர்த்துத் தருகிறோம்,

"போக்த்ரு போக்யரூபமாயுள்ள பிரபஞ்சத்தின் சிருஷ்டிக்கு முன் ஒழிவடைந்த அவஸ்தையில், விகல்பத்துக்குக் காரணமில்லாமையால், பரசிவஸ்வரூபம் நிர்விகல்பமாகவும், தன்னிடமேயுள்ளதாயுமிருக்கிறது. அதன் ஸ்வரூபத்தில் அத்யஸ்தமான மாயையும் விகல்பமின்றி நிலை பெற்றிருக்கிறது. அம்மாயையும் பிராணிகளின் கர்ம பரிபாகத்தால் கொஞ்சம் மாறுதலடையும்பொழுது, அச்சமயத்தில் சக்திவேறு சிவன் வேறு என்ற பிரிவு இல்லாதபடியால், சின்மாத்திரத்தையே ஆசிரயித்த தாய் இருக்கிறது. சின்மாத்திரரூபமாயுள்ள பரசிவமும் அம்மாயா சம்பந்தத்தால் தன் நிலையை விட்டு அதற்கு எதிர்முகப்படுகின்றது. அப்பொழுது சிவசக்தி உபயரூப ஸாதாரணமான சின்மாத்திரத்தை ஆசிரயித்த அம்மாயை இரண்டாக ஆகிருள். ஸம்பந்தப்படும் வஸ்துவுடன் அதீன நிருபண விஷயரூபியாகவும் அதீன நிருபணமற்ற விஷய ரூபியாகவும் ஆகின்ருள். இவ்விதம் உபாதி இரண்டால் சின்மாத்ரமும் இரண்டாகப் பிரிவடைகின்றது. அதீன நிருபணமாயை "சக்தி" என்று சொல்லப்படுகிறது. காற்று ஜலசம்பந்தத்தால் விதை முளையாவது போல பிராணிகளின் கர்மவசத்தால் ஜகத்காரிய ஹேதுபூதமான மாயையின் அங்குராவஸ்தை 'சக்தி'யென்று சொல்லப்படுகின்றது. அதீன நிருபணமற்ற மாயையின் ஆகாரத்தால் உபஹிதமான சைதன்யம் சிவம் என்று சொல்லப்படுகின்றது. ஜகத் அங்குரரூபியாகிற சக்தியால் அவச்சின்னமான சைதன்யத்தின் ஸம்வித் (ஞான)ரூபம் எதுவோ அதற்குப் பராசக்தியென்று பெயர். ஆகையால் உபாதி பேதத்தால் மட்டுமே சின்மாத்திரம் ஒன்றிற்கே சிவ,சக்தி பேதம், பாரமார்த்திக சின்மாத்திரம் ஒன்றே" என்கின்ருர். இவ்வாறு சிவசக்தி அபேதம் கூறப்பட்டது.

இனி "நாநாஜீவவாதக் கட்டளை" என்ற ஓர் பழய வேதாந்த நூலிலிருந்து சில வாக்கியங்களைப் பெயர்த்து எழுதுகிருேம். இந்நூல் எந்தக்காலத்தில் யாரால் செய்யப்பட்டது என்று அறிய இயலவில்லை. ஆனுல் வேதாந்த சாஸ்த்ர விசாரம் செய்கின்றவர்கள் இந்நூலையே முதலில் பார்க்கிருர்கள்.

"சுத்தப்பிரம்ஹமாயிருக்கின்ற ஸர்வசாக்ஷியினிடத்திலே அக்கினியில் சூடுபோல அபின்னமான ஒரு சக்தியுண்டு. அந்த சக்தி அவ்வதீத

பிரம்ஹத்தில் அடங்கியிருக்கும்போது அதற்கு சுத்த பிரம்ஹம் என்று பெயர். இந்த சக்தி விஜ்ரும்பித்துச் சுத்த பிரம்ஹத்தை வியாபிக்கும் போது (அதாவது ஆற்றல் வெளிப்படும்போது) அப்பிரம்ஹம் பரையின் வியாபகத்துக்குள் இருந்தபடியாலே அதற்கு பரப்ரம்ஹம் என்று பெயர். இலக்ஷண சூன்யமாயிருக்கின்ற இந்த சக்திக்கு பிரம்ஹத்தினுடைய சந்நிதானத்தில் புருஷ சமுகத்திலே ஸ்திரீக்கு இன்பம் ஜனித்தாற்போல அவிக்ருத சத்வரஜஸ்தமோ குணங்கள் உண்டாயின. இவற்றில் சுத்த ஸத்துவத்திற்கு ஆனந்தரூப சக்தி என்று பெயர். சுத்த ரஜஸிற்கு சித்ரூப சக்தி என்று பெயர். சுத்த தமஸிற்கு ஸத்ரூப சக்தி என்று பெயர். இவற்றில் ஆனந்தரூப சக்தியுடனே பரப்ரம்ஹம் கூடி ஸர்வா னந்தமென்னும் சுஷுப்தி அவஸ்தையை அடைகின்றபோது பரப்ரம்ஹம் என்கின்ற பெயர்போய் பரமானந்தர் என்ற பெயர் வந்தது. இந்த பரமானந்தர் இராஜஸ சித்ரூப சக்தியுடன்கூடி ஸர்வப்ரகாசமென்னும் ஸ்வப்னுவஸ்தையையடைகின்றபோது பரமானந்தர் என்னும் பெயர் போய் தேஜோமயர் என்ற பெயர் வந்தது. இந்த தேஜோமயர் தாமஸ ஸத்ரூப சக்தியுடன்கூடி ஸர்வ வியாபகமென்னும் ஜாகராவஸ்தையை அடையும்போது தேஜோமயர் என்ற பெயர்போய் பரிபூரணர் என்ற பெயர் வந்தது.

இந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிரம்ஹத்தினிடம் சிப்பியில் வெள்ளிபோல மூலபிரகிருதி என்னும் ஓர் சக்தியுண்டு. இம் மூலபிரகிருதியும் முக்குணமாயிருக்கும். இந்த மூலப்ரகிருதியின் சத்வ குணமே மாயை என்றும், சர்வக்ஞ உபாதியென்றும் குடிலையென்றும் ஈச்வரகாரண சரீரம் என்றும் சொல்லப்படும்.

ஆகவே இதுவரை கூறியதிலிருந்து வேதத்தில் பிரஸ்தாபிக்கப் படும் ப்ரம்ஹமே சக்தியாகும். உபாதியற்ற நிலையில் ப்ரம்ஹம் என்றும், உபாதியோடுகூடிய நிலையில் சக்தி என்றும் ஒரே வஸ்துவைக் குறிப் பிடுகிறோம். பிரம்ஹத்துக்கு இந்த உபாதி எப்படி வந்தது! முன்பு கூறியபடி

" ததைக்ஷத பஹூ ஸ்யாம் ப்ரஜாயேயேதி,"

(तदैक्षत बहु स्यां प्रजायेयेति)

என்று எப்பொழுது 'ஸத்' என்ற பிரம்ஹமானது தன்னை விரித்துக் கொள்ள சங்கல்பித்ததோ அப்பொழுதே இந்த உபாதியும் தோன்றி விட்டது. இந்த உபாதியைத்தான் "மாயை" என்ற சொல்லால் வேதாந்த சித்தாந்த சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

மாயை என்ற சொல் பலதிறப்பட்டுப்பிரயோகம் செய்யப்படுவதால் அதன் இலக்கணம் ஈண்டு கூறவேண்டியது அவசியம் ஆகின்றது. ஸதா மாறுதலடைந்துகொண்டேயிருக்கும் இப்பிரபஞ்சம் மாறுதலடையாத ஒன்றிலிருந்து தோன்றுகின்றது. நிலையில்லாத பிரபஞ்சம் சாஸ்வதமான வஸ்துவினின்றும் தோன்றுகின்றது. அவ்வாறு தோன்றுவதால் முதற்பொருளாகிய பிரம்ஹத்துக்கு ஏதாவது குறைவு, மாற்றம் முதலிய விகாரங்கள் உண்டாகின்றனவா ? இல்லவேயில்லை. சூரியனை மேகம் மறைக்கின்றது. அதனுல் சூரியன் எவ்வித மாறுதலும் அடைவதில்லை. சூரியரச்மியால் தாமரை மலர்கின்றது. அதனுல் சூரியனில் ஏதாவது மாற்றம் ஏற்படுகின்றதா ? அதுபோல பிரம்ஹத்தினின்றும் பிரபஞ்சம் உண்டாவதால் பிரம்ஹத்துக்கு யாதொரு குறைவும் ஏற்படுவதில்லை. இதுதான் விசித்திரமான உண்மை. இதைத்தான் உபநிஷத்

"ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே ।
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே ॥"

(ओं पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥)

என்கின்றது. அதாவது :— "ஓம் அது (பிரம்ஹம்) பூர்ணம். இதுவும் (தோற்றமுடைய பிரபஞ்சமும்—ஜீவனும்) பூர்ணம். அந்த பூர்ண வஸ்துவிலிருந்து இந்த பூர்ணவஸ்து உதயமாயிற்று- அவ்வாறு ப்ரம்ஹமாகின்ற பூர்ணவஸ்துவினின்று பிரபஞ்சமாகிற பூர்ணவஸ்து தோன்றினுலும் அந்த பிரம்ஹவஸ்து பூர்ணமாகவேதான் இருக்கிறது. எப்படி இது ஸாத்யம் ? ஓர் உதாரணம்.

ஓர் ஆலயத்தில் ஓர் தூண் இருக்கிறது. அத்தூணில் சில்பி தன் முழுத்திறமையையும் காட்டி மிக அழகான விக்ரஹத்தைச் செதுக்கியிருக்கிறுன். இங்கு இந்தத் தூணும் தனது தொழிலாகிய மேல்

கோப்பைத் தாங்குதலைச் செய்துகொண்டு பூர்ணமாக இருக்கிறது. அதில் செதுக்கப்பட்ட விக்ரஹமும் பூர்ணமாகவேயிருக்கின்றது. சில்பம் தூணிலிருந்துதான் வந்தது. ஆயினும் அது தூணின் சொரூபத்தை மாற்றவில்லை. அதுபோலத்தான். ஏன் ? இந்த சில்பத்துக்குத் தூண் அவசியம், ஆனால் தூணுக்கு சில்பம் அவசியம் இல்லை. அதுபோன்று பிரபஞ்சம் பிரஹ்மத்தினின்று தோன்றியது. பிரபஞ்சத்துக்கு பிரஹ்மம் அவசியம் ஆனல் பிரஹ்மத்துக்கு பிரபஞ்சம் அவசியமில்லை. ஆகையால் அதை உபாதி என்கின்றோம். பிரபஞ்சத்துக்கும் பிரம்ஹத்துக்குமுள்ள இந்த விசித்திரமான தொடர்பைத்தான் மாயை என்கின்றோம். அதாவது நிர்குண நிர்விகார கேவல சைதன்ய பிரஹ்மத்தினின்று அதன் இச்சையாலே தோன்றி முக்குணமடைந்து, அதை விட்டும் வேறல்லாத நாமரூப பேதங்களைத் தோற்றுவிக்கும் சக்திக்கு மாயா என்று பெயர். அதனால் தான் அம்பாளை மஹாமாயா என்றும் அழைக்கின்றோம். "ஸப்தசதீ" என்ற தேவீமாஹாத்மியம் முதல் அத்தியாயம் 54, 55, 56வது சுலோகங்களில் :—

"பிரபஞ்சத்தின் இருப்புக்குக் காரணமான மஹாமாயையின் பிரபாவத்தாலேயே உயிர்களின் சித்தவிருத்திகளும் நாநாவிதமான நாம ரூப பேதங்களும் உண்டாகின்றன. இந்த மஹாமாயை உலக காரணனான ஹரியினுடைய யோகநித்ரையாகின்றாள். அவளால் உலகம் மயக்கப்படுகின்றது. அவளாலேதான் அசைவதும் அசையாததுமான இவ்வுலகம் எல்லாம் சிருஷ்டிக்கப்படுகின்றது.

"தயா விஸ்ருஜ்யதே விச்வம் ஜகதேதச்சராசரம்" (56)

(तया विसृज्यते विश्वं जगदेतच्चराचरम्)

ஆக ஈச்வரனின் சக்தியே மாயை என்று ஏற்படுகின்றது. அம்மட்டேயன்றி சைவ சித்தாந்திகள் கூறும் மாயை என்ற பொருளிலும் சாங்கியர் கூறும் பிரகிருதி என்ற பொருளிலும்கூட மாயை என்ற பதம் பிரயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ச்வேதாச்வதரோபநிஷத்தில் 4-வது அத்தியாயம் 10-வது வாக்கியத்தில்,

"மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத்" (मायां तु प्रकृतिं विद्यात्)

என்று வருவது காண்க. சைவசித்தாந்தத்தின் தலைசிறந்த நூலாகிய சிவஞானபோதத்துக்கு உரை எழுதிய சிவஞானயோகிகள் மாயையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார் :—

"பிரபஞ்சத்துக்கு முதற்காரணமாய், நித்யமாய், ஜடமாய், முதல்வனுக்குப் பரிக்கிரக சத்தியாய், முதல்வனின் வியாப்யமாய், மெய்ப்பொருளாய், அருவாயுள்ளதெனப்போந்த மாயை சுத்தமாயை அசுத்த மாயை என இருவகைப்படும். இவற்றுள் பிரபஞ்சத்துக்கு முதற்காரணம் சுத்த மாயை. சுத்தமாயை, மஹாமாயை, குடிலை, குண்டலி, விந்து என்பன ஒரு பொருட்கிளவி" குடிலை என்ற சுத்த மாயையே பிரபஞ்சத்துக்கு முதற்காரணம். இறைவன் நிமித்த காரணன். ஒரு நாற்காலிக்கு மரம் முதற்காரணம். தச்சன் நிமித்த காரணன்: அதுபோல.

இனி அசுத்த மாயை என்பதுதான் வேதாந்திகளால் பேசப்படும் *அவித்யை என்பது. இது இரண்டுவிதம். ஆவரணசக்தி என்றும், விக்ஷேப சக்தி என்றும் கூறுவர். ஆவரண சக்தி என்பது உள்ளதை மறைப்பது. விக்ஷேப சக்தி என்பது இல்லாததைத் தோற்றுவிக்கும். இரண்டும் ஒரே சமயத்தில் ஒரே பொருளில் தோன்றலாம். கயிற்றை மறைத்து பாம்பாகக் காட்டுவது. சிப்பியை மறைத்து வெள்ளியாகக் காட்டுவது. இவைபோன்று; இதை மாயா மலம் என்றும் சித்தாந்திகள் கூறுவர். மெய்ப்பொருளை அறியவொட்டாமல் தடுத்து அழியும் பொருள்களின்மீது பற்றுதலை உண்டாக்குவது. பொய்யை மெய்யெனக் கொள்வதே மாயையின் சேஷ்டை. அருணகிரிநாதர் தமது கந்தர் அநுபூதி 5வது பாடலில் சுத்தமாயை, அசுத்தமாயை இரண்டையும் அழகாகப் பிரித்துக் கூறுகின்றார்.

---

* *அநித்ய அசுசி து:க அநாத்மஸு நித்ய சுசி ஸுக ஆத்மக்யாதி: அவித்யா,*

(अनित्याशुचिदुःखानात्मसु नित्यशुचिसुखात्मख्यातिः अविद्या)

அநித்யமாயும், அசுத்தமாயும், துக்கமாயும் அநாத்மாவாயுமுள்ளவற்றை நித்யமென்றும், சுத்தமென்றும், சுகமென்றும் ஆத்மாவென்றும் நினைக்கும் ஞானமானது அவித்யை எனப்படும்.

பாதஞ்ஜலயோகஸூத்ரம் 2—5

மஹாமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்து மொழிந்திலனே
அகமாடை மடந்தைய ரென்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே.

என்று மஹாமாயை என்று சுத்த மாயையையும் சகமாயை என்று அசுத்த மாயையையும் கூறுகின்றார். ஆனால் வாசகர்கள் முக்கியமாய் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது ஒன்று உண்டு. பிரபஞ்ச காரணமான மஹாமாயையானாலும் சரி, ஜீவர்களின் அறிவை மயக்கும் அவித்யை அல்லது மாயாமலமானாலும் சரி, இரண்டும் பிரஹ்மத்துக்குப் புறம்பானதல்ல. இரண்டும் பிரஹ்மத்திலேயே தோன்றி சூரியனை மேகக் கூட்டங்கள்போல ப்ரஹ்மத்தை மறைக்கும் சக்தி. சுத்த சத்வ குணத்தால் மட்டுமாயது சுத்த மாயை. ஆனால் அவித்யை என்ற மாயாமலமோ ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் மூன்றும் சேர்ந்தது. மாயை பிரஹ்மத்தை சிருஷ்டி உந்முகமாக்கித் தொழிற்படச் செய்கின்றது. அவித்யை *ஜீவர்கள் தோன்றக் காரணம். மஹாமாயை இறைவனிடமே தோன்றினாலும் அவனை பாதிப்பதில்லை. அவித்யையோ ஜீவர்களை பாதிக்கின்றது. இன்னொருவிதமாகக் கூடச் சொல்லலாம். சமஷ்டியில் மாயை என்றும் வியஷ்டியில் அவித்யை என்றும் கூறலாம். நாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கு இத்தகைய சர்ச்சை அனுவச்யமாகத் தோன்றலாம். அதனால் இதோடு நிறுத்திக்கொண்டு வேறு விஷயங்களை ஆராய்வோம். மஹாமாயை என்றும் பராசக்தி என்றும் வழங்கப்படும் தத்துவம் பிரம்மத்தினின்று வேறல்ல என்பதை உணர வேண்டும் என்பதற்காகவே மாயையின் பல்வேறு பொருள்களை விளக்கினோம்.

ஆக இதுவரை கூறியதிலிருந்து ப்ரஹ்மத்தின் ஆற்றலே சக்தியென்றும், பிரஹ்மத்தை விட்டு வேறல்லவென்றும், சக்தியின் அதிஷ்டானத்தாலேயே பிரஹ்மம் தொழிற்படுகின்றது அதாவது சிருஷ்டியாதி பஞ்சக்ருத்தியங்களைச் செய்கின்றது என்பதை அறிந்தோம்.

** அரிசி உமியோடு கூடியிருக்கும்போது அதை நெல் என்று சொல்லுகிறோம். அது போன்று ப்ரஹ்மம் தனது மாயையினால் அவித்யையினால் சூழப்பட்டபோது அதை ஜீவன் என்கின்றோம்.*

பரசிவத்தினின்று தன்னிச்சையாலே தன்னுள் ஒடுங்கிக்கிடந்த சக்தி ஸ்புரணம் ஆவதாலேயே அதாவது வெளிப்படுவதாலேயே பிரபஞ்சம் தோன்றுகின்றது. அவ்வாறு சக்தி ஸ்புரிக்கும் தன்மையை வரிவஸ்யா ரஹஸ்யத்தில் ஸ்ரீ பாஸ்கரராயர்

நைஸர்கிகீ ஸ்புரத்தா விமர்சரூபா அஸ்ய வர்த்ததே சக்தி: I
தத்யோகாதேவ சிவோ ஜகத் உத்பாதயதி பாதி ஸம்ஹரதி ச II

(नैसर्गिकी स्फुरत्ता विमर्शरूपाऽस्य वर्तते शक्तिः ।
(तद्योगादेव शिवो जगदुत्पादयति पाति संहरति च ॥)

அதாவது மஹா பிரகாசமான சிவத்தினிடத்தில் இயற்கையாகவே சலிக்கின்ற விமர்சம் என்ற சக்தியுள்ளது. இந்த சக்தியோடு சேர்ந்தே சிவம் ஜகத்தை சிருஷ்டிக்கின்றது, காப்பாற்றுகின்றது, அழிக்கின்றது என்கின்றார். சக்தியோடு சேராமல் இருக்கும் சிவத்தை சாஸ்த்ரங்கள் " சவம் " என்கின்றன. ஞானார்ணவ தந்த்ரத்தில்

" சிவோபி சவதாம் யாதி குண்டலின்யா விவர்ஜித: "

(शिवोपि शवतां याति कुण्डलिन्या विवर्जितः)

அதாவது சிவனானவர் குண்டலினி, அல்லது குடிலை, அல்லது மஹாமாயை, அல்லது சக்தியோடு சேர்ந்து இல்லையேல் வெறும் சவமே. அதாவது யாதொரு தொழிலும் செய்யமுடியாது. அவ்வாறு தொழில் படாத பிரஹ்மத்தால் யாருக்கும் பயனில்லை. லலிதாஸஹஸ்ரநாமத்தில்

(पञ्चप्रेतासनासीना पञ्चब्रह्मस्वरूपिणी)

" பஞ்சப்ரேதாஸநாஸீநா பஞ்சப்ரஹ்மஸ்வரூபிணீ "

என்று 61வது சுலோகத்தில் வருகின்றது. இதன் பொருள் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்ரஹம் என்ற ஐந்தொழில்புரியும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், மஹேச்வரன், சதாசிவன் என்ற ஐந்து பேர்களும் தங்களுடைய சக்திகளாகிற சரஸ்வதி, லக்ஷ்மி, ரௌத்ரீ, மஹேச்வரி, மனோன்மனி ஆகிய பஞ்ச சக்திகளோடு சேர்ந்திராவிடில் ப்ரேதங்களாக அதாவது ஒன்றும் செய்யமுடியாதவர்களாக இருப்பதாய்

வர்ணித்திருப்பதுடன் அவர்களே கட்டில் கால்களாகவும் மஞ்சமாகவும் இருந்து அம்பாளைத் தாங்குவதால் அவளுடைய அதிஷ்டானத்தைப் பெற்று பஞ்சபிரம்மங்களாகின்றனர்; அதாவது சக்தியோடு சேர்ந்தே தொழில் செய்கின்றனர் என்று பொருள்.

மூன்றாவது அத்தியாயம்

சக்தியும் சிவமும்

இவ்வாறு ப்ரஹ்மத்தைப் பெண்ணாகக் கல்பித்து வழிபடுவது சாக்தம். ஏனைய சித்தாந்தங்களிலும் சக்தியின் ப்ராதான்யம் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றது. முக்யமாக சைவசித்தாந்தத்தில் சக்தியை நீக்கி சிவனை மட்டும் வழிபட ஆதாரமில்லை. சிவனைத்திருமுறைகள்,

" மாதொருபங்கன் "

" உண்ணாமுலை உமையாளொடு உடனாகிய ஒருவன் "

" வேயுறு தோளிபங்கன் "

" நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன் "

என்று பல இடங்களில் சக்தியைச்சேர்த்தே சிவனைக்கூறி வந்திருக்கின்றன. 10ம் திருமுறையாகின்ற திருமூலர் திருமந்திரத்தில் சக்தி தத்வத்தைப்பற்றி பல பாடல்கள் உள்ளன. அவற்றில் ஒன்று மிக விசேஷமானது.

வாயும் மனமும் கடந்த மனோன்மனி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த வரனுக்குத்
தாயும் மகளும் தாரமுமா மே.

மனோவாசாமகோசரமாய் இருக்கும் பராசக்தி ஆராய்ந்து அறிய வொண்ணாத சிவனுக்குத் தாயானாள், பின் மகளானாள், பின் தாரமுமானாள். நிருபாதிக ஸம்வித்ருபமாயுள்ள ப்ரஹ்மத்தைத் தொழிற்பட

இயக்குவதால் தாயானுள், அவ்வாறு இயங்குவதால் சிவத்தினிடமிருந்தே சக்தி ஸ்புரித்தாளாகையாலே மகளானுள். பின் இருவரும் சேர்ந்து சிருஷ்டியாதி காரியங்களைச் செய்வதால் தாரமுமானுள் என்ருர். மணிவாசகர் இன்னும் ஒரு முறைமையைச் சேர்த்தும் உரைக்கின்ருர்.

"எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன்
தமையன்"

அதாவது உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்க இருவரும் கூடி செயல்புரிவதால் கேள்வனும், சக்தி தத்துவத்தினின்றே (சைவ சித்தாந்தப்படி) சதாசிவ தத்துவம் தோன்றுதலால் மகன், சிவத்தினின்றே சக்தி பிறத்தலால் தகப்பன், சுத்த மாயையில் ஞான சக்தி அதிஷ்டிக்க சிவ தத்துவமும், கிரியா சக்தி அதிஷ்டிக்க சக்தி தத்துவமும் தோன்றலால் தமையனுகின்ருராம். இறைவனும் இறைவியும் அர்த்த நாரியாக இருப்பதை மணிவாசகர்,

தோலும் துகிலும், குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்கவளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கி குளிர்ந்தூதாய்க் கோத்தும்பி.

என்ருர். இந்த அர்த்தநாரி ஸ்வரூபம் பிரபஞ்சத் தோற்றத்துக்கு மூலம் ஆதலால் இதனைத் தொன்மைக் கோலம் என்றருளினர். வழிபாட்டில் மட்டுமல்ல. சைவசித்தாந்தத்தில் இறைவியின் அருளாலேயே இறைவனை அடையமுடியும் என்பது துணிபு. இதனை,

"நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்குமுன் சுரக்கும் இன்னருள்"

என்ருர். திருக்களிற்றுப்படியார் என்ற சித்தாந்த சாஸ்த்ரத்தில்

ஆகமங்கள் எங்கே? அறு சமயந்தானெங்கே
யோகங்கள் எங்கே? உணர்வெங்கே?– பாகத்து
அருள் வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெரு வடிவையார் அறிவார் பேசு,

இது மிகுந்த ஆழமான பாடல். சக்தி ஸ்புரணமாகி பிரபஞ்சமாய் விரியாவிடில் "Static Energy" ஆன ப்ரஹ்மத்தால் யாது பயன்? அதை யார் தேடப்போகிறுர்கள்? யார் அறியப்போகிறுர்கள்? இறைவனே அறிய முயலுவதும், அறிவதும், அதற்காகத் தகுந்த ஸாதனைகளைச் செய்வதும் ஜீவர்கள்தானே. பிரபஞ்சோத்பத்தி இன்றேல் ஜீவர்கள் ஏது? அது ஒரு புறமிருக்க சக்தி ஸ்புரணமாகுங்கால் உண்டாகும் சூக்ஷ்ம ஸ்பந்தனத்தாலேயே ப்ரஹ்மம் என்ற ஒன்று இருக்கின்றது என்று உணரப்படுகின்றது. இதை ஞான வாஸிஷ்டத்தில்

ஸ்பந்தேன லக்ஷ்யதே வாயு: வன்ஹி: உஷ்ணேன லக்ஷ்யதே ।
சின்மாத்ரம் அமலம் ஶாந்தம் சிவ இத்யுதிதம் து யத் ।
தத் ஸ்பந்தமய சக்த்யைவ லக்ஷ்யதே நான்யதா கில ॥

(स्पन्देन लक्ष्यते वायुः वह्निरुष्णेन लक्ष्यते ।
चिन्मात्रममलं शान्तं शिव इत्युदितं तु यत् ।
तत्स्पन्दमयशक्त्यैव लक्ष्यते नान्यथा किल ॥)

அதாவது வாயுவானது அதன் அசைவினுல் உணரப்படுகின்றது. நெருப்பானது அதன் உஷ்ணத்தால் உணரப்படுகின்றது. அதுபோல சின்மாத்திரமாயும் அமலமாயும் சாந்தமானதாயும் சொல்லப்படுகிற சிவ ஸ்வரூபமானது அதனிடமிருக்கும் ஸ்பந்தமய விமர்சவடிவ சித்சக்தியின் மூலமாகவே அறியப்படுகின்றது. வேருென்றினுலுமல்ல என்பது பொருள்.

ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்திலும் பெரியபிராட்டி என்ற ஸ்ரீ தேவிக்குப் ப்ராதான்யம் அளிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீமந் நாராயணன் சேதனர்களுக்கு அருளுவது பெரியபிராட்டியின் சந்நிதியில் தான். அவளுடைய தகவினுலேயே இறைவனுன ஸ்ரீமந்நாராயணன் ஸௌலப்யசீலனுய், தீனதயாளுவாய், கருணுரஸ ஸாகரனுய், பக்த பராதீனனுய் விளங்குகின்ருன். மேலும் அவள்தான் சேதனர்களுக்கு ஸ்ரீமந்நாராயணனை முன்னிலைப்படுத்திவைக்கிருள். ஆகையால் அவளை புருஷகாரபூதை என்பர். சைவர்கள் இறைவிக்கு இறைவனின் பாதி உடலைக் கொடுத்தார்கள். அர்த்தநாரி என்றுர்கள். வைணவர்கள்

ஸ்ரீதேவி ஸ்ரீமந்நாராயணனின் வக்ஷஸ்தலத்தில் நீங்காது நித்யவாஸம் செய்கின்றாள் என்றார்கள். ஆகையால் ஸ்ரீஸூக்தம் அவளை "அனப காமினீம்" (अनपगामिनीं) என்று கூறுகிறது. 'அவனைவிட்டுப் பிரியாதவள்' என்று பொருள்.

கௌமார தர்சனத்திலும் இறைவனுடைய சக்தியை மூன்று விதமாகக் கூறி ஞான சக்தியை முருகனுடைய வேல் என்றும், இச்சா சக்தியை வள்ளியென்றும், கிரியா சக்தியை தெய்வானை என்றும் கூறப்பட்டிருக்கிறது. பொதுவாகக் கூறினால் ஹிந்து சமயத்தின் உட்பிரிவுகளான சைவம், வைஷ்ணவம், கௌமாரம், காணபத்யம், ஸௌரம் என்ற ஐந்து தர்சனங்களும், சக்தியின் முக்கியத்வத்தை ஒப்புக்கொண்டாலும் சக்திக்கு இரண்டாவது இடத்தையே அளிக்கின்றன. ஆனால் சாக்தத்திலோ அவளே பிரதானம், அவளே எல்லாம். ஸகல தேவர்களும் அவரவர் தத்தம் தொழில்களைச் செய்வதற்கு அவளையே ஆச்ரயிக்கின்றனர். அவளே அருவமான ப்ரம்ஹ சைதன்யம். அவளே உபேயம். அவளே உபாயமும் கூட.

பிரபஞ்ச சிருஷ்டிக்கு இரண்டுவிதமான காரணங்கள் சாதாரணப் பழக்கத்தில் இருந்து வருகின்றன. ஒன்று விவர்த்தகாரணம். அதன்படி காரணம் காரியமாக உண்மையில் மாறுவதில்லை. கயிற்றில் பாம்பு தோன்றுகின்றது. கயிறு காரணம், பாம்பு காரியம். கயிறு பாம்பாகத் தோன்றுகிறதே ஒழிய பாம்பாக மாறிவிடவில்லை. இது வேதாந்திகளின் கொள்கை. மற்றொன்று பரிணாமி காரணம். ஒன்றிலிருந்து ஒன்று விகஸித்து வேறொன்றாகின்றது. விதையிலிருந்து செடி முளைக்கும் போது விதையில் மாறுதல் ஏற்படுகின்றது. அதுபோல பிரஹ்மம் தன் சங்கல்பத்தாலேயே தன்னினின்று சக்தியை ஸ்புரிக்கச் செய்து சக்தியிலிருந்து நாதமும், நாதத்திலிருந்து பிந்துவும் பிந்துவிலிருந்து சதாசிவ தத்துவமும், சதாசிவத்திலிருந்து மஹேச்வர தத்துவமும், மஹேச்வர தத்வத்திலிருந்து ருத்ரதத்துவமும், ருத்ர தத்வத்திலிருந்து விஷ்ணு தத்துவமும், விஷ்ணு தத்துவத்திலிருந்து பிரம்ம (சிருஷ்டி கர்த்தா) தத்துவமும் பிரம்மாவிலிருந்து ஆகாசமும், ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து அப்பும் அப்பிலிருந்து பிருதிவியும், பிருதிவியிலிருந்து நால்வகையோனிபேதமுடைய எழு

வகைப் பிறப்பும் படிப்படியாகக் கீழே இறங்கி கனத்து விரிகின்றது. இதற்குப் பரிணும வாதம் என்று பெயர். இது சித்தாந்திகளின் கொள்கை. ஆனுல் பிரஹ்மத்திலிருந்து சக்தி ஸ்புரணமாகும் போது பிரஹ்மத்தில் மாறுதல் ஏற்படுகின்றது என்பது ஒப்புக்கொள்ளக் கூடியதாக இல்லே. மாறுதலே அடையும் வஸ்து ப்ரஹ்மமாக இருக்க முடியாது.

விவர்த்தவாதமானுலும் சரி, பரிணுமவாதமானுலும்சரி ப்ரஹ்மத்தின் ஆற்றலே சக்தியாதலின், ஆற்றலே உடையவனிடமிருந்து வேருக்க முடியாதாதலின் ப்ரஹ்மமே சக்தி, சக்தியே பிரஹ்மம் என்பதிற் சந்தேகம் உண்டாகக்காரணமில்லே. விகாஸமுறையில் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றும்போதெல்லாம் சக்தியே துணையிருக்கவேண்டுமாதலால் சிருஷ்டியின் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு படியிலும், ஒவ்வொரு நிலேயிலும் அவளே நிரந்தரமாக நீக்கமற நின்று செயலாற்றுகிருள். அவள் பிரஹ்மத்தினின்று வேறல்ல.

இவ்வாறு ஒவ்வொரு படியிலும் சிவனும் சக்தி இருவரும் அதாவது ஆற்றலும், அவ்வாற்றலேயுடையவனும் சேர்ந்தே தொழிற்படும்போது ஒவ்வொரு படியிலும் சிவதத்துவத்துக்கும் சக்தி தத்துவத்துக்கும் வெவ்வேறு தொழிலும், வெவ்வேறு பெயரும் வெவ்வேறு ரூபமும் கல்பித்து வழிபடுகிருேம். ஆனுல் உண்மையில் தொழிற்படுவது ஒரே வஸ்துதான்.

சிருஷ்டியில் பிரம்மா—ஸரஸ்வதி என்றும், ஸ்திதியில் விஷ்ணு—வைஷ்ணவியென்றும், ஸம்ஹாரத்தில் ருத்ரன்—ரௌத்ரீ என்றும், திரோபவத்தில் மஹேச்வரன்—மஹேச்வரீ என்றும், அனுக்ரஹத்தில் சதாசிவர்—மனேன்மனி என்றும் அழைக்கிருேம் இதுபோன்றே அக்னி தேவன் என்றும், அவன் தேவிகள் ஸ்வாஹா, ஸ்வதாவென்றும் கூறு கிருேம். இவ்வாறே ஒவ்வொரு தத்துவத்தையும் அதன் சக்தியையும் சேர்த்து நாம ரூபபேதங்கள் கற்பித்து நமது வேத புராண இதிஹாஸங் கள் யாவும் கூறியிருக்கின்றன. உண்மையறியாதார் ஹிந்துக்கள் பல தேவதைகளே வழிபடுகிறவர்கள் என்று கூறுகிருர்கள். உலகிலுள்ள ஸகல சமயசித்தாந்தங்களும் தோன்றுவதற்கு முன்பே ஹிந்துக்கள் இந்த

ஒற்றுமையைக் கண்டு, இயங்குவதும் இயக்கப்படுவதும் ஒரே பொருளே என்று கூறியிருக்கின்றனர். இந்த அத்விதீய உண்மையையறியாதார் அறியாதாரே.

ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி (एकं सत् विप्रा बहुधा वदन्ति) என்பதுதான் உண்மையான நிலை.

நான்காவது அத்தியாயம்

ஸகுண நிர்குண வழிபாடு

வேதங்களில் கூறப்படும் பிரஹ்மமே பிரபஞ்ச காரண வஸ்து என்றும், அதோடு இரண்டறக் கலப்பதே முக்தி அல்லது மோக்ஷம் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஜீவப்ரஹ்ம ஐக்கியமே அறிவு படைத்த மனிதனின் லக்ஷியமாக இருக்கவேண்டும். இந்த லக்ஷியத்தை யடைய பல மார்க்கங்கள் நமது சமய நூல்களில் கூறப்பட்டிருக் கின்றன. அவற்றை கர்மயோகம், பக்தி யோகம், ராஜயோகம், ஞான யோகம், என்று சாதாரணமாகச்சொல்லுவர். உண்மையில் பார்க்கப் போனல் இவை நான்கும் வெவ்வேறு மார்க்கங்களேயல்ல. ஒரே மார்க்கத்தின் நான்கு நிலைகள்தாம். பக்தியில்லாத கர்மமோ, ஞான மில்லாத பக்தியோ என்ன பயனளிக்கும் ?

ஸ்ரீ வித்யை என்ற சாக்த தர்சனத்தில்தான் இந்நான்கும் விரவி யிருக்கின்றன. கிருஹஸ்தாச்ரமத்தில் இருந்துகொண்டே அம்பாளை யதோக்தமாயும் பக்தி பூர்வமாயும் வழிபட்டு, குண்டலினியை உபாஸனு பலத்தால் ஆதாரசக்ரங்களில் ஏறச்செய்து அம்பாளோடு ஸாதாக்யம் அடைவதே ஜீவப்ரஹ்ம ஐக்கியம் என்று அறுதியிட்டுக் கூறுவது சாக்தமேயாகும்.

நிருபாதிக ஸம்வித்ரூபமாயும் நாம ரூப விவர்ஜிதமாயும் இருக்கும் பிரம்ஹத்தை மனதால் அனுஸந்தானம் பண்ண சாதாரண மக்களுக்கு இயலாது. இதை பகவான் கீதையில்,

க்லேசோ அதிகதரஸ்தேஷாம் அவ்யக்தாஸக்தசேதஸாம் I
அவ்யக்தா ஹி கதிர் து:கம் தேஹவத்பிரவாப்யதே II

(क्लेशोऽधिकतरस्तेषामव्यक्तासक्तचेतसाम् ।
अव्यक्ता हि गतिर्दुःखं देहवद्भिरवाप्यते ॥)

அவ்யக்தத்தில் மனம் ஈடுபட்டவர்களுக்குத்தொல்லை அதிகம். உடம்பெடுத்தோர் அவ்யக்தநெறி எய்துதல் மிகவும் கஷ்டம் என்று கூறியிருக்கின்ருர். மனதில் தியானம் பண்ணவும், பூஜை செய்யவும் அவரவர் பக்குவத்துக்குத் தக்க முறையில் ஓர் உருவத்தை நாமரூப ரஹிதமான ப்ரம்ஹத்துக்கு ஆரோபணம் பண்ணி வழிபடுவது அவசியம் ஆகின்றது. இந்த உருவங்களும் நாமங்களும்கூட நாமாகக் கற்பித்துக் கொண்டதல்ல. காரணுகமத்தில்

மந்த்ரிணும் ச யதீனும் ச யோகினும் ஞானினும் ததா I
த்யானபூஜாநிமித்தம் ஹி தநும் க்ருஹ்ணுதி லீலயா II

मन्त्रिणां च यतीनां च योगिनां ज्ञानिनां तथा ।
ध्यानपूजानिमित्तं हि तनुं गृह्णाति लीलया ॥

அதாவது, மந்த்ரோபாஸகர்களுக்கும், ஸந்யாஸிகளுக்கும், யோகிகளுக்கும் ஞானிகளுக்கும் தியானம் செய்யவும் பூஜா வழிபாடுகள் செய்யவும் யோக்யமாகத் தானே விளையாட்டாக ஓர் உருவத்தை மேற்கொள்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

திருவுந்தியார் என்ற சைவ சித்தாந்த சாஸ்த்திரத்திலும்

அகளமாய் யாரும் அறிவரிதப் பொருள்
சகளமாய் வந்ததென்றுந் தீபற
தானே தந்ததென்றுந் தீபற

என்றும் கூறப்பட்டிருக்கின்றது. கீதையில் பகவான் தனது பல்வேறு உருவங்களை 10-வது அத்தியாயத்தில் கூறுகின்ருர். ஸூதஸம்ஹிதை யக்ஞ வைபவ கண்டம் 14-வது அத்யாயம் 2-வது சுலோகத்தில்

"ஏக ஏவ ஶிவ: ஸாக்ஷாத் ஸத்யஜ்ஞாநாதி லக்ஷண: ।
விகாரரஹித: ஶுத்த: ஸ்வஶக்த்யா பஞ்சதா ஸ்தித: ॥

(एक एव शिवः साक्षात् सत्यज्ञानादिलक्षणः ।
विकाररहितः शुद्धः स्वशक्त्या पञ्चधा स्थितः ॥)

அதாவது உண்மையறிவானந்தமே உருவாய், விகாரமில்லாததாய் சுத்தமாய் ஒன்ருக இருக்கும் சிவம் தன்னுடைய சக்தியால் ஐந்து விதயாக பேதமடைந்திருக்கின்றது என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஐந்து பேதங்களாவது ஈசானர், தத்புருஷர், அகோரர், வாம தேவர், சத்யோஜாதர் என்று கூறப்படுகின்றது. இவர்கள் முறையே சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தம் என்பனவற்றின் அதிதேவதைகளாகக் கூறப்படுகின்ருர்கள். இவர்கள் பிரிந்த நிலையில் ஸதாசிவன், ஈசானன், ருத்திரன், விஷ்ணு, நான்முகனுன பிரம்மா இவர்கள் முறையே ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், ப்ருதிவிகளின் அதி தேவதைகள், இவர்களில் பிரம்மா சிருஷ்டியையும், விஷ்ணு ஸ்திதியை யும், ருத்ரன் ஸம்ஹாரத்தையும், ஈசானன் திரோபவத்தையும், ஸதாசிவன் அனுக்ரஹத்தையும் செய்கின்ருர்கள். ஆனாலும் இவ்வைவரும் சக்தியின் அதிஷ்டானமில்லாமல் அவரவர் தொழில்களைச் செய்யமுடியாது என்பதை முன்பே "பஞ்சப்ரேதாஸனுஸீனு" என்று விவரித்தோம். இதை ஞானுர்ணவ தந்த்ரத்தில்,

ஸாது ப்ருஷ்டம் த்வயா பத்ரே பஞ்சப்ரேதாஸனம் கதம் ।
ப்ரம்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஈச்வரச்ச ஸதாசிவ: ।
பஞ்ச ப்ரேதா வராரோஹே நிச்சலா ஏவ தே ஸதா ॥

साधु पृष्टं त्वया भद्रे पञ्चप्रेतासनं कथम् ।

ब्रह्मा विष्णुश्च रुद्रश्च ईश्वरश्च सदाशिवः ।
पञ्च प्रेता वरारोहे निश्चला एव ते सदा ॥

என்று இறைவனே பராசக்திக்குக் கூறியதாகக் காணப்படுகின்றது. ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார திரோபவ அனுக்ரக கர்தாக்களான பிரம்மா,

விஷ்ணு, ருத்ரன், மஹேச்வரன், சதாசிவன் என்ற பஞ்சபிரம்மாக்களும் சக்தியின் அதாவது அவரவர்களின் ஆற்றலாலேயே தத்தம் தொழிலை இயற்றுவார்களாதலாலே சக்தியின் அதிஷ்டானமில்லாதவர்கள் பிரேதங்கள் என்றும், சக்தியின் அனுக்ரஹத்தைப்பெற அவர்கள் கட்டில் கால்களாகவும் மஞ்சமாகவும் அமர்ந்து சக்தியின் அருளைப்பெறுகின்றனர் என்றும் முன்பும் கூறப்பட்டது. ஆக சுத்த சைதன்யமான பிரஹ்மம் சக்தியின் அதிஷ்டானத்தால் தொழில் செய்ய முற்படுகின்றபோது அந்தந்தத் தொழிலுக்கு ஏற்றவாறு உருவம், குணம், சக்தி இவைகளைப் பெற்று சகுணமூர்த்திகளாகின்றார்கள். ஆக பிரபஞ்ச விகாசத்தின் ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு நிலையிலும் சக்தியின் அதிஷ்டானம் தேவையாயிருக்கின்றது. ஆகவே அவளும் அநேகவித ரூபங்களையும் நாமங்களையும் பெறுகின்றாள்.

எத்தொழிலைச் செய்வதற்கும் மூன்று அம்சங்கள் தேவைப் படுகின்றது. முதலில் அதைச் செய்யவேண்டும் என்ற ஆசை, பிறகு அதை எப்படிச் செய்யவேண்டும் என்ற அறிவு, பின் அதைச் செய்வது, இம்மூன்றையும் இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்று பெயரிட்டிருக்கிறார்கள். இம்மூன்றும் ஒருவனிடத்திலேயே இருக்கும் என்பதும், அவனுடைய ஆற்றலே மூன்று விதமாகப் பரிணமிக்கின்றது என்றும் சொல்லாமலே அறியலாம். இம்மூன்றோடு திரோபவ சக்தியும், அனுக்ரஹ சக்தியும் சேர்ந்து இறைவனுக்கு பஞ்சசக்திகள். இவ்வைந்து சக்திகளைக்கொண்டுதான் பஞ்சபிரம்மாக்கள் என்று அழைக்கின்றோம்.

சாதாரணமாக இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்ற வரிசையில்தான் கூறுவது வழக்கம். இந்த வரிசையில் தான் நமது நவராத்ரி விழாவில் முதல் மூன்று நாள் இச்சா சக்தியான துர்க்கையையும் இரண்டாவது மூன்று நாட்களில் கிரியா சக்தியாகின்ற லக்ஷ்மியையும், மூன்றாவது மூன்று நாட்களில் ஞானசக்தியாகின்ற சரஸ்வதியையும் வழிபடுகின்றோம். ஆனால் செயல் முறையில் முதலில், செய்யவேண்டும் என்ற இச்சையும் பிறகு அதைச் செய்யும் அறிவாற்றலும், பின்னர், அதைச் செய்தலும் ஏற்படுவதைப் பார்க்கிறோம். இந்த வரிசையில் தான் லலிதா ஸஹஸ்ரநாமாவில்

இச்சாசக்தி – ஞானசக்தி – க்ரியாசக்தி ஸ்வரூபிணி

(इच्छाशक्ति ज्ञानशक्ति क्रियाशक्तिस्वरूपिणी)

என்று 658-வது நாமாவில் கூறப்பட்டிருக்கின்றது. ஏன் இந்த மாற்றம்? லௌகிக விஷயங்களில் முதலில் இச்சையும் அதன் பின் ஞானமும் அதன் பின் கிரியையும் வருவதுதான் இயல்பு. ஆனால் பாரமார்த்திக தசையில் ஒரு மனிதன் முதலில் மோக்ஷத்தில் இச்சைப்படுகிறான், பின்பு அதை அடையத் தகுந்த கிரியைகளைச் செய்கிறான். அந்த சாதனையின் முடிவில் ஞானத்தை, "தத்வமஸி" (तत्त्वमसि) "அஹம் ப்ரம்ஹாஸ்மி" (अहं ब्रह्मास्मि) முதலிய மஹாவாக்ய ஞானத்தையடைகிறானுதலால் நவராத்ரி விழாவில் இந்த வரிசையில் வழிபடுகிறோம். ஞானம் பூர்ணமாக வருவதற்குவேண்டிய சாதனை அல்லது கிரியை ஞானத்துக்கு முந்தியும் ஞானத்தையடையவேண்டுமென்ற இச்சை கிரியைக்கு முந்தியும் வைக்கப்பட்டுள்ளது. ஞானம் வந்தபோது அநாத்ம விருத்திகள் அழிகின்றன என்ற தத்வத்தை மஹிஷாஸுரவதத்தால் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் தற்காலத்தில் நவராத்ரியின் இந்த தத்துவத்தை அறிந்து அனுஷ்டிப்பவர்கள் யார்? அது ஓர் ஆன்ம விகாஸத்துக்காக நிறுவப் பட்ட நோன்பு என்ற கொள்கை மறந்துபோய் வெறும் கேளிக்கையில் முடிந்துவிட்டது. சாதாரணமாய் ஆலயங்களில் கூட இம்முறை அனுஷ்டிக்கப்படுவதில்லை. குருக்கள் அம்மனுக்கு ஏதாவது ஒரு அலங்காரத்தைப் பண்ணி வைத்துவிடுகிறார். சில ஆலயங்களில் அம்பிகைக்கு நவராத்ரி காலத்தில் ஸஹஸ்ரநாம அர்ச்சனை, திரிசதி அர்ச்சனை செய்வதுகூட கிடையாது. ஏதோ பொம்மைக்கு வேஷம் போடுவது போலத்தான் ஆலயங்களில் நடந்துவருகின்றது. ஆகமங் களில் உத்ஸவ காலங்களில் இன்ன இன்ன தினங்களுக்கு இன்ன இன்ன வாஹனம் வைக்கவேண்டும் என்று கூட வரையறுக்கப் பட்டிருக்கின்றது. சிவாலயங்களில் அர்ச்சகராக இருப்பவர்களுக்கு சாக்த தந்திர அறிவே கிடையாது. அவர்கள் சிவாச்சாரியர்கள்தானே. சாக்தோபாஸகர்கள் அல்லவே! ஆயினும் நிர்வாகத்தை வஹிப்பவர் களாவது விஷயம் தெரிந்தவர்களாக இருந்து சிவாச்சாரியர்களுக்கு வழிகாட்டலாம்,

சகுணோபாஸனமூலமே நிர்குணோபாஸனையை அடையமுடியும் என்ற உண்மையை நமது ஆன்றோர் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்து விக்ரகங்களின் அமைப்பு, அளவு, அதற்குச் செய்ய வேண்டிய பிரதிஷ்டாக்கிரியைகள், நித்திய நைமித்திக வழிபாடுகள், உத்ஸவாதிகள் யாவும் நடத்தவேண்டிய வழிமுறைகளைக் கூறியிருக்கிறார்கள். இந்த நூல்களுக்குத்தான் ஆகமங்கள் என்று பெயர். வேதத்தில் ஸ்தோத்ரகாண்டம், கர்மகாண்டம் ஞானகாண்டம் என்ற முப்பிரிவுகள் இருப்பதுபோல் ஆகமங்களில் சர்யாபாதம், கிரியாபாதம், யோகபாதம் ஞானபாதம்என்று நான்கு பிரிவுகள் இருக்கின்றன. ஞான பாதங்களே சித்தாந்த சாஸ்த்ரங்கள். கிரியாபாதமே ஆலய வழிபாட்டுக்கு முக்கியமானது. அருவமாயிருந்த பிரம்ஹத்துக்கு அதன் செயலுக்கேற்ப குணம், உருவம், நாமம் இவற்றைக் கல்பித்துப் படிப்படியாக மேலேறி நிர்குணோபாஸனைக்குச் செல்ல ஏற்பட்ட சாதனங்களே ஆலயங்களும் விக்ரஹ வழிபாடும்.

அத்வைத ஸ்தாபகரான பகவத்பாதாளே சகுணோபாஸனையை ஏற்றுக்கொண்டு சகல மூர்த்திகளுக்கும் ஸ்தோத்திரங்கள் இயற்றி இருக்கிறார். இப்பவும் சங்கரபகவத்பாதாளால் ஸ்தாபிக்கப்பட்ட ஆம்னாய மடங்களிலும் அவற்றின் கிளைகளிலும் விக்ரஹ ஆராதனை நடத்துவதைப் பார்க்கின்றோம். இவற்றை சங்கரர் தமக்காகவா செய்து கொண்டார்? அல்ல! லௌகிக மக்களின் ஆன்ம விகாஸத்துக்காகச் செய்த ஏற்பாடுகள். அத்வைதானுபவத்தில் தலை சிறந்து விளங்கிய சதாசிவப்ரம்ஹேந்த்ராள்கூட மூர்த்திகளுக்குக் கீர்த்தனங்கள் இயற்றியுள்ளார். ஜீவன் முக்தி நிலையை அடைந்த ராமகிருஷ்ணபரமஹம்ஸர் கடைசிவரை காளி உருவத்தை மறக்கவில்லை. சேக்கிழார் பெருமான், சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றில் சுவாமிகள் சிதம்பரம் சென்று கூத்தப்பெருமானை தரிசனம் செய்ததாகக் கூறுமிடத்து சுந்தரமூர்த்திகள் அடைந்த அனுபவத்தை நமக்கு அழகாகக் காட்டுகின்றார். அதைப் பாருங்கள்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமேயாக

இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

தில்லை நடராஜர் ஸன்னிதியில் நின்று அந்த விக்ரஹத்தைப் பார்த்த சுந்தரர் அவ்விக்கிரஹம் குறிக்கும் தத்துவத்தை உணர்ந்தவராய் முன்னால் இருக்கும் உருவத்தை ஊடுருவி, கூத்தப்பெருமானின் பஞ்ச கிருத்திய தாண்டவத்தையும், ஊழித்தாண்டவத்தையும் தனது தியான சமாதியில் தரிசித்து ஞானேந்திரியங்கள் ஐந்தும் கண்களில் ஒடுங்க, அந்தக்கரணம் நான்கும் சித்தத்தில் லயிக்க, முக்குணங்களும் சாத்விகத்தில் நிற்க அந்த அவசரத்தில் சுந்தரர் மஹேச்வரரின் மஹாகல்ப தாண்டவ தரிசனம் கண்டு அந்த ஆனந்தத்தில் திளைத்து ஒரே இன்ப மயமான சமாதியில் ஆழ்ந்து "மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தாராம்". இதுபோன்று சகுணோபாஸனை செய்யும் அடியார்களுக்கு தம் முன் இருக்கும் விக்ரஹம் மறைந்து அதன் ஆழ்ந்த தத்துவம் அனுபவத்துக்கு வரவேண்டும் என்பதுதான் விக்ரஹ ஆராதனையின் குறிக்கோள். வெறும் விக்ரஹ ஆராதனையே முடிவல்ல. அது ஒருபடி. ஒரு சாதனை. சாதகனை சகுணோபாஸனையிலிருந்து நிர்குணோபாஸனைக்கு அழைத்துச் செல்லும் மார்க்கம். இதை அறிந்தால் நமது ஹிந்து சமயத்தில் இருக்கும் பல்வேறு படிவங்களும், உருவங்களும் வெறும் பொம்மைக் கூத்தாக இராது.

இந்த வகையில் இறைவனை சிருஷ்டியுன்முகமாக்கும் பராசக்திக்குப் பல்வேறு உருவங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை உதாரணத்துக்காக ஈண்டு கூறுவோம். அவரவர்களின் ஆன்ம பரிபக்குவத்துக்கும், உபாஸனாபேதத்துக்கும், ஸ்தானபேதத்துக்கும், கோரும் பலன்களின் பேதத்துக்கும், அம்பாளின் கிரியா பேதத்துக்கும் தக்கபடி பராசக்தி பல்வேறு உருவங்களையும் பெயர்களையும் அடைகிறாள்.

ஏகைவ ஶக்தி: பரமேச்வரஸ்ய
பின்னா சதுர்த்தா வினியோககாலே ।
போகே பவானீ புருஷே ச விஷ்ணு:
கோபே ச காளீ ஸமரே ச துர்கா ॥

(एकैव शक्तिः परमेश्वरस्य
भिन्ना चतुर्धा विनियोगकाले ।
भोगे भवानी पुरुषे च विष्णुः
कोपे च काली समरे च दुर्गा ॥)

என்று போக ரூபத்தில் பவானி என்றும், புருஷரூபத்தில் விஷ்ணு வென்றும், கோபத்தில் காளீ என்றும், யுத்தத்தில் துர்க்கை என்றும் பரமேச்வருடைய அபின்னமான ஒரே சக்தி நான்குவிதமாக பரிணமிக்கிருள்.

பவானி என்ற நாமாவைப்பற்றி ஸ்ரீ சங்கரர், ஸௌந்தர்யலஹரி 22-ம் சுலோகத்தில் கூறியிருக்கின்ருர். ஓர் பக்தன் அம்பிகையின் விக்ரஹத்தின் முன்ஞல் நின்றுகொண்டு "பவானி! நீ உன் அடிமையான என்னிடம் கருணையுடன் கூடிய கடாக்ஷத்தைச் செலுத்த வேணும்" என்று சொல்ல மனதில் எண்ணினவனுய் 'பவானி' என்று ஆரம்பித்து 'த்வம்' (நீ) என்று சொன்னவுடனேயே தனது ஸாயுஜ்யத்தையே கொடுத்துவிடுகிருளாம். பக்தன் 'பவானி' என்பதை விளிச்சொல்லாகக் கருதினுன். அம்பிகை அதை வினைச்சொல்லாகக் கருதி 'த்வம் பவானி' (நீயாக ஆகவேண்டும்) என்று பக்தன் கோரினதாகக்கொண்டு அவனைத் தானுக ஆக்கிவிடுகிருள். தனது ஸாயுஜ்ய முக்தியை அளிக்கிருள். பக்தனுக்குச் சிறந்த பலனைக்கேட்கத் தெரியா விட்டாலும் அவன் சொல்லுக்குப் பொருளை மாற்றிக் கேட்டதாகக் கொண்டு அப்பயனைக் கொடுத்துவிடுகிருள், அவ்வளவு கருணுநிதி. 'க்ஷிப்ரப்ரஸாதினி' (**क्षिप्रप्रसादिनी**) அதாவது விரைவில் அருள் புரிபவள் என்கின்றது ஸஹஸ்ரநாமம் (869)

பராசக்தியே புருஷ ரூபத்தில் மஹாவிஷ்ணுவாகின்ருள். "கோப்த்ரீ" "கோவிந்தரூபிணீ" என்று வருவதும் காண்க.

ஸ்தான பேதங்களை அனுசரித்தும் அம்பாளுக்கு நாமங்களும் ரூபங்களும் இருப்பதை "லகுஸ்துதி" 17-வது சுலோகம் வர்ணிக்கின்றது. அதாவது "ஓ! தாயே! பக்தர்கள் உன்னை ஏழு ஸ்தானங்களில் ஸ்மரணை செய்து பலனை யடைகின்றனர். 1. அரசகுலத்தில்

இருப்பவர்கள் மஹாலக்ஷ்மீயென்றும், 2. யுத்த களத்தில் ஜயாதேவீ யென்றும், 3. துஷ்டமிருகங்கள் வசிக்கும் வழியிலே க்ஷேமங்கரீ யென்றும், 4. காடுகள் சூழ்ந்த மலை பிரதேசத்தில் சபரீ என்றும் 5. பூத, பிரேத, பிசாசங்களால் உண்டாகும் பயத்தில் மஹா பைரவீ யென்றும், 6. சிந்தை கலங்கிய சமயத்தில் ஸ்ரீ திரிபுரா என்றும் 7 ஜலத்தில் முழுகிய நிலையில் தாரா என்றும் உன்னை உபாஸித்து தங்களுக்கு ஏற்பட இருக்கும் விபத்துக்களைக் கடந்து விடுகின்றனர்."

இதே கிரந்தத்தில் மந்த்ர பாராயணத்தைக் கூறும் 18-வது சுலோகத்தில் 24 நாமாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாமாக்கள் ஒவ்வொன்றும் மந்த்ராக்ஷரங்களை உள்ளடக்கியவை. அவை மாயா, குண்டலினீ, க்ரியா, மதுமதீ, காளீ, கலா, மாலினீ, மாதங்கீ, விஜயா, ஜயா, பகவதீ, தேவீ, சிவா, சாம்பவீ, சக்தி, சங்கரவல்லபா, த்ரிநயனா, வாக்வாதினீ, பைரவீ, ஹ்ரீங்காரீ, த்ரிபுரா, பராபரமயீ, மாதா, குமாரி என்பவை. இந்த மிகப் பிரஸித்திபெற்ற நாமாக்களால் உன்னை ஜபம் செய்கின்றார்கள் என்பது சுலோகத்தின் பொழிப்புரை.

லலிதோபாக்யானத்தில் வெவ்வேறு பலன்களை உத்தேசித்து அம்பாள் வெவ்வேறு வர்ணங்களுள்ளவளாக தியானிக்கப் படுவதாகக் கூறப்பட்டிருக்கின்றது. முக்தியை விரும்புகின்றவர்கள் வெண்மை நிறமானவளாயும், வசீகரண சித்தியை விரும்புகின்றவர்கள் ரக்தவர்ண முடையவளாயும், கவித்வ சக்தியை விரும்புகின்றவர்கள் ஸ்படிகம் போன்ற நிறமுடையவளாயும், தனத்தை விரும்புகின்றவர்கள் தங்க நிறமுள்ளவளாயும், ஸர்வ ஸம்பத்தையும் விரும்புகின்றவர்கள் சியாமளையாயும் தியானம் செய்வதாய்க் கூறப்பட்டிருக்கின்றது.

தேவியின் நாமாக்கள் எண்ணற்றவை. அந்தந்த நாமாவுக்குத் தக்கபடி ரூப பேதங்களும் உண்டு. ஸ்ரீ சங்கரர் ஸௌந்தர்யலஹரியில் அம்பாளின் ஸ்தூல ரூபத்தை 7-வது சுலோகத்திலும், யந்த்ர ரூபத்தை 11-வது சுலோகத்திலும், மந்த்ர ரூபத்தை 32-வது சுலோகத்திலும், காம கலா ரூபத்தை 19-வது சுலோகத்திலும் கொடுத்திருப்பது சிந்திக்கத்தக்கது. சகுணோபாஸனையான ஸ்தூல ரூபத்திலிருந்து அருவுருவான யந்த்ர ரூபத்திற்குச்சென்று, அருவமான மந்த்ர ரூபத்தை

உபாஸித்து அதிஸூக்ஷ்மமான காம கலா ரூபத்தோடு ஐக்கியமாவதை படிப்படியாகக் காட்டியிருப்பது உபாஸகர்களுக்கு ஓர் விருந்தாக அமைந்திருக்கின்றது.

ஸ்ரீ சங்கரர் ஸௌந்தர்ய லஹரியில் நமக்குக் காட்டும் அம்பிகை பரசிவாபின்னமான மஹாதிரிபுரசுந்தரியேதான். அம்பாளின் பாத தூளியை சிறிது சேகரித்து வைத்துக்கொண்டு நான்முகன் பிரபஞ்சத்தை சிருஷ்டிப்பதாயும், அவ்வாறு சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சத்தை விஷ்ணு தனது ஆயிரம் தலைகளால் ஒருவாறு தாங்குவதாயும், ருத்ரன் ஊழி காலத்தில் இந்தப் பிரபஞ்சத்தை நன்ருகப் பொடியாக்கி தன் உடம்பில் உத்தூளனமாகப் பூசிக்கொள்கின்ருர் என்றும் இரண்டாவது சுலோகத்தில் கூறுகின்ருர். 97-வது சுலோகத்தில் "ஹே! பரப் பிரம்மத்துடன் இணைந்த பராசக்தியே! ஆகமரஹஸ்யங்கள் அறிந்த வித்வான்கள் உன்னை நான்முகனின் பத்தினியாகிய வாக்தேவதையாயும், விஷ்ணுவின் பத்னியான ஸ்ரீ தேவியாயும், சிவனுடைய பத்னியான பார்வதி என்றும் கூறினுலும் நீ இவர்களுக்கும் அப்பாற்பட்ட துரீய ரூபமுடையவளாயும், இன்னதென்று வர்ணிக்கமுடியாதவளாயும், அடையமுடியாதவளாயும், எல்லையற்ற மஹிமையுடையவளாயும், 'மஹா மாயை' என்ற ஸ்வரூப லக்ஷணமுடையவளாயும் இருந்து ஸர்வ பிரபஞ்சத்தையும் மோஹிக்கச் செய்துகொண்டிருக்கிருய்" என்கின்ருர். ஆகவே ஜகத் காரணவஸ்துவாகிய பிரம்மத்தின் அளவற்ற ஆற்றலே சிருஷ்டிமுதலிய பஞ்ச கிருத்யங்களிலும், பிரபஞ்சத் தோற்றத்தின் பல்வேறு நிலைகளிலும், படிகளிலும் அததற்குத் தக்கபடி விமர்சிப்பதைத் தான் அம்பிகையின் பல்வேறு நாம ரூபங்கள் காட்டுகின்றன என்ற அடிப்படையான தத்துவத்தை உணர்ந்தால் சகுணோபாசனையின் உண்மைக் கருத்தையும் லக்ஷியத்தையும் ஒருவாறு அறியலாம்.

கந்த புராணத்தில் மகேந்திர காண்டத்தில் சிங்கமுகன் சூரபன்ம னுக்கு குகப்பெருமானின் சொருப லக்ஷணத்தைக் கூறுவதாக கச்சி யப்ப சிவாச்சாரியார் கூறியுள்ளது இந்த சந்தர்ப்பத்துக்குப் பொருத்த மாக உள்ளது.

"தத்த மாற்றங்கள் நிறுவிய சமயிகள் பலரும்
கத்து புன்சொலை வினவினர் அவன் செயல் காணுர்

சுத்த வாதுள முதலிய தந்திரத்தொகுதி
யுய்த்துணர்ந்திடுநீரரே ஒரு சிறிது உணர்வார்"

என்றார். அதாவது சாக்தாகமங்களாகின்ற தந்த்ர சாஸ்த்ரங்களை அறிந்தவர்களே அம்பிகையின் சொரூப தடஸ்த லக்ஷணங்களை உள்ளபடி ஒருவாறு உணர முடியும். இன்றேல் பராசக்தியின் உருவங்களில் பலவற்றை அறியவே முடியாது. உதாரணமாக நீலநிறமாய் விரிந்த கூந்தலுடன், திகம்பரையாய் கோரைப்பற்களும் மண்டையோட்டு மாலையும் அணிந்து பரமசிவனின் மார்பின்மீது நின்று ஆடுவதுபோன்று மஹாகாளியின் ஒரு சித்திரத்தைப் பார்க்கலாம். அதுபோன்று காளராத்ரீ என்ற தேவதை திகம்பரையாய், நீலநிறமாய் கழுதை வாகனததில் அமர்ந்திருப்பதையும் பார்க்கலாம். ஜ்யேஷ்டாதேவியின் உருவங்கள் பல ஆலயங்களில் உள்ளன. திருவாரூரில் ஒன்று இருக்கின்றது. அந்த உருவத்தை பல ஆகமங்களின் தியான சுலோகங்கள் கூறுகின்றன. அம்சுமத்பேதாகமம், ஸுப்ரபேதாகமம், விஷ்ணுதர்மோத்தரம், பூர்வ காரணாகமம் முதலியனவற்றைப்பார்க்க. காச்யப சில்பத்தில் 48வது படலம் 8 முதல் 14 முடிய சுலோகங்களில் இரண்டுவிதமான உருவங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று:-"ஜ்யேஷ்டாதேவியானவள் இரண்டு கைகளும், தணல்போன்ற நிறமும், தொங்கிய உதடும், உயர்ந்த மூக்கும், தொங்கும் ஸ்தனமும், ஒட்டிய வயிறும், வலக்கையில் நீலோத்பலமும், இடக்கையில் பானபாத்திரமும், சிதறிச்சொருகிய கூந்தலும், காக்கை துவஜமும் இருகால்களும் தொங்க பத்ரபீடத்தில் ஸுகாஸனத்தில் வீற்றிருப்பாள்" என்று காணப்படுகின்றது. இந்த உருவ தியான சுலோகங்கள் அனைத்தும் அதிக ஆழமான கருத்துக்களையும், தத்துவங்களையும் குறிக்கும் என்பதை அறியாதவர், இப்படியும் ஓர் தேவதையா ? இதையும் வழிபடுவதா ? என்றுதான் கேட்பார்கள். நமது விக்ரஹங்கள் அரிய தத்துவங்களின் உருவகங்கள் என்பதை உணர்ந்தால் அவற்றின் மீது உண்மையான பக்தி ஏற்படும். பக்தியின்மூலம் வைராக்கியமும் ஞானமும் உண்டாகும். இதுதான் விக்ரஹ ஆராதனையின் இலக்ஷியம்.

ஐந்தாவது அத்தியாயம்

ஸ்ரீ சக்கரம்

நமது சநாதன ஹிந்து சமயங்களில் யந்த்ரங்கள் என்றும் சக்ரங்கள் என்றும் வழங்கும் க்ஷேத்ரகணித அமைப்புகள் மிகவும் முக்கியத்துவம் வகிக்கின்றன. திருமூலர் திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்தில் ஏரொளிச்சக்கரம், திரிபுரைச்சக்கரம், சாம்பவிமண்டலச்சக்கரம், நவாக்கரி சக்கரம், புவனபதிசக்கரம், திருவம்பலச்சக்கரம், வயிரவிசக்கரம் என்று ஏழுவிதமான சக்கரங்கள் கூறப்படுகின்றன. அவைகளை வரையும் முறையும், மந்த்ராக்ஷரங்களும், பிரயோக வகைகளும் கூறப்பட்டிருக் கின்றன.

ஸௌந்தர்யலஹரியின் நூறு சுலோகங்களுக்கும் நூறு யந்த்ரங்கள் ஆன்றோரால் கொடுக்கப்பட்டு அவற்றின் பிரயோகமுறை, பலன் முதலியனவும் தரப்பட்டிருக்கின்றன. அடியேனுடைய அனுபோகத் திலேயே அந்த யந்த்ரப் பிரயோகங்கள் விசேஷ பலனைத் தருவதைக் கண்டிருக்கிறேன். இது வெறும் கல்பனையல்ல. க்ஷேத்ர கணித முறையில் கோணங்களாயும், சதுரங்களாயும், வட்டங்களாயும் அமைக்கப் பட்ட யந்த்ரங்களுக்கு மந்த்ராக்ஷரங்களும், அதிதேவதைகளும் வழிபாட்டு முறைகளும், ஜப ஆவர்த்திகளும் வெகுவாகக் கொடுக்கப்பட்டிருக் கின்றன.

கந்தரனுபூதி 51 பாடல்களுக்கும் இத்தகைய பிரயோக சக்கரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பவும் வியாதிகளுக்கும், பேய், பிசாசு, விஷக்கடி முதலான உபாதைகளுக்கும் யந்த்ரங்கள் வரைந்து பூஜை செய்யப்பட்ட தகடுகளை தாயத்துகளில் அடக்கம் செய்து ரக்ஷைகளாகக் கட்டுவது வழக்கமாக இருக்கின்றது. 1944ம் ஆண்டில் பிரதிபந்தம் என்ற மனக்கோளாறு ஏற்பட்ட கன்னிகைக்கு எவ்வளவோ வைத்திய சிகிச்சை செய்தும் தீராமல் நவராத்ரி சமயத்தில் ஸப்தசதியி லுள்ள நவாக்ஷரி யந்த்ரம் எழுதி நவாக்ஷரீ ஜபம் செய்து ஒன்பது தினங்கள் பூஜையில் வைத்து ரக்ஷாபந்தனம் பண்ண அந்தக் கன்னிகையை விட்டு அந்த ரோகம் விலகிவிட்டது. இவ்வாறு பல யந்த்ரங்கள், பல மந்த்ரங்கள், பல பிரயோகங்கள் இருக்கின்றன.

ஸ்ரீ சக்ரத்தின் 7, 8, 9 வது ஆவரணங்களை மட்டும் தங்கத் தகட்டில் லேகனம் பண்ணினால் நவகோண யந்த்ரம் உண்டாகும். இதை முறைப்படி பூஜை செய்து ரக்ஷாபந்தனம் பண்ணினதால் மலடு என்று கருதப்பட்ட ஸ்திரீ கூட புத்ரனை அடைந்திருக்கிறாள் என்பது அனுபவ உண்மை. இதுவரை யந்த்ரத்தைப்பற்றி பொதுவாக முக வுரையாகச் சில கூறினோம்.

மஹாதிரிபுரசுந்தரியாகிற பராசக்தியின் யந்த்ரத்துக்கு ஸ்ரீயந்த்ரம், ஸ்ரீ சக்கரம் என்றும், சக்ரராஜம் என்றும் பெயர்கள் உள்ளன. இது போன்ற சிறப்பான யந்த்ரம் வேறு எதுவுமே யில்லையென்னலாம்படி புகழ்வாய்ந்தது. ஸ்ரீ வித்யா உபாஸகர்கள் ஸ்ரீ சக்ரபூஜா வழிபாடு நடத்தவேண்டியதவசியம் என்று வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. அம்பாளின் யந்த்ர ரூபம் இதுவே. ஸ்தூலமாக தியானம் செய்வது உருவத்யானம். ஸ்ரீ சக்ரமாக த்யானம் செய்வது அருவுருவ த்யானம். மந்த்ரரூபமாக த்யானிப்பது அருவத்யானம். இம்மூன்றுக்கும் மேலாகக் கருதப்படுவது காமகலா த்யானம்.

ஸ்ரீசக்ர அமைப்பைப்பற்றி ஸௌந்தர்யலஹரி 11வது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

சதுர்பி: ஸ்ரீகண்டை: ஶிவயுவதிபி: பஞ்சபிரபி
ப்ரபின்னாபி: ஶம்போர் நவபிரபி மூலப்ரக்ருதிபி: ।
சதுச்சத்வாரிம்ஶத்வஸுதள கலாஶ்ரத்ரிவலய
த்ரிரேகாபி: ஸார்த்தம் த்வ ஶரணகோணா: பரிணதா: ॥

(चतुर्भिः श्रीकण्ठैः शिवयुवतिभिः पञ्चभिरपि
प्रभिन्नाभिः शम्भोर्नवभिरपि मूलप्रकृतिभिः ।
चतुश्चत्वारिंशद्वसुदलकलाश्रत्रिवलय-
त्रिरेखाभिः सार्धं तव शरणकोणाः परिणताः ॥)

"தாயே! சிவாத்மகமான நான்கு முக்கோணங்களும், அவற்றி னின்றும் வேறான சக்தியாத்மகமான ஐந்து முக்கோணங்களும், ஆக ஒன்பது மூலப்ரக்ருதிகளோடு கூடிய உன்னுடைய இருப்பிடமான ஸ்ரீ சக்ரத்தின் கோணங்கள் அஷ்ட தளங்கள், ஷோடச தளங்கள்,

மூன்று மேகலைகள், மூன்று பூபுர ரேகைகள் என்பவைகளோடு கூடிய உருவத்தையுடைய நாற்பத்தி நான்காக இருக்கின்றன" என்பது இந்த சுலோகத்தின் பொருள்.

ஸ்ரீ சக்ரத்தில் இருக்கும் நான்கு சிவகோணங்கள் மேல்நோக்கியதாயும் ஐந்து சக்தி கோணங்கள் கீழ்நோக்கியதாகவும் இருப்பது ஒரு சம்பிரதாயம். இதை லயக்ரமம் என்று கூறுவர். அதாவது இந்த சக்ர பூஜையில் வெளியில் இருக்கும் பூபுரத்தில் ஆரம்பித்து ஒவ்வொரு ஆவரணமாக உள்ளே சென்று மத்தியில் இருக்கும் பிந்து ஸ்தானமாகின்ற ஒன்பதாவது ஆவரணத்தில் முடிப்பது. சிவகோணங்களாகிய நான்கை கீழ்நோக்கியும், சக்தி கோணங்கள் ஐந்தை மேல்நோக்கியும் வரைவது ஒரு சம்பிரதாயம். இதில் பிந்து இருக்கின்ற 8-வது ஆவரண முக்கோணம் மேல்நோக்கியிருக்கும். இதன் ஆராதனையில் பிந்து ஸ்தானத்தை முதலாவது ஆவரணமாக வைத்து ஒவ்வொரு ஆவரணமாக வெளியில் வந்து கடைசியாக பூபுரத்தை ஒன்பதாவது ஆவரணமாக ஆராதிப்பார்கள். இதற்கு சிருஷ்டிக்ரமம் என்று பெயர். இதைத்தான் லக்ஷ்மீதரர் அனுசரிக்கிறார். இதன்படி ஆவரணங்களின் அமைப்பை பாவனோபநிஷத்தில்

பிந்து த்ரிகோண வஸுகோண தசாரயுக்ம
மன்வச்ர நாகதளஸம்யுத ஷோடசாரம் ।
விருத்தத்ரயஞ்ச தரணீஸதனத்ரயஞ்ச
ஸ்ரீ சக்ரமேததுதிதம் பரதேவதாயா: ॥

(बिन्दुत्रिकोणवसुकोणदशारयुग्म-
मन्वश्रनागदलसंयुतषोडशारम् ।
वृत्तत्रयं च धरणीसदनत्रयं च
श्रीचक्रमेतदुदितं परदेवतायाः ॥)

என்ற சுலோகம் கூறுகின்றது. அதாவது 1. பிந்து, 2. த்ரிகோணம், 3. வஸு (8) கோணம், 4. 5. தசாரயுக்மம் (இரண்டு பத்துகோணங்கள்) 6. மன்வச்ரம் என்ற 14 கோணங்கள் 7. நாகதளம் என்ற 8 தளங்கள், 8. ஷோடசாரம் என்ற 16 தளங்கள், மூன்று ஒட்டியாணம் அல்லது

மேகலைகள், 9. தரணீஸதனத்ரயம் என்ற பூபுர ரேகைகள் 3, ஆக 9 ஆவரணங்கள்.

இவற்றையே பூபுரத்தை முதலாவது ஆவரணமாகக்கொண்டு ஷோடசதளம், அஷ்டதளம், சதுர்தசாரம் (14 கோணங்கள்) பஹிர்தசாரம் (வெளிப்பத்துக்கோணங்கள்), அந்தர்தசாரம் (உள் பத்துக்கோணங்கள்) அஷ்டாரம் (எட்டுகோணங்கள்) த்ரிகோணம், பிந்து என்று ஒன்பது ஆவரணமாகக் கொள்ளலாம். இதுதான் லயக்ரமவிதி. இந்த முறை தான் பெரும்பாலும் வழக்கத்தில் இருந்து வருகின்றது. இந்த இரண்டு அமைப்புகளுக்குத் தக்கபடி ஆவரணதேவதைகளின் ஸ்தானங்களும் மாறும். உதாரணமாக லயக்ரமத்தில் பூபுரத்தின் முதலாவது ரேகையில் உள்ள தசசித்திகளை இடதுபுறமாக (clock-wise) அமைப்பார்கள். சிருஷ்டி க்ரமத்தில் வலதுசாரியாக அமைப்பார்கள் (ante clock-wise) தேவிகட்கமாலா என்ற ஸஹஸ்ராக்ஷர வித்யையில் லயக்ரமமாகத்தான் ஆவரண தேவதைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனர். இது லலிதோபாக் யானம் 38வது அத்யாயத்தில் உள்ளது. இந்த வரிசையில்தான் நாமும் ஸ்ரீசக்ர விவரணம் இங்கு கொடுத்திருக்கிறோம்.

ஸ்ரீ சக்ரத்திலிருக்கும் ஒன்பது முக்கோணங்களும் சிவசக்தி ஸ்வரூபமாக இருப்பதால் அவை பிரபஞ்சத்துக்கு மூலகாரணங் களாகின்றன. அதனால் அவற்றை " யோனிகள் " என்று கூறுவார்கள். யோனி என்றால் பிறப்பிடம், ஜன்மஸ்தானம் என்பது பொருள். பொதுவாகவே தந்த்ர மந்த்ர சாஸ்த்ரங்களில் யோனி என்ற பதம் முக்கோணத்தைக்குறித்தே பிரயோகப்படுத்தப்பட்டிருக்கின்றது. நாம் இங்கு எடுத்துக்கொண்ட சம்பிரதாயப்படி மேல் நோக்கிய நான்கு முக்கோணங்கள் சிவாத்மகமாகின்றன. அவை மஜ்ஜை, சுக்லம், பிராணன், ஜீவன் என்ற நான்கு தத்வங்களைக்குறிப்பன. கீழ்நோக்கிய ஐந்து முக்கோணங்களும் சக்தியாத்மகமாகும். அவை த்வக், அஸ்ருக், மாம்ஸம், மேதஸ், அஸ்தி என்ற ஐந்து தத்துவங்களைக்குறிப்பன. இந்த சரீரமானது நவதாதுக்களாலானது என்பதையே இந்த நவகோணங்களும் காட்டுகின்றன. நமது சரீரமே ஸ்ரீசக்ரம் என்பதை பாவனோபநிஷத் விவரித்திருக்கின்றது. இதுமாதிரியே அண்டத்திலும் (1) பஞ்சபூதங்கள் (2) பஞ்சதன்மாத்ரைகள், (3) ஞானேந்திரிய பஞ்சகம், (4) கர்மேந்திரிய

பஞ்சகம், (5) பஞ்ச பிராணன்கள் ஆக ஐந்தும் சக்தியாத்மகம் என்றும், (1) மாயா (2) சுத்தவித்யா (3) மஹேச்வரர் (4) ஸதாசிவர் ஆக நான்கும் சிவாத்மகம் என்றும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ஒன்பது முக்கோணங்களுக்கு அப்பாற்பட்டதும், அவற்றிற்கு அதிஷ்டானமாயிருப்பதும் பரபிரஹ்மஸ்வரூபிணியான அம்பாளேயாதலால் அவள் பைந்தவஸ்தானம் என்ற பிந்துவில் இருக்கிருள்.

ஸ்ரீ சங்கரரது சுலோகத்தில் "சதுஶ்சத்வாரிம்ஶத்" என்று 44 ஸ்தானங்கள் கூறப்பட்டுள்ளன. சக்தி கோணம் 5-ம் சிவகோணம் 4-ம் ஒன்ருேடொன்று கூடுவதால் 43 முக்கோணங்களே வருகின்றன. அதாவது 4வது ஆவரணத்தில் 14 முக்கோணங்களும், 5வது ஆவரணத்தில் 10 முக்கோணங்களும், 6வது ஆவரணத்தில் 10 முக்கோணங்களும் 7வது ஆவரணத்தில் 8 முக்கோணங்களும், 8வது ஆவரணத்தில் ஒரு முக்கோணமும் ஆக 14+10+10+8+1=43 முக்கோணங்கள். அதோடு பைந்தவ ஸ்தானத்தையும் சேர்க்க 44 ஸ்தானங்கள் வருகின்றன.

ஸ்ரீ சக்ரத்தின் பாகங்களுக்கு ஆவரணங்கள் என்று பெயர். ஆவரணம் என்ற சொல்லுக்கு "கோட்டை", "மதில்" "வேலி" என்ற பொருள்கள் உள்ளன. ஸ்ரீ சக்ரத்துக்கு பிரத்யேகமான பூஜா விதானம் உள்ளது. தந்த்ர ராஜ தந்த்ரம் என்ற தலைசிறந்த கிரந்தத்தில் முழு விவரணம் காணலாம். சென்னை ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினீ ஸபையின் ஸ்தாபகரும், சிறந்த அனுபூதிமானுமான ப்ரஹ்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் "ஸபர்யா பத்ததி" என்ற சிறந்த பூஜா விதான கிரந்தம் செய்திருப்பதுமல்லாமல் "ஸபர்யா பத்ததி வாஸனு விமர்சம்" என்ற நூலில் ஸ்ரீ சக்ர நவாவரண பூஜையின் அதி ரஹஸ்ய தத்துவங்களை அத்வைத பரமாக விமர்சித்து தகுந்த மேற்கோள்கள் காட்டி ஸ்ரீ வித்யையே பிரஹ்ம வித்யை என்பதை ஐயம் திரிபு அற விளக்கியிருக்கிருர்கள். 1926ம் ஆண்டில் கும்பகோணம் ரிடையர்ட் என்ஜினியர் ப்ரஹ்மஸ்ரீ K. இராமசந்த்ர அய்யர் அவர்கள் "ஸ்ரீ தேவீ பூஜா விதானம்" என்ற நூல் ஒன்று வெளியிட்டிருக்கிருர்கள். இந்த பத்ததி நூல்கள் லயக்ரமமாகவே அமைந்திருக்கின்றன. துர்வாஸ மஹரிஷியால் செய்யப்பட்ட

லலிதா ஸ்தவரத்னம் என்ற நூலும் ஸ்ரீ பிரம்ம வித்யா விமர்சினீ சபையாரால் தமிழ் மொழிபெயர்ப்புடன் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. இந்நூலைப்பற்றிப் பின்னாலும் கூறப்படும்.

இந்த கிரந்தங்களின் உதவியைக் கொண்டே இங்கு ஸ்ரீ சக்ர ஆவரண தேவதைகளும் அவர்களின் தத்துவங்களும் விளக்கப் படுகின்றன.

1. முதலாவது ஆவரணம்

பூபுரம். சங்கரர் சுலோகத்தில் "த்ரிரேகா" என்று குறிக்கப் பட்டது. பூபுரத்ரயம் என்றும் சொல்லுவார்கள். அதாவது நாலு மூலைகளுள்ள சதுரமான மூன்று கோடுகள். ஒவ்வொரு பக்கத்திலும் வாயில்கள் உள்ளனவாக அமைந்துள்ளன. ஸ்ரீ சக்ரத்தின் மத்ய திரிகோணத்தைக் கீழ் நோக்கி இருக்கும்படியாக வைத்துப்பார்த்தால் பூபுரத்தின் கீழ்வாசல் கிழக்கு அல்லது பூர்வம், இடதுபுறவாசல் தக்ஷிணம் அல்லது தெற்குவாசல், மேல்வாசல் மேற்கு அல்லது பச்சிமா, வலதுபுரவாசல் வடக்கு அல்லது உத்தரம் எனப்படும்.

இந்த மூன்று சதுஷ்கோண ரேகைகளில் கடைசியாக வெளியில் இருப்பது பிரதம ரேகை. அதில் கிழக்கு வாசலிலிருந்து துவக்கி 1. அணிமா, 2. லகிமா, 3. மஹிமா, 4. ஈசித்வம், 5. வசித்வம், 6. ப்ராகாம்யம், 7. புக்தி, 8. இச்சா, 9. ப்ராப்தி, 10. ஸர்வ காமஸித்தி எனப்பட்ட 10 ஸித்தி தேவதைகள் இருக்கின்றனர். உலக வழக்கில் அஷ்டமாஸித்தி என்றுதான் கூறுவார்கள். ஆனால் சாக்தத்தில் பத்து ஸித்திகள் கூறப்பட்டிருக்கின்றன. ஞானம், ஆனந்தம் இவைகளின் அடைவிற்கு சாதனமான விஷயங்களை ஸித்திகள் என்று கூறுவது மரபு. ஞானேந்த்ரியங்கள் ஐந்தால் அறியப் படும் சப்த ஸ்பர்சாதி ஐந்தும், பாயு உபத்தம் என்ற இரண்டு கர்மேந்திரியங்களால் ஏற்படும் விஸர்ஜனங்கள் இரண்டும், மனதின் செய்கைகளான அபேக்ஷை, வியபேக்ஷை, உபேக்ஷை என்ற மூன்றும் சேர்த்து உண்டாகும் பத்துமே ஸித்திகளின் வாஸனைகள் என்பது தத்துவம்.

அடுத்த மத்யரேகையில் 1. பிராஹ்மி 2. மாஹேச்வரி 3. கௌமாரி 4. வைஷ்ணவி 5. வாராஹி 6: மாஹேந்த்ரி 7. சாமுண்டி 8. மஹாலக்ஷ்மி என்ற எட்டு மாத்ருகா தேவதைகள் இருக்கின்றனர். இந்த எண்மரும் அஷ்டதாதுக்களான சர்மம், இரத்தம், மாம்ஸம், மேதஸ், எலும்பு, மஜ்ஜை, சுக்கிலம், ஓஜஸ் என்பனவாம். இவை ஸ்தூல சரீரத்தை ஆச்ரயித்துள்ளவை. இவற்றை போகாயதன சரீரம் என்பர். அதாவது போகம் + ஆயதனம் = போகத்துக்கு இருப்பிடம் என்று பொருள்.

அடுத்த மூன்ருவது சதுஷ்கோணரேகையில் 1. ஸர்வஸம்க்ஷோபிணி 2. ஸர்வ வித்ராவிணி 3. ஸர்வாகர்ஷிணி 4. ஸர்வவசங்கரி 5. ஸர்வோன்மாதினி 6. ஸர்வ மஹாங்குசா 7. ஸர்வ கேசரி 8. ஸர்வ பீஜா 9. ஸர்வ யோநி 10. ஸர்வத்ரிகண்டா என்ற பத்து முத்ராசக்திகள் இருக்கின்றனர்.

இங்கு முத்ராதேவதைகளைப்பற்றி உபாஸகர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். லலிதா ஸஹஸ்ரநாமாவில் 977வது நாமா " தசமுத்ரா ஸமாராத்யா " என்பதற்கு ஸ்ரீ பாஸ்கர ராயர் எழுதிய வியாக்யானத்தைத்தழுவி இது எழுதப்படுகின்றது. முத்ரா என்ற பதத்திற்கு முதம் = சந்தோஷத்தை + ராதி = கொடுக்கின்றது என்று பொருள் கூறப்பட்டிருக்கின்றது. லோகத்தில் ஜனங்கள் ஸம்பாஷிக்கும் போது அவர்கள் கைகளால் காட்டும் ஸம்ஜ்ஞைகள் அவரவர்களுடைய மனோபாவத்தை வெளிப்படுத்துவதை சாதாரணமாய் பார்க்கின்ருேமல்லவா ? அதுபோன்று முத்ரைகளைக்காட்டுவதால் தேவதைகளுக்கு அந்தந்த பாவமானது ஏற்பட்டு பக்தர்களுக்கு பூர்ண அனுக்ரஹம் செய்வதாய்க் கருதப்படுகின்றது.

முத்ரைகள் என்பவை இரு கைகளிலும் உள்ள விரல்களைக் குறிப்பிட்ட முறைப்படி உபயோகித்து ஸம்ஜ்ஞை காட்டுவதாகும். பொதுவாய் வலதுகை சிவாம்சம், இடதுகை சக்தியம்சம் என்றும் இரண்டு கைவிரல்களாலும் காட்டப்படுவது சிவசக்தி ஸாமரஸ்யம் என்றும் கூறலாம். இந்த பத்து முத்ரைகளுக்கும் யோகினீ ஹ்ருதயத்துக்கு எழுதப்பட்டிருக்கும் வியாக்யானத்தில் தத்துவ விளக்கம் கூறப்

பட்டிருக்கின்றது. சிவ பூஜையிலும் சரி, நவாவரண ஸ்ரீசக்ர பூஜையிலும் சரி, முத்ரைகள் பிரதானஸ்தானம் வகிக்கின்றன. இவை பூஜாகாலத்தில் செய்யப்படவேண்டியவை. மற்ற விவரங்களுக்கு தந்த்ரராஜம், வாம கேச்வர தந்த்ரம் போன்ற நூல்களைப்பார்க்க அல்லது குருமுகமாய் அறிந்துகொள்ளவும். நவாவரண பூஜையின்போது ஒவ்வொரு ஆவரண பூஜையின் இறுதியில் ஸர்வஸம்க்ஷோபிணீ முதல் ஸர்வ யோநி முடிய ஒன்பது முத்ரைகள் காட்டவேண்டும். இந்த ஒன்பதின் சமஷ்டியே ஸர்வ த்ரிகண்டா முத்ரை.

இதுவரை பூபுரத்தில் அடங்கிய மூன்று சதுஷ்கோணங்களைப் பார்த்தோம். அதில் முதலாவது கோட்டில் 10 சித்திகளும், இரண் டாவது கோட்டில் 8 மாத்ருகா தேவதைகளும், மூன்ருவது ரேகையில் 10 முத்ரா தேவதைகளும் ஆக 28 தேவதைகள் இருக்கின்றனர். ஆவரண தேவதைகளை யோகினிகள் என்று அழைப்பது வழக்கம். இந்த இருபத்தி எட்டு யோகினிகளுக்கும் "பிரகடயோகினிகள்" என்று பெயர். இந்த பூபுரசக்கரத்துக்கு "த்ரைலோக்ய மோஹன சக்கரம்" என்று பெயர். இது பிருதிவி தத்துவத்தைக் குறிக்கும். பொதுவாய் ப்ரக்ருதியில் இருக்கும் பஞ்ச பூதங்களையும், பஞ்ச தன் மாத்ரைகளையும், பஞ்ச ஞானேந்திரியங்களையும், பஞ்ச கர்மேந்திரியங் களையும், இவற்ருல் ஜீவனுக்கு ஜாகர அவஸ்தையில் ஏற்படும் சகல அனுபவங்களையும், அன்னமய கோசமான ஸ்தூல சரீரத்தையும் இந்த ஆவரணம் குறிக்கும். துவம்பத வாச்யார்த்தனுக உள்ள விச்வன் என்னும் ஜீவனே இந்த சக்ரத்தின் அபிமானி இவ்வாவரணத்தை அதிஷ்டித்து நிற்கும் பராசக்திக்கு திரிபுரா என்று பெயர். அதாவது பிரமாதா, பிரமாணம், பிரமேயம் என்ற ஸ்தூல திரிபுடியோடு விளங்கு வதால் இங்கு அம்பிகைக்கு திரிபுரா என்று பெயர். ஜாகர அவஸ்தையில் இருக்கும் விச்வன் என்ற ஜீவனே இச்சக்கரத்தின் அதிஷ்டானமாகிய திரிபுரையோடு ஐக்கியம் செய்து சகல அனுபவங்களையும், செயல் களையும் அவளிடம் அர்ப்பணம் பண்ணி சரீராபிமானத்தை விடுவதே முதலாவது ஆவரண பூஜையின் லக்ஷியமும் பலனுமாகும்.

இதோடு முதலாவது ஆவரணமான பூபுரத்ரயம் முடிகின்றது. இனிப் பின்னுல் பாவனேபநிஷத் தாத்பர்யம் கொடுப்போம்,

2. இரண்டாவதாவரணம்

ஷோடஶ தளம் அதாவது பதினறு இதழ்களையுடைய தாமரை வடிவிலுள்ளது. இதற்கும் பூபுரத்துக்கும் இடையே திரிவலயம் என்ற மூன்று வட்டங்கள் உள்ளன. இவற்றை ஆவரணமாகக் கணக்கிடுவது கிடையாது. ஆனல் ஸ்ரீ சக்ர லேகனத்தில் இவை அவசியம் இருக்க வேண்டும். மூன்று வளையங்கள் என்பவை மூன்று வட்டங்கள் வரைவதால் குறிக்கப்படுவதில்லை. நான்கு வட்டங்கள் வரைந்து ஊடேயிருக்கும் மூன்று இடைவெளிகளே திரிவலயம் எனப்படுவது. பூபுரம் பிருதிவிதத்துவம் என்பதைப் பார்த்தோம். சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சமே பிருதிவீ தத்துவம் என்பதாகும். பூபுர தேவதைகளை ஆராதிப்பதால் பிரபஞ்ச விருத்திகளைக் கடந்த நிலை ஏற்படுகின்றது. பிரமாதா, பிரமாணம், பிரமேயம் என்ற திரிபுடி ஒழிந்தால்தான் உபாஸகனின் அபீஷ்ட ஸித்தி ஏற்படும். காண்பவன், காணப்படும் பொருள், காட்சி; ஞாதா, ஞேயம், ஞானம் என்பவைதான் திரிபுடி. ஆக இந்த திரிவலயங்கள் பிரகிருதி தததுவத்துக்கும் ஜீவனுடைய விகாஸத்துக்கும் இடையே அரணாக அமைந்துள்ளன. மேலும் காம கலா விலாஸம் 34 வது சுலோகத்தில் ஸ்ரீ சக்கிரத்திலுள்ள வ்ருத்த த்ரயங்கள் ரக்தம், சுக்லம், மிச்ரம் என்னும் த்ரிபிந்துக்களின் வடிவம் என்றும் அவை முறையே அக்னி, ஸோம, ஸூர்யர்களின் தேஜஸ் பரிணமமே என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இதன் விவரத்தைக் காம கலையைப்பற்றிக் கூறும்போது விமர்சிப்போம்.

ப்ரக்ருதி தத்துவத்தைக்கடந்து திரிபுடியற்ற நிலையில் இரண்டாவது ஆவரணமான ஷோடசதளம் அமைந்திருக்கின்றது. இந்த ஆவரண சக்ரத்துக்கு ஸர்வசாபரிபூரக சக்ரம் என்று பெயர். இந்த சக்ரத்திலுள்ள தேவதைகளுக்கு குப்த யோகினிகள் என்று பெயர், இவ்வாவரணத்தின் சக்ரேச்வரீ த்ரிபுரேசீயாகும். இதில் லகிமா ஸித்தியும் ஸர்வவித்ராவிணீ முத்ரையும் வியாபகமாய் இருக்கின்றன. இந்த சக்ரத்தின் பீஜாக்ஷரம் ஸம் (सं) என்னும் சந்த்ரபீஜமாயிருப்பதால் சந்த்ரனை அதிதேவதையாக வுடைய மனமும் அம்மனத்தின் விகாரங்களான ஸூக்ஷ்மதிரிபுடியுமே இந்த சக்ரத்தில் ஸாதகனுக்கு ஏற்படும் உபாதியாகும். அதாவது இது ஸ்வப்னவஸ்தை. இதில் மனமே பிரதானமானது. இந்த நிலையிலுள்ள

ஜீவன் தைஜஸன் எனப்படுவன் த்வம்பதவாச்யனுன இந்த தைஜஸனே இந்த சக்கரத்தின் அபிமானி. இந்திரியங்கள் பத்தும் அடங்கி மனம், பிராணன், ஆன்மா என்ற மூன்று தத்வங்களே இதில் பிரகாசிக்கின்றன. அதுபோன்றே ஸ்தூல பூதங்கள் மறைந்து அவற்றின் ஸூக்ஷ்ம நிலையாகிற தன்மாத்ரைகளான சப்த ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தங்களும் இருக்கின்றன. அதனுலேயே சாதாரண மக்களும் ஸ்வப்னத்தில் சப்தங்களை கேட்பதும், ஸ்பர்சங்களை உணர்வதும் கந்தங்களை முகர்வதும் போன்ற அனுபவம் அடைகின்றுர்கள். பூபுரத்தில் அன்னமயமான பௌதிக சரீரமும் ஸ்தூலமான பஞ்சபூதங்களும் செயல்படுவதுபோன்று இந்த சக்ரத்தில் பிராணமயமும் சூக்ஷ்ம சரீரமும் செயல்படுகின்றன. மேனுட்டினர் இதை **Astral plane** என்று கூறுவர். அதாவது சந்த்ர லோகம் என்பது பொருள். நாமும் இந்த சக்ரத்தில் சந்த்ரபீஜமான 'ஸம்' என்ற அக்ஷரத்தையும், சந்த்ரவர்ணமான ச்வேதவர்ணத்தையும் பாவிக்கின்றேம்.

பதினுறு தளங்களிலிருக்கும் பதினுறு யோகினிகளாவன :— காமாகர்ஷிணி, புத்த்யாகர்ஷிணி, அஹங்காராகர்ஷிணி, சப்தாகர்ஷிணி, ஸ்பர்சாகர்ஷிணி, ரூபாகர்ஷிணி, ரஸாகர்ஷிணி, கந்தாகர்ஷிணி, சித்தாகர்ஷிணி, தைர்யாகர்ஷிணி, ஸ்மிருத்யாகர்ஷிணி, நாமாகர்ஷிணி, பீஜாகர்ஷிணி, ஆத்மாகர்ஷிணி, அம்ருதாகர்ஷிணி, சரீராகர்ஷிணி. இந்தப் பதினுறு யோகினிகளை 'நித்யா' தேவதைகள் என்று சொல்லுவார்கள். அன்னமய கோசமான ஸ்தூல சரீரம் அழிந்து பிராணமய கோசமான ஸூக்ஷ்ம சரீரத்தில் ஸ்வப்னுவஸ்தையிலிருக்கும் தைஜஸாத்மா ஜாக்ரதவஸ்தையில் அனுபவித்தவைபோக மீதியாயுள்ள பிராரப்த கர்மகாமனைகளை பரிபூர்ணமாய் அனுபவிக்குமாதலாலே இந்த சக்ரத்துக்கு ஸர்வாசா பரிபூரக சக்ரம் என்ற பெயர் சித்திக்கின்றது. ப்ராணுதி பஞ்சகம் (பிராணன், அபானன் வியானன், உதானன் ஸமானன் என்ற ஐந்தும்) இந்திரியதசகம் (ஞானேந்திரியம் 5 கர்மேந்திரியம் 5 ஆக பத்து) மனஸ் ஒன்று ஆக பதினுறும் இந்த பதினுறு யோகினிகளாவார்கள் என்று யோகினீ ஹ்ருதய வியாக்கியானத்தில் கூறப்பட்டுள்ளது. ஸ்வப்னுவஸ்தையில் தோன்றுவது வாஸனுவுலகம். ஆகையால், பிராணுதி ஐந்தும் இந்திரியங்கள் 10ம் அவற்றின் சூக்ஷ்ம

நிலையில் மனதால் கிரஹிக்கப்படுவதால் அவற்றை ஸ்தூலமாகக் கொள்ளக்கூடாது. ஸ்வப்னாவஸ்தையிலும் ஸ்வப்னம் காண்கின்ற ஜீவன் இந்திரியங்களாலும் பிராணன்களாலும் மனஸாலும் அனுபவம் அடைவதை நாம் காணலாம். கேவலம் மனதினால் கற்பிக்கப்பட்ட ஓர் ஸூக்ஷ்ம ப்ரபஞ்சத்தில் இவை செயல் படுவதால் இவற்றிற்கு குப்தயோகினிகள் என்ற நாமா ஏற்படுகின்றது. இவர்கள் பிராணன் முதலிய வாயுக்களின் சஞ்சாரத்தாலும் மனதின் சலனத்தாலும் உண்டாகும் விருத்தி வடிவங்களாக உள்ளவர்கள். ஸ்வப்னாவஸ்தையில் உயிர் கண்டத்திலிருப்பதால் இது சந்த்ரஸ்தானமாயும் (ஷோடச கலைகளையுடையது சந்த்ரன்) 16 தளங்களையுடைய விசுத்தியுமாகும். விசுத்தி சக்கரம் 16 தளங்கள் உள்ளது.

3. மூன்றாவது ஆவரணம்.

ஸ்ரீ சங்கரர் சுலோகத்தில் வஸுதளம் என்றும், பாவனோபநிஷத்தில் நாகதளம் என்றும் கூறப்பட்ட எட்டு தளபத்மம். வஸுக்கள் எண்மர். அதுபோன்று நாகம் என்றால் யானை, அவை அஷ்டதிக்கஜங்கள் என்பதால் எட்டையே குறிக்கும். இந்த சக்ரத்துக்கு ஸர்வ ஸம்க்ஷோபண சக்ரம் என்று பெயர். துர்வாஸர் தமது ஸ்ரீ லலிதா ஸ்தவ ரத்தினத்தில் இதை ஸர்வக்ஷோபகாரகம் என்று 133 வது சுலோகத்தில் குறிப்பிடு கின்றார். இந்த சக்கரத்திலுள்ள தேவதைகளுக்கு குப்த தரயோகினிகள் என்று பெயர். இந்த ஆவரணத்தின் சக்ரேச்வரிக்கு த்ரிபுர ஸுந்தரி என்று பெயர். இதற்கு பீஜம் சிவ பீஜமாகிற ஹம் (हूं) என்பது. சிவனுடைய அஷ்ட மூர்த்தங்கள் என்பவை பஞ்ச பூதங்கள், சூரியன், சந்திரன், ஆன்மா என்பன. இந்த அஷ்டமூர்த்தங்களோடு இருக்கும் சிவாபின்ன சித்சக்திகளே இந்த எட்டு யோகினிகள் ஆகின்றனர். ருத்ரனுடைய கார்யமான ஸம்ஹாரத்தை இச்சக்ரம் சூசிப்பிக்கின்றது. ஸம்ஹாரத்தை பிரளயம் என்றும் சொல்லலாம். ஸர்வஸம்ஹாரம் மஹாப் பிரளயம் எனப்படும். ஆனால் ஜீவர்கள் தினந்தோறும் அனுபவிக்கும் ஸுஷுப்தி அல்லது ஆழ்ந்த உறக்கத்துக்கு தினப் பிரளயம் என்று பெயர். அதாவது மூன்றாவது அவஸ்தையாகிற ஸுஷுப்தி ஸ்தானமே இந்த சக்ரம். ஸுஷுப்தியவஸ்தையில் விஷயங் களும், விஷயாகார விருத்திகளும் அடங்கி ஜீவன் மட்டும் இருக்கும்.

இந்த ஜீவனுக்கு பிராக்ஞன் என்று பெயர். இவனே இந்த ஸ்தானத்தில் துவம்பதவாச்யார்த்தமாவான். உபாதியற்ற ஆனந்தமயனுய் இருப்பான் இவனது சரீரம் காரண சரீரம்.

இதில் அடங்கியுள்ள எட்டு தேவதைகளாவது: அனங்ககுஸுமா, அனங்கமேகலா, அனங்கமதனு, அனங்கமதனுதுரா, அனங்கரேகா, அனங்கவேகினீ, அனங்காங்குசா, அனங்கமாலினீ என்பவர். இவர்களின் நிறம் ஜபாகுஸுமம் அதாவது செம்பரத்தைப்பூப்போன்றது. இந்த சக்ரத்தில் மஹிமா ஸித்தியும், ஸர்வாகர்ஷிணீ முத்ரையும் வியாபகமாயிருக்கின்றன. இந்த எட்டு யோகினிகளும் புர்யஷ்டகத்தின் ஸூக்ஷ்ம ஸ்வரூபிணிகளாவார்கள். ஸூக்ஷ்ம புர்யஷ்டகமாவது, ஆன்மா (புருஷன்) அந்தக்கரணம் 4, தசேந்திரியங்கள் 10, பஞ்சபூதங்கள் 5, பஞ்சதன் மாத்ரைகள், அஹங்காரம், மஹத், ப்ரக்ருதி, என்பன எட்டாம். இந்த எட்டு சக்திகளும் அனங்கத்வம் அதாவது சரீரமின்மையுடையவர் களாதலால் குப்ததரம் அல்லது அதிரஹஸ்ய யோகினிகள் ஆகின்றுர்கள். இந்த சக்ரத்தின் அதிஷ்டாத்ரி திரிபுரஸுந்தரி என்று முன்பே சொன்னேம். முந்தின இரண்டு ஆவரணங்களில் முறையே ஜாகராவஸ்தையும் ஸ்வப்னுவஸ்தையும் இருப்பதால் அவற்றில் விஷய பிரவிருத்தியினுல் ஏற்படும் சிரமத்தை மூன்ருவதான சுஷுப்தி அவஸ்தையில் சமனப்படுத்தி ஜீவனுக்கு தனது ஸ்வரூபமான ஆனந்தத்தைத்தருபவள். ஆனதால் அவளை திரிபுரஸுந்தரி என்று அழைக்கிருேம்.

ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களில் தோன்றும் பாஹ்ய ஆந்தரப் பிரபஞ்சங்கள் காரண சரீரத்தில் நன்ருக ஆகர்ஷிக்கப்பட்டு லயமாகி விடுவதால் ஜனிக்கும் ஆனந்தம் சுஷுப்தி தசையில் அனுபவிக்கப் படுகின்றது. எப்படி எனில், "நான் ஒன்றுமறியாமல் நன்ருகத் தூங்கினேன்" என்று சொல்லுகிருேமல்லவா. ஸர்வமும் ஆகர்ஷிக்கப் பட்டு தினப்பிரளயமான சுஷுப்தியில் லயமடைந்திருப்பதால் இந்த சக்ரத்தில் காட்டப்படும் முத்ரை ஸர்வாகர்ஷிணியாகின்றது.

4. நான்காவது ஆவரணம்.

இது பதினான்கு கோணங்களையுடையது. அதனால் இதற்கு சதுர்தசாரம் அல்லது சதுர்தசகோணம் என்று பெயர். இந்த ஆவரணத்துக்கு ஸர்வ ஸௌபாக்ய தாயக சக்ரம் என்று பெயர். இந்த சக்ரத்திலுள்ள பதினான்கு யோகினிகளும் ஸம்ப்ரதாய யோகினிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த ஆவரணத்தின் சக்ரேச்வரி த்ரிபுரவாஸினிபாவாள். இதில் ஈசித்வ ஸித்தியும் ஸர்வ வசங்கரீ முத்ரையும் வியாபகமாயிருக்கின்றன. இது துரீயாவரணம் அல்லது நான்காவது ஆவரணமாகையாலே துரீயாவஸ்தையைக் குறிக்கின்றது. இதன் பீஜாக்ஷரம் ஸ்ரீ வித்யைக்கே அதிமுக்யத்வம் வாய்ந்ததும் மஹாமாயா பீஜம் என்று அழைக்கப்பட்டதும் துரீயாக்ஷரம் என்று பரி பாஷையில் கூறப்படுவதும், பஞ்சதசாக்ஷரீ மந்த்ரத்தோடு சேர்த்து உச்சரிக்கப்படுவதுமான அக்ஷரமேயாகும். அது ஈம் (ह्रीं) என்பது. இந்த ஓர் எழுத்து மிக ரகஸியமானதாயும், மிக மஹிமை வாய்ந்ததாயும் கருதப்படுகிறது. காமக் கலையையே பிரக்ருதியாக உடையதாகையால் ஸர்வ ஜகத்காரண மாயையோடு சேர்ந்த பரமேச்வர ஸ்வரூபத்தைக் குறிப்பிடுவதாகும். துரீயாவஸ்தையில் ஈச்வர விசாரத்தோடு கூடிய மனமும் அம்மனோவிருத்திகளுமே துரீயாவரண தேவதைகளாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

"மோசக ஸ்வரூப தத்பத வாச்யார்த்த ஈச்வர
பாவனா துரீயாவரணே ஸூசிதா ।
ஈச்வரஸ்வரூபம் து சதுர்தச
கோணாத்மக சதுர்தச புவனேஷு
அநுப்ரவேச லக்ஷணயா போத்தவ்யம்" ॥

मोचकस्वरूपतत्पदवाच्यार्थेश्वरभावना तुरीयावरणे सूचिता ।
ईश्वरस्वरूपं तु चतुर्दशकोणात्मकचतुर्दशभुवनेषु अनुप्रवेशलक्षणया बोद्धव्यम्॥

என்று இருப்பது காண்க. மூன்றவஸ்தைகளையும் தாண்டி த்ரிபுடி பேதத் தோற்றம் ஒழிந்து அபேத தர்சன ஸ்வரூப ஞானத்தை யடைவதே ஸர்வ ஸௌபாக்யம் என்பதின் பொருளாகும்.

" ஶிவாத்வைத பாவனா சைவ ஸௌபாக்யம் "

(शिवाद्वैतभावना चैव सौभाग्यम् ।)

என்பது காண்க. அதாவது அத்வைத பாவனேயே ஸௌபாக்யம் என்று சொல்லப்படும். ஈகார ப்ரக்ருதியாத்மகமாயும், சதுர்தச புவனுத்மக மஹாமாயா ரூபமாயும், மாதுளம்பூ நிறத்தையுடையதுமான சதுர்தசாரத்திலுள்ள தேவதைகள் 1. ஸர்வஸம்க்ஷோபிணீ சக்தி 2. ஸர்வவித்ராவிணீ சக்தி 3. ஸர்வாகர்ஷிணீ சக்தி 4. ஸர்வாஹ்லாதினீ சக்தி 5. ஸர்வஸம்மோஹினீ சக்தி 6. ஸர்வஸ்தம்பினீ சக்தி 7. ஸர்வ ஜ்ரும்பிணீ சக்தி 8. ஸர்வவசங்கரீ சக்தி 9. ஸர்வரஞ்ஜனீ சக்தி 10. ஸர்வோன்மாதினீ சக்தி 11. ஸர்வார்த்தஸாதினீ சக்தி 12. ஸர்வஸம்பத்தி பூரணீ சக்தி 13. ஸர்வமந்த்ரமயீ சக்தி 14. ஸர்வ த்வந்த்வ க்ஷயங்கரீ சக்தி என பதினன்கு பெயர்கள், பரிபக்குவம் அடைந்த ஆன்மாக் களுக்கு அபேத தர்சன ஞானத்தை இறைவனே குருநாதனுக வந்தருளி அளிப்பான் என்பதால் ஸம்பிரதாயம் என்ற பெயர் ஏற்பட்டது. துரியாவஸ்தையில் அனுபவிக்கும் ஜீவப்பிரம்ம அபேத ஞானம் குரு முகமாகவே கிடைக்கும். அதை அடையச் செய்யும் இந்த துரீயாவரண தேவதைகளுக்கும் ஸம்ப்ரதாய யோகினிகள் என்று பெயர் ஸித்திக் கின்றது. பரமேச்வரனே ஆதி ஜகத்குருவாவர். அவரே மோசகர் என்றும் மோக்ஷப்ரதர் என்றும் கூறலாம்.

ஸூதஸம்ஹிதை முக்தி கண்டம் 4. 5. அத்யாயங்களில் மோசகன் என்பது ஸர்வேச்வரனேயாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆத்ம ரூபமாயுள்ள நானே ஸம்ஸார மோசகனுகின்றேன்– " ஸமஸ்த பசுக்களுடைய ஸம்ஸார மோசகன் நானே " முக்தி 4. 21, 24. என்று வருவது காண்க. 5வது அத்யாயத்தில் ஆசார்யரே மோசக பிரதர் என்று கூறுகின்றது. ஆகையால் ஆதிகுருவாகிய பரமேச்வரனே மோசகனும், மோக்ஷப்ரதரும் ஆவர் என்பதில் சந்தேகம் வேண்டாம். " I am the path and the goal " என்று இயேசு கிருஸ்துகூடக் கூறுகின்றனர். இந்த ஆவரணத்தின் பதினான்கு தேவதைகளும் பதினான்கு லோகங்களுக்கும் ஈச்வரனுயும், நியந்தாவாகவுமுள்ள ஏக வஸ்து விஷயமான பதினான்கு மனேவிருத்திகளேயாகும். அதாவது

ஒவ்வொரு லோகத்தையும் தோற்றுவிக்கும்போது பரவஸ்துவில் சூக்ஷ்ம ஸ்பந்தன சப்தங்களாகின்ற விமர்சசக்திகளே யென்று அறிய வேண்டியதவசியம். இந்த ஆவரணத்தின் அதிஷ்டாத்ரீ த்ரிபுரவாஸினீ என்று கூறினேம். வாஸி – என்ற சொல் மரத்தைச்செதுக்கப் பயன்படும் "வாய்ச்சி" என்ற ஆயுதத்தையும் குறிக்கும். ஆகவே திரிபுரவாஸினி என்ற பதத்துக்கு த்ரிபுடியைக்களையும் ஆயுதம் என்ற பொருள் கொள்ளவேண்டும்.

"புரத்ரயே யோகாதி க்லேச பேதேன ஸித்தா த்ரிபுரவாஸினீ"

(पुरत्रये योगादिक्लेशभेदेन सिद्धा त्रिपुरवासिनी)

என்ற யோகினீஹ்ருதய வாக்கையும் பார்க்க.

5. ஐந்தாவது ஆவரணம்

நான்காவது ஆவரணமான சதுர் தசாரத்திலிருந்தே ஆவரணங்கள் யாவும் முக்கோணங்களாக அமைந்திருக்கின்றன. பதினான்கு கோணங்கள் கொண்ட நான்காவது ஆவரணத்தை அடுத்து உள்ளே இருப்பது பத்து முக்கோணங்கள். இதை பஹிர் தசாரம் என்று கூறுவர். அதாவது வெளியிலுள்ள பத்து முக்கோணங்கள் என்று பொருள். ஏனெனில் இதற்கும் உள் இருக்கும் ஆருவது ஆவரணமும் பத்து முக்கோணங்களையே கொண்டிருப்பதால் அதை உள் பத்து என்றும் இதை வெளிப்பத்து என்றும் கூறப்படுகிறது. இதற்கு ஸர்வார்த்தஸாதக சக்ரம் என்றும் பெயர். இந்த பத்துக்கோணங்களிலிருக்கும் தேவதைகளுக்கு குலோத்தீர்ண யோகினிகள் என்று பெயர். இந்த ஆவரணத்துக்கு அதிஷ்டாத்ரியாக இருக்கும் சக்ரேச்வரி திரிபுராஸ்ரீ எனப்படுவாள். இதில் வசித்வஸித்தியும் ஸர்வோங்மாதினீ முத்ரையும் வியாபகமாய் இருக்கின்றன.

முந்தின ஆவரணத்தில் திரிபுடி பேதத் தோற்றம் ஒழிந்து அபேத தர்சன ஸ்வரூபத்தையடைவதே ஸௌபாக்யம் என்றும் இந்த ஜீவப்ரம்ஹ அபேத ஞானம் குருவினுலேயே கிட்டும் என்றும் பார்த்தோம். இந்த ஆவரணத்தில் ஈச்வரனே ஸத்குருவாகத் தோன்றும் தத்துவத்தை உணர்த்துகின்றது என்னலாம். குலம் என்ற

சொல்லுக்கு குரு பரம்பரை என்று பொருள் கொண்டு அதை உத்தீர்ணம் செய்வது அல்லது விருத்தி செய்தல் என்று பொருள்படுவதால் இந்த யோகினிகளுக்குக் குலோத்தீர்ண யோகினிகள் என்ற பெயர் ஸித்திக்கின்றதாம். குருபரம்பரையின் விருத்தியாவது பக்குவமுள்ள சிஷ்யன் குருவை நாடிச்செல்லுவதாலும், குருவால் அங்கீகரிக்கப் படுவதாலும் பரம்பரை வளர்கின்றது. அவ்வாறு குருவின் உபதேசத் தாலும் கடாக்ஷத்தாலும் உண்டாகும் மனோவிருத்திகள் அல்லது அனுபவங்களே இந்த ஆவரண தேவதைகளின் பெயர்களில் அமைந் திருப்பதும் காண்க. ஸர்வஸித்திப்ரதா, ஸர்வஸம்பத்ப்ரதா, ஸர்வப்ரியங்கரி, ஸர்வ மங்களகாரிணீ, ஸர்வகாமப்ரதா, ஸர்வ துக்க விமோசினி, ஸர்வ ம்ருத்யுப்ரசமனி, ஸர்வ விக்ன நிவாரிணி, ஸர்வாங்க ஸுந்தரி, ஸர்வ ஸௌபாக்யதாயினி என்ற பத்து யோகினிகள் இந்த ஆவரண தேவதைகள்.

ஸர்வஸித்தி ப்ரதா என்றால் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தை அடைவதைவிட சிறந்த ஸித்தி வேறென்று இருக்கமுடியாதல்லவா! அதுவும் குருவின் கடாக்ஷத்தாலேயே உண்டாகும் என்பது ப்ரஸித்தம். ஸர்வஸம்பத் என்பது எது. வெறும் ஸம்பத்து என்று சொல்லக்கூடிய செல்வங்களையடைவதா? அது மென்மேலும் ஆசையையும் துக்கத்தை யும் தானே விளைவிக்கும். ஆக ஆசையற்ற செல்வமே ஸர்வஸம்பத்து என்ற சொல்லால் குறிக்கப்படுதல் வேண்டும். இந்த மாதிரி நிராசையால் அடையும் ஆனந்தமே ஸர்வப்ரியங்கரி என்பது – அதாவது எப்போதும் சந்தோஷமாய் இருப்பது. ஆசையற்ற ஆனந்தத்தில் விளைவதே ஸர்வ மங்களமாகும். அப்போது மனம் ப்ரஹ்மத்தை நாடியிருக்கும். அதனால் ஆத்மாவுக்கு உந்தமான காமனைகள் அடைவதே ஸர்வகாமப்ரதை. அதனால் உண்டாவது துக்க நிவர்த்தி. அதாவது பிறப்பு இறப்பு என்பதே துக்கம். அது குருபதேசத்தால் ஏற்பட்ட ஞானத்தால் உண்டாவது துக்கவிமோசனம். அதனின்று ம்ருத்யு நிவாரணம். எல்லா பேதத்தோற்றங்களும் நீங்குவது விக்ன நிவாரணம் ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களின் ஸர்வ அங்கங்களின் உபாதியற்ற நிலையில் இருப்பதே ஸர்வாங்க ஸுந்தரியாகும். கடைசியாக ஜீவப்ரஹ்ம அபேத ஞானமே ஸர்வ ஸௌபாக்யம் என்பது முன்பே கூறப்பட்டது. ஆக ஸத்குரு உபதேசத்தாலும் கடாக்ஷத்தாலும் "சிவோஹம்" பாவனை

அடைகிறுன். ஈச்வரனே ஸத்குருவாக வருகிறுன் என்ற தத்துவங்களே இந்தசக்ரம் விளக்குகின்றது. ஸர்வ + உந்மாதினீ என்ருல் தீவிரதரமான சக்திநிபாதத்தில் ஆழ்ந்து உன்மத்தமாய் இருத்தல். இத்தகைய அதிகாரிக்கு ஸர்வ பிரபஞ்சமும் தன்வயமாயிருக்குமாதலாலே இந்த ஆவரண ஸித்தி வசித்வ ஸித்தியாகின்றது. இதற்கு பீஜாக்ஷரம் ए (ஏம்)

"ஏகார ப்ரக்ருதிகதசாவதாராத்மக விஷ்ணு ஸ்வரூபே ப்ரபா பராபூத ஸிந்தூரே பஹிர்தசாரே"

(एकारप्रकृतिकदशावतारात्मकविष्णुस्वरूपे प्रभापराभूतसिन्दूरे बहिर्दशारे)

என்று பூஜாவிதானம் ஆரம்பிக்கின்றது. நிறம் - ஸிந்தூர வர்ணம். அதாவது குங்குமம் போன்ற சிவப்பு.

6. ஆருவது ஆவரணம்

இந்த ஆவரணமும் பத்து முக்கோணங்களாலாயது. இதை அந்தர் தசாரம் அல்லது உள் பத்துக் கோணங்கள் என்று கூறுவர். இதற்கு ஸர்வரக்ஷாகர சக்ரம் என்று பெயர். இதிலிருக்கும் பத்து தேவதைகளுக்கு நிகர்ப யோகினிகள் என்று பெயர். இந்த ஆவரண சக்ரேச்வரி த்ரிபுரமாலினி எனப்படுவள். இதில் பிரகாம்ய ஸித்தியும் ஸர்வ மஹாங்குசா முத்ரையும் வியாபகமாய் இருக்கின்றன. யோகினீ ஹ்ருத்ய வ்யாக்யானத்தில் ஸ்ரீ அம்ருதானந்தர் எழுதுவதாவது: துவைத பாவமாகும் பிடியில் சிக்கிய ஜீவனை தனது உண்மை ஸ்வரூபத்தை அடையச்செய்து மறுபடியும் துவைத பாவப்பிடிப்பில் அகப்படாமலிருக்க குருபதேச சிரவணம் என்பதே முமுக்ஷுவுக்கு ரக்ஷையாக இருப்பதால் இந்த ஆவரணத்தின் தத்துவம் குரு உபதேச சிரவணம் என்பதும் இந்த ஆவரணத்துக்கு ஸர்வ ரக்ஷாகர சக்ரம் என்ற பெயரும் ஸித்திப்பதாய்க் கூறப்படுகின்றது. பஞ்சகோசங்களுக்கும் உள்ளே அதிரஹஸ்யமான ஸ்தலத்தில் இருப்பது பிரத்தியகாத்மாவாகும். இந்த ஆத்மாவை அறியும் விருத்திகளே நிகர்ப்பயோகினிகளாவர்.

"நிதராம் கர்பே அதிரஹஸ்யஸ்தலே ஸ்திதத்வாத் நிகர்ப:"

(नितरां गर्भे अतिरहस्यस्थले स्थितत्वात् निगर्भः)

என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஆவரண தேவதைகளின் பெயர்கள் :—

1. ஸர்வக்ஞாதேவி, 2. ஸர்வசக்திதேவி, 3. ஸர்வைச்வர்ய ப்ரதா தேவி, 4. ஸர்வஞானமயீதேவி, 5. ஸர்வ வியாதி விநாசிநீ தேவி, 6. ஸர்வாதாரஸ்வரூபாதேவி 7. ஸர்வ பாபஹராதேவி 8. ஸர்வாநந்தமயீதேவி, 9. ஸர்வரக்ஷாஸ்வரூபிணீதேவி, 10. ஸர்வேப்ஸித பலப்ரதா தேவி என்பன. அந்தர்முக ஏகாக்ர விருத்தியே அந்தர்தசாரத்திலுள்ள நிகர்ப்ப யோகினிகள். நிகர்ப்பம் என்ருல் அதிரஹஸ்ய ஸ்தானம் என்று பொருள். அந்தர்முக தியானத்தால் அடையும் அத்விதீய அனுபவத்தைக் காட்டிலும் அதி ரஹஸ்ய வஸ்து எது இருக்க முடியும்? அதனுலேயேதான் ஸர்வக்ஞத்வம், ஸர்வ சக்தித்வம், ஸர்வைச்வர்யம் முதலிய பத்து ப்ராப்திகளும் கைகூடும். ஆனுல் ஐச்வர்யம், வியாதி விநாஸினி என்ற நாமாக்களை கேவலம் பௌதிகமான பொருளில் கொள்ளக்கூடாது.

7. ஏழாவது ஆவரணம்

இதில் எட்டு முக்கோணங்கள் இருப்பதால் அஷ்டாரம் என்று பெயர். இதை ஸர்வரோகஹர சக்ரம் என்றும் இதிலிருக்கும் எட்டு யோகினிகளை வாக்தேவதைகள் என்றும் கூறுவர். இவர்களுக்கு அதிஷ்டாத்ரியாக இருக்கும் சக்ரேச்வரி த்ரிபுரா ஸித்தா என்றழைக்கப் படுகிருள். இதில் புக்தி ஸித்தியும் ஸர்வகேசரீ முத்திரையும் வியாபக மாய் இருக்கின்றன. இந்த ஆவரணத்துக்கு "கம்" (क्) பீஜமாகும் நிறம் பத்மராகம் போன்றது. தேவதைகள் 1. வசினீ 2. காமேச்வரி 3. மோதினி 4. விமலா 5. அருணு 6. ஜயினீ 7. ஸர்வேச்வரீ 8. கௌளினி என்பவர்கள். இவ்வாவரணத்தில் தான் ஸ்ரீ வித்யையின் சிறப்பு லக்ஷணம் வெளிப்படுகின்றது. இந்த தேவதைகள் எண் மரையும் ரஹஸ்ய யோகினிகள் என்பர்.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தின் பூர்வ பாகத்தில் ஹயக்ரீவர் அகஸ்தியருக்குச் சொன்னதாகக் கூறப்பட்டிருப்பது வருமாறு :— "முன்னொரு காலத்தில் ஸ்ரீ லலிதா தேவியானவள் தன்

பக்தர்களுக்கு ஹிதத்தைச் செய்யவேண்டுமென்கிற விருப்பங்கொண்டு வசினீ முதலிய வாக்தேவதைகள் எண்மரையும் கூப்பிட்டு 'ஹே' வாக்தேவதைகளே, நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என்னுடைய ஸ்ரீ சக்ரத்தின் ரஹஸ்யத்தை அறிந்தவர்கள். என்னுடைய நாமங்களில் எப்பொழுதும் கவனம் செலுத்தி வருகிறீர்கள். ஆகையால் என்னுடைய ஸ்தோத்திரத்தைச் செய்யும்படி கட்டளையிடுகிறேன். பக்தர்கள் எதைச்சொல்லி என்னை ஸ்துதி பண்ணினால் எனக்கு உடனே பரமப்ரீதி ஏற்படுமோ அப்பேர்ப்பட்டதும், ஆயிரம் நாமாக்களை யுடையதும், என்னுடைய பெயரை கடைசியில் முத்திரையாக (அங்கிதமாக) உடையதுமான ஸ்தோத்திரத்தைச் செய்யுங்கள்" என்று உத்தரவிட்டாள். அதன்படியே "ரஹஸ்ய நாம ஸாஹஸ்ரம்" என்று கியாதி பெற்ற ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தைச் செய்தார்கள்" என்று கூறப்பட்டிருக்கிறது. அதனாலேயே கூட இந்த எட்டு யோகினிகளுக்கும் ரஹஸ்ய யோகினிகள் என்று பெயர் ஏற்பட்டதுபோலும். இந்த ஸஹஸ்ரநாமாவில் சக்ர ராஜ ரஹஸ்யம், மந்த்ரோத்தார ரஹஸ்யம், முதலிய ரஹஸ்யங்கள் அந்தர்கதமாய் இருக்கின்றன.

இந்த சக்ரத்துக்கு ஸர்வரோகஹரம் என்று பெயர் இருப்பதன் காரணம் என்னவெனில் ரோகம் என்பது சரீரத்தைப்பொறுத்ததுமட்டுமன்று. ஜீவர்களை அனாதிகாலமாய்ப் பற்றியிருக்கும் அக்ஞானமே ரோகம். அதனாலேயே ஜீவர்கள் பிறவித்துன்பத்தில் கிடந்து உழலுகின்றனர். இந்த ரோகத்தைப்போக்கும் மஹிமை வாய்ந்தது என்பதாலேயே இதற்கு ஸர்வரோகஹரம் என்று பெயர் ஸித்திக்கின்றது.

அநித்ய அசுசி க்லேஶரூப ஸம்ஸாரோ ரோக: தஸ்ய ஹரணே
ப்ரபாவஶாலீதி ஸர்வரோகஹரசக்ரம் ॥

अनित्याशुचिक्लेशरूपसंसारो रोगः ।
तस्य हरणे प्रभावशालीति सर्वरोगहरचक्रम् ॥

அநித்யமானதாயும், அசுசியாயும், துக்கரூபமானதாயும் இருக்கும் ஸம்ஸாரமே ரோகமாகும். அதை அழிக்கும் தன்மையுடையதாயிருப்பதால் ஸர்வரோகஹர சக்கரம் என்று பெயர் பெற்றது.

ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்து அது ப்ரஹ்மத்தோடு அத்விதீய மானது என்ற மெய்ஞ்ஞானம் உண்டாகும்போது அஞ்ஞானம் நாசம் அடைகின்றது. அந்தவிதமான ஞானத்தை குரு உபதேசமாகக்கேட்கும் சிரவணம் முந்தின ஆவரணத்தின் ஸ்வரூபம் என்று கூறினோம். அந்த உபதேசத்தை மனனம் செய்வது என்பது இந்த ஆவரணத்தின் ஸ்வரூபம். ஸத்குருவின் மூலம் சிரவணம் செய்த உபதேச மஹா வாக்கியங்களை சுருதி யுக்தி அனுமானம் முதலான அளவைகள் அல்லது பிரமாணங்களைக்கொண்டு சிந்தித்தலே மனனமாகும். மனனத்தின் முக்கிய அம்சம் விசாரணை, அல்லது ஆராய்தல். கேட்டதை அப்படியே விழுங்காமல் தனது கல்வி கேள்வி ஞானத்தால் தர்க்கம், யுக்தி அனுமானம் போன்ற ஸாதனைகளின் உதவியைக்கொண்டு ஆராய்தலே மனனம். குரு உபதேசம் பெற்றபின் அதனைத்தழுவாது சிஷ்யன் தன் யுக்தி அனுமானங்களால் ஆராய்நல் குரு உபதேசத்துக்கு இழுக்காமோ என்று சங்கை எழலாம். இழுக்காகாது என்பது பதில். ஏனெனில் சிரவணம் செய்ததை மனனம் செய்தபின் நிதித்யாஸனமும், அதனால் ஸ்வானுபூதியும் ஏற்படவேண்டியது நியதியாதலின் என்க. சங்கீதக் கலையை குருவிடம் கேட்கின்றான். அதை அடிக்கடி பழகி, தனது யுக்தியையும் சேர்த்து அக்கலையில் விருத்தியடைகின்றான் என்பது நாம் சாதாரணமாகப் பார்க்கும் அனுபவமன்றோ?

ஒரு சிறு குறிப்பைக் கூறி இவ்வாவரணத்தை முடித்துக் கொள்வோம். இந்த எட்டுக் கோணங்களுள்ள அஷ்டாரத்தையும், எட்டாவது ஆவரணமான திரிகோணத்தையும், அதன் நடுவிலிருக்கும் ஒன்பதாவது ஆவரணமான பிந்துவையும் தகட்டில் லேகனம் பண்ணி மந்த்ராக்ஷரங்களை அடைத்து ரக்ஷையாக அணிவித்தால் பிரதிபந்தம் போன்ற மனோ வியாதிகள் சௌக்யமாவதைக் கண்கூடாகக் காணலாம்.

8. எட்டாவது ஆவரணம்

எட்டாவது ஆவரணத்தைப்பற்றி விமர்சம் செய்யுமுன் ஏழாவது ஆவரணமான அஷ்டாரத்துக்கும், எட்டாவது ஆவரணமான திரிகோணத்துக்கும் இடையே, த்ரிகோணத்தின் மேல்புறம், வலது புறம், இடதுபுறம் மூன்றிலும் நான்கு மூலைகள் கொண்ட மூன்று

சதுஷ்கோணங்கள் இருப்பதைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டும். இவை ஆவரண வரிசையில் இல்லாவிடினும், ஸ்ரீ சக்ர நவாவரண பூஜையில் முக்கிய ஸ்தானம் வகிக்கின்றன.

இதுவரை ஸ்ரீ சக்ர ஆவரணங்களை லயக்ரமமாகவே கூறி வந்தோமாதலால் எட்டாவது ஆவரணமான த்ரிகோணம் கீழ் நோக்கிய முக்கோணம் என்பதை அறியவும். இந்த கீழ் நோக்கிய முக்கோணத்தின் மேல் பக்கத்தில் உள்ள சதுஷ்கோணம் குருமண்டலம் என்று கூறப்படும். இதில் மூன்று கோடுகள் இருப்பதாய் பாவித்துக்கொண்டு அவற்றில் மேல் இருந்து கீழ் ஒவ்வொரு கோட்டில் திவ்ய, ஸித்த, மானவ குரு ஸ்வரூபங்கள் முறையே இருப்பதாய் பாவித்தல்வேண்டும். இந்த மூன்று குருக்களின் சங்க்யையை "முநிவேதவஸு ஸங்க்யம்" என்று கூறப்பட்டிருக்கின்றது. அதாவது முனி என்பது ரிஷிகள். அவர்கள் ஸப்தரிஷிகளாதலால் முனி என்ற சொல் ஏழு என்ற எண்ணைக் குறிக்கின்றது. அதாவது திவ்விய ஓகத்தில் ஏழு குருமார்கள் இருப்பதாய் பாவிக்கவும். அடுத்த கோட்டில் வேத என்ற சொல் நான்கு என்ற எண்ணைக் குறிப்பதால் நான்கு ஸித்த குருமார்களை பாவித்தல் வேண்டும். அடுத்த ரேகையில் வஸு என்பது அஷ்டவஸுக்களாதலால் எட்டு என்ற எண்ணைக் குறிப்பிடுவதால் எட்டு மானவ குருமார்கள் இருப்பதாய் பாவனை செய்யவேண்டும். இவர்களின் நாமாக்களை தேவீ கட்கமாலா ஸ்தோத்திரத்திலும். குஹானந்த மண்டலியின் ஸ்தாபகரான ப்ரம்மஸ்ரீ N. சுப்ரமண்ய அய்யர் பிரசுரித்த ஸ்ரீ வித்ய ஸபர்யா பத்ததி என்ற நூலிலும் பார்க்க.

காமகலா விலாஸத்தின் 50 வது சுலோகத்தில் குரு பரம்பரா நிரூபணம் செய்யும் இடத்தில் "பரிபூர்ணேஹம்" என்ற பாவமான பரமானந்தானுபவமுடைய பிரகாச விமர்சமிஸ்ர பிந்துக்களுக்குக் காரணமான சுத்தப்ரஹ்ம பிந்து ஸ்வரூபமானது ஆதி நாதஸ்வரூபத்தையடைந்து பின்பு அதுவே மறுபடியும் படிப்படியாய் வெவ்வேறுக அதாவது திவ்விய, ஸித்த மானவ மென்றும், ஓகத்ரய வடிவத்தையடைந்து விமர்ச வடிவ சித்சக்தியின் அதிஷ்டிப்பால் காமேச்வர பாவத்தையும் அடைந்தது. அதாவது சுத்தப்ரஹ்மமே ஆதிகுருவாவார்,

பிரகாசாம்சத்தில் அவரே குருவாகவும், விமர்சாம்சத்தில் அவரே சிஷ்ய ராகவும் இருந்து சேதனர்கள் உய்யும்பொருட்டு வேதம் முதலிய ஸகல சாஸ்த்ரங்களையும் பிரகடனம் செய்தார் என்று ஏற்படுகின்றது.

சாக்த தந்த்ர சாஸ்த்ரங்களில் சில சிவன் சக்திக்குக் கூறியதாயும், சில சக்தி சிவனுக்குக் கூறியதாயும் இருப்பதை ஆராய்ந்தால் இருவரும் ஒரே ப்ரஹ்மத்தின் பரிணாமங்களே என்பதையும் அவர்கள் இருவரும் ஸமப்ரதான ந்யாயப்படி ஏற்றத்தாழ்வற்ற இரு விமர்ச வடிவங்கள் என்பது ஏற்படுகின்றது. முதலில் பிரகாசாநந்த ஸாரமான பைந்தவ ஸ்தானமென்கிற மஹா ஒட்டியாண பீடத்தில் அமர்ந்து சர்யாநந்தநாதர் என்ற நாமத்தை வகித்து தனக்கு அபின்னையான பராபட்டாரிகைக்கு ஸ்ரீ வித்யா பத்ததியை உபதேசித்தார் என்று கூறப்பட்டிருக்கின்றது. குருமண்டலமானது நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றில் முதல் பிரிவு (பர+ஓகம்) பரௌகம் என்பது சற்று முன் சொன்னபடி சர்யானந்த நாதரும் அவரோடு அபின்னமாயிருக்கும் சித் சக்தியான பராபட்டாரிகாவும் ஆவர். இவர்கள் எட்டாவது ஒன்பதாவது ஆவரணங்களாகின்ற த்ரிகோணத்திலும் பிந்துவிலும் இருப்பதாக பாவித்தல் வேண்டும். ஏனைய மூன்று பிரிவுகள் திவ்ய ஸித்த மானவ ஓகங்கள். இந்த மூன்று ஓகங்களையே திரிகோணத்தில் மேலிருக்கும் சதுஷ்கோணத்தில் பாவிக்கவேண்டும். உபாஸகன் குருபரம்பரையில் தனது குருவை மானவ ஓகத்திலும் பரம குருவை ஸித்த ஓகத்திலும், பரமேஷ்டி குருவை திவ்ய ஓகத்திலும் பாவிக்கவேண்டும். ஸ்ரீ வித்யா உபாஸகர்கள் தனது குரு, அவருடைய குரு, அவருக்கும் குரு என்ற ஸ்வகுரு, பரமகுரு, பரமேஷ்டிகுரு மூவரையும் அறிந்து இந்த சதுஷ் கோணத்தில் வைத்து உபாஸிக்கவேண்டும் என்பது ஸம்பிரதாயமாகும். இது விஷயமான ஏனைய விவரங்களுக்கு காமகலாவிலாஸத்துக்கு நடனானந்தர் இயற்றிய விரிவுரையும் அதற்கு பிரஹ்மஸ்ரீ N. சுப்ரமண்ய அய்யர் இயற்றிய தமிழ் உரையும் பார்க்க.

இனி மத்ய த்ரிகோணத்துக்கு வலதுபுறம் இருக்கும் சதுஷ் கோணத்தில் அங்குசம், பாணம் என்ற தேவியின் ஆயுதங்களையும், இடதுபுற சதுஷ்கோணத்தில் பாசம், தனுஸ் என்ற ஆயுதங்களையும் பாவித்தல் வேண்டும். சங்கருடைய ஸௌந்தர்யலஹரியின் 7-வது

சுலோகத்தில் இந்த நான்கு ஆயுதங்களும் கூறப்பட்டிருக்கின்றன. வலதுபுறம் இரண்டு கரங்களில் அம்பாள் பாணம் அங்குசத்தையும் இடதுபுறம் இரண்டு கரங்களில் பாசம் தனுஸையும் தரித்திருக்கின்ருள்.

லலிதா ஸஹஸ்ர நாமத்தில் இந்த ஆயுதங்களின் தத்துவம் கூறப்பட்டிருக்கின்றது. 8-வது நாமா ராகஸ்வரூப பாசாட்யா (**रागस्वरूपपाशाढ्या**) என்பது. அதாவது ராகம் என்பது ஓர் சித்த விருத்தி விசேஷம், இச்சை, ஆசை என்பது பொருள். அதையே வாஸனுமய ரூபத்தில் பாசமாக அம்பாள் அணிந்திருக்கின்ருள். பாசம் என்ருல் கயிறு என்று பொருள். ஒரு வஸ்துவைப்பிடித்து இழுப்பதற்கு கயிறு பயன்படுவதுபோல அம்பாளின் பாசமானது தனது அடியார் களின் வாஸனுமய அனுராகங்களை இழுத்துத் தன் வயப்படுத்தி அநாத்ம வ்ருத்திகளைப் போக்குகின்றது.

9வது நாமா "க்ரோதாகாராங்குசோஜ்வலா" (**क्रोधाकाराङ्कु-शोज्ज्वला**) என்பது க்ரோதம் என்ருல் வெறுப்பு என்று பொருள். குரோதமும் ஓர் சித்த வ்ருத்தியே. இதை "த்வேஷம்" என்று சொல்லலாம். இந்த நாமாவைப் பிரித்துப் பார்த்தால் க்ரோத+ஆகார+ அங்குச+உஜ்வலா என்று நான்கு பதங்கள் இருக்கின்றன. 'ஆகாரம்' என்பது விஷயாகார ஞானத்தைக் குறிக்கும் "ஸவிஷயகம் ஞானம்" என்கின்ருர் பாஸ்கரராயர். மெய்யடியார்களின் த்வேஷ புத்தியை சேதிப்பதற்கு அம்பாள் இந்த ஆயுதத்தை தரித்திருக்கிருள். அதாவது அநாத்ம வ்ருத்தியில் வெறுப்படைவதே அங்குசமாம்.

10வது நாமா "மனோரூபேக்ஷு கோதண்டா" (**मनोरूपेक्षुकोदण्डा**) என்பது அதாவது மனஸ் தத்துவமே கரும்புவில்லாகும். மனஸ் என்பது ஸங்கல்ப விகல்ப க்ரியைகளையுடையது. அவை வில்லின் தண்டத்தையும் நாணையும் குறிக்கின்றன. மேலும் ஆவரணம், விக்ஷேபம் என்ற மயக்க அறிவின் இரண்டு ஸ்வரூபங்களே வில்லாகவும் கொள்ளலாம். முன்பே கூறியபடி ஆவரணம் என்பது உள்ளதை மறைப்பது. விக்ஷேபம் என்பது இல்லாததைத் தோற்று விப்பது. "ரஜ்ஜு ஸர்ப்பம்" ஓர் நல்ல உதாரணம். உண்மையில் உள்ள கயிற்றை மறைத்து இல்லாத பாம்பை உண்டுபண்ணுகின்ற

தல்லவா. இது மனமயக்கத்தால் தானே உண்டாகின்றது? ஜீவர்களுக்கு உலக வாழ்க்கையில் ருசியை ஊட்ட இந்த இரண்டும் பயன்படுகின்றதாதலால் இவற்றை கரும்புவில், கரும்பு நாண் என்ற உருவகம் எவ்வளவு அற்புதமாக அமைந்திருக்கின்றது! ஆவரண விக்ஷேபங்களற்ற சுத்த மனமே தனுஸ்ஸாகும் என்று தெரிகின்றது.

இனி 11-வது நாமா "பஞ்சதன் மாத்ர ஸாயகா" (**पञ्च-तन्मात्रसायका**) என்பது. சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ கந்தங்களாகிய ஐந்து ஸூக்ஷ்ம பூதங்களே பஞ்சபாணங்கள், பஞ்சதன் மாத்ரைகளின் பரிணாமமே ஞானேந்திரியங்கள் ஐந்தும். அதாவது செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்பன முறையே சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களின் பரிணாமம். இவை மனதினால் தொழில்படுகின்றன. பாஹ்ய உலக விவகாரங்களை மனதுக்குள் சேர்க்கின்றன. இவற்றை அம்பாளின் புஷ்பபாணங்களாக பாவிக்கின்றோம். ஞானேந்திரிய பஞ்சகத்தையும் பாஹ்ய அநாத்மவ்ருத்திகளில் செலுத்தாமல் அவற்றை ஓர்மைப் படுத்தும் ஜிதேந்திரியத்துவமே பாணங்களின் தத்துவமாகின்றது.*

மேலும் பாசம் என்பது இச்சாசக்தியையும், அங்குசம் என்பது ஞான சக்தியையும், தனுஸ் பாணம் இரண்டும் கிரியா சக்தியையும் குறிக்கும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

"இச்சா சக்தி மயம் பாசம் அங்குசம் ஞானரூபிணம் |
க்ரியா சக்திமயே பாண தனுஷீ ததத் உஜ்வலம் "

(इच्छाशक्तिमयं पाशमङ्कुशं ज्ञानरूपिणम् ।
क्रियाशक्तिमये बाणधनुषी दधदुज्वलम् ॥)

என்று பாஸ்கரராயர் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

---

*மன்மதனுக்கும் கரும்பு வில்லும் புஷ்ப பாணங்களும் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் மன்மதனுடைய ஆயுதங்கள் ஜீவர்களுக்கு இச்சையை உண்டுபண்ணி ஹர்ஷணம், ரோசனம், மோஹனம், சோஷணம், மாரணம் என்ற பஞ்ச அவஸ்தைகளை உண்டுபண்ணுகின்றன. ஆனால் அம்பாள் கைகளில் இருப்பவை அம்பாளின் அடியார்களின் மனதை அடக்கி இந்திரிய நிக்ரஹம் செய்வதற்கு அறிகுறியாய் அமைந்திருக்கின்றன. ஒன்று ஆசையின் பிறப்பிடம். மற்றொன்று ஆசையற்ற இடம்.

தவிர ராகமாகிற பாசத்துக்கு அச்வாரூடாவும், க்ரோதாகாரமான அங்குசத்துக்கு ஸம்பத்கரீயும், மனமாகிற தனுஸ்ஸுக்கு மந்த்ரிணீயும், பாணங்களுக்கு தண்டநாதாவும் அதிஷ்டான தேவதைகள். ஆயுத தேவதைகளின் மந்த்ரங்களை குருமுகமாக அறிந்துகொள்ளவேண்டியது. இவர்களைப்பற்றி ஸஹஸ்ரநாமாவின் 66, 67, 69, 70-வது நாமாக்களுக்கு பாஸ்கரராயரின் வியாக்யானம் பார்க்க.

சுருக்கமாகக் கூறினால் ஆயுததேவிகளின் பூஜையால் பஞ்சேந்திரியங்களையும் ஜயித்து மனதை அடக்கி விருப்பு வெறுப்புகள் இல்லாத நிலையை அடைந்து அபரோக்ஷானுபூதிக்கு அழைத்துச்செல்வதே உபாஸகன் அடையும் ஆத்மலாபமாகும். ஆறாவது ஆவரணம் சிரவணம் என்றும், ஏழாவது ஆவரணம் மனனம் என்றும் பார்த்தோம். எட்டாவது ஆவரணமாகின்ற நிதித்தியாஸ நிலையை அடைவதற்குமுன் மன இந்திரியாதி வாஸனைகள் அடங்கவேண்டுமாதலாலே எட்டாவது ஆவரணத்துக்குமுன் ஆயுதபூஜை அவசியமாகின்றது.

இனி எட்டாவது ஆவரணமாகின்ற திரிகோணத்தைப் பார்ப்போம். இதனுடைய அமைப்பே மிகச்சிறந்ததும் ஆழமானதுமாகும். முதலில் இம்முக்கோணத்தின் கோடுகளை வெறும் ரேகைகளாகக் கருதக்கூடாது. அவை 51 மாத்ருகா அக்ஷரங்களாலாயது. இதற்கு சாதாரணமாய் अ क त முக்கோணம் என்று பெயர். அதாவது முக்கோணத்தின் கீழிருந்து வலது புறம் கோட்டில் अ முதல் अः ஈறாக 16 உயிர் எழுத்துக்களும், மேல் குறுக்குக்கோட்டில் क முதல் त ஈறாக 16 எழுத்துக்களும். மூன்றாவது இடதுபுறம் கோட்டில் மேலிருந்து கீழாக थ முதல் स முடிய 16 அக்ஷரங்களும், கீழ் கோணத்தில் ह வும், வலது புறம் மேல் கோணத்தில் ळ (ள)வும், இடதுபுறம் மேல் கோணத்தில் क्ष (க்ஷ)வும் இருப்பதாக பாவிக்கவேண்டும். ஆகையால் இந்த முக்கோணத்துக்கு மாத்ருகா மண்டலம் என்று பெயர்.

மேலும் இந்த மூன்று கோடுகளிலும் 16 நித்யாதேவதைகள் இருப்பதாக பாவித்தல் வேண்டும். கீழிருந்து வலதுபுறம் மேல்நோக்கி 1. காமேச்வரி 2. பகமாலினி 3. நித்யக்லின்னா 4. பேருண்டா 5. வன்ஹிவாஸினி ஆகிய 5 நித்யாதேவதைகளும், மேல் கோட்டில்

வலதுபுறம் இருந்து இடதுபுறமாக 1. மஹாவஜ்ரேச்வரி 2. சிவதூதி 3. த்வரிதா 4. குலஸுந்தரி 5. நித்யா என்ற 5 நித்யா தேவதைகளும் இடது மூலையிலிருந்து கீழ்வரை 1. நீலபதாகா 2. விஜயா 3. ஸர்வ மங்களா 4. ஜ்வாலாமாலினீ 5. சித்ரா என்ற 5 நித்யா தேவதைகளும் மஹா நித்யா என்ற 16வது நித்யாதேவதை வலதுபுறம் மேல் மூலையில் இருப்பதாகவும் பாவித்தல் வேண்டும்.

மேலும் இந்த மூன்று ரேகைகளிலும் ஒரு கோட்டுக்கு 5 உயிரெழுத்துக்களாக மூன்று கோடுகளுக்கு பதினைந்தும் பிந்துவில் 16-வது எழுத்தையும் பாவித்தல் வேண்டுமென்பது பூஜாபத்ததியில் நித்யாதேவிகளின் அக்ஷரங்களாகக் கூறப்பட்டுள்ளது. இதனை பஞ்ச பஞ்சஸ்வரம் என்பார்கள். நவாவரண பூஜா ஆரம்பத்தில் முதலாவது ஆவரண பூஜைக்கு முன்னும் சதுராயதன பூஜைக்குப் பின்பும் "லயாங்க பூஜை" என்பது பத்ததியில் விதிக்கப்பட்டுள்ளது. லயாங்கம் என்றால் அங்கம் அங்கியோடு லயமாகின்றது என்று பொருள். இந்த பூஜை ஸ்ரீ சக்ரத்தில் பிந்து, திரிகோணம், குருமண்டலம் என்ற மூன்று ஸ்தானங்களிலும் செய்யப்படுவதாகும். அவற்றில் திரிகோணமானது சுக்ல பிந்து, ரக்த பிந்து, மிச்ரபிந்துக்கள் கூடிய காமகலையாகவும், அவ்யக்தம், மஹத், அஹங்காரம் என்று மூன்று சுத்த மாயா தத்துவங்களாயும், பச்யந்தி, மத்யமா, வைகரீரூப சப்தாத்மகமாகவும் இன்னும் பிரபஞ்சத்தில் எவை எவை மும்முன்றாகக் கூறப்படுகின்றனவோ அவை யாவையும் இம்முக்கோணம் குறிக் கின்றது. பொதுவாய் "அஷ்டாதசத்ரயம்" என்று 18 மும்மைகள் சாஸ்த்ரங்களில் கூறப்படுகின்றன. * அவற்றில் முக்கியமானவைகள்

---

* (ஏனையவை)

ஜோதிர் மண்டலம் 3.		*அக்னி, சூர்ய, ஸோம.*
குணத்வயம்	*3.*	*ஸத்வ, ரஜஸ், தமஸ்.*
வேதம் (த்ரயீ)		*ருக், யஜுஸ், ஸாமம்.*
காலம்		*காலை. நடுப்பகல். மாலை. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.*
பிந்துத்ரயம்		*ரக்த, சுக்ல, மிச்ர. பிந்துக்கள்.*

மூர்த்தித்ரயம், சக்தித்ரயம், அவஸ்தாத்ரயம், வியஷ்டிப்ரணவ அக்ஷர த்ரயம், பூ, புவ: ஸுவ: என்ற லோகத்ரயம், பிராக்ஞன், வைச்வானரன், தைஜஸன் என்ற ஆத்மத்ரயம், ஸ்தூல, ஸூக்ஷ்ம காரண சரீரத்ரயம் என்பன சில. இவ்வாறு அஷ்டமாவரணமாகின்ற திரிகோணத்தின் விமர்சம் ஏகதேசம் கூறப்பட்டது.

இந்த ஆவரணத்துக்கு ஸர்வ ஸித்திப்ரத சக்ரமென்று பெயர். இதில் உள்ள தேவதைகளுக்கு அதி ரஹஸ்ய யோகினிகள் என்று பெயர். இதன் சக்ரேச்வரி த்ரிபுராம்பாவாகும். இதில் இச்சா ஸித்தியும் ஸர்வ பீஜ முத்ரையும் வியாபகமாயுள்ளன. திரிகோணத்திலுள்ள மூன்று மூலைகளில் கீழ் மூலைக்கு காமகிரி பீடம் என்று பெயர். இதில் இருக்கும் யோகினி மஹாகாமேச்வரி. ஆத்ம தத்வம், ஸ்ருஷ்டி க்ருத்யம், இச்சாசக்தி, வாக்பவ கூடம். அதாவது பஞ்ச தசாக்ஷரியின் முதல் ஐந்து அக்ஷரங்கள், ஐம் பீஜம்.

மேல் இரண்டு மூலைகளில் வலது புறம் அக்னி மூலையில் இருப்பது ஜாலந்த்ர பீடம். யோகினீ மஹாவஜ்ரேச்வரி, வித்யா தத்துவம், ஸ்திதிக்ருத்யம், ஞான சக்தி, மத்ய கூடம் அதாவது பஞ்ச தசாக்ஷரியின் இரண்டாவது கூடமாகின்ற காமராஜ கூடம் அல்லது மத்ய கூடம் என்று பெயர். க்லீம் பீஜம் இதில் ஆறு அக்ஷரங்கள் உள.

அடுத்த மூலையாகிற இடது பக்கம் மூலைக்கு பூர்ணகிரி பீடம் என்று பெயர். யோகினி மஹாபகமாலினி, சிவ தத்துவம், ஸம்ஹார க்ருத்யம், க்ரியா சக்தி, சக்தி கூடம் அதாவது பஞ்ச தசாக்ஷரியின் மூன்ருவது கூடத்தில் அடங்கிய நான்கு அக்ஷரங்கள் ஸெள: பீஜம்.

இந்த சக்கரத்திலிருக்கும் நான்காவது யோகினி இம்மூவரின் ஸமஷ்டியும், மூன்று கூடங்களையே தனது சரீரமாக உடையவளும், இச்சா ஞான க்ரியா சக்திகளோடு சாந்தா சக்தியும் உடையவளாயும், ஜாக்ர, ஸ்வப்னஸுஷுப்திக்கு மேல்பட்ட துரியாவஸ்தையின் அனுபவமா

நாடித்ரயம்	*இடா, பிங்களா, ஸுஷும்ன.*
	ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம்.
	பூமி, ஸ்வர்க்க, அந்தரிக்ஷம்.
திரிபுடி	*ஞானம், ஞாத்ரு, ஞேயம்.*
	வாமா ஜ்யேஷ்டா ரௌத்ரீ.

யிருப்பவளுமான மஹாதிரிபுரஸுந்தரீ மஹோட்யாண பீடத்தில் இருக்கிறாள்.

இந்த சக்ரத்தை, நிதித்யாஸன வடிவமாக பாவித்தல் வேண்டும். நிதித்யாஸனமாவது மனனத்தினால் தெளிவடைதல். அனாத்ம வ்ருத்திகளை ஒழித்து ஆத்மாகார வ்ருத்திகளைப் பெருக்கிக் கொள்வதாம். இந்த சக்ரத்தை ஸர்வ ஸித்திப்ரதம் என்று சொன்னோம். வாஸனைகள் நசிக்காமல் மனோநாசம் ஏற்படாது. மனோநாசம் ஏற்படாதவரை தத்துவ ஞானமுண்டாகாது. தத்துவஞானம் ஜனித்தாலொழிய அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் ஏற்படாது. அபரோக்ஷ ஸாக்ஷாத்காரமாவது ஜீவ ப்ரஹ்ம ஐக்யமே. அஹம் ப்ரஹ்மாஸ்மி, அயமாத்மா ப்ரஹ்ம போன்ற மஹாவாக்யங்களை செயல்முறையில் அநுபவித்தலே. இதுவே ஸவிகல்ப ஸமாதி என்று கூறப்படும். இந்த ஸவிகல்ப ஸமாதி கூடுவதே ஸர்வ ஸித்தியாகும். அதனைக்கூட்டுவிக்க இந்த சக்ரம் பயன்படுவதாலேயே இதற்கு ஸர்வஸித்திப்ரதம் என்ற பெயராயிற்று. இச்சக்ர தேவதைகள் நால்வரில் மஹாகாமேச்வரி வாஸனாக்ஷயத்தையும், மஹா வஜ்ரேச்வரி மனோநாசத்தையும், மஹாபகமாலினி தத்துவ ஞானத்தையும் மஹாதிரிபுரஸுந்தரி ப்ரஹ்மாத்மைக்கிய அபரோக்ஷ ஞானத்தையும் குறித்து நிற்கிறார்கள். திரிகோணத்தைவிட்டு பிந்துவைப் பிரிக்க முடியாதாகையாலே பைந்தவ ஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரியும் இந்த சக்ரத்தின் ஏனைய மூன்று யோகினிகளில் அந்தர்பூதையாக பாவித்தல் வேண்டும். மஹா காமேச்வரி, மஹாவஜ்ரேச்வரி, மஹாபகமாலினி மூவரும், பஞ்ச தசாக்ஷரியின் வாக்பவகூடம், காமராஜகூடம், சக்திகூடம் என்ற மூன்று கூடங்களிலுள்ளவர்கள். அவர்களின் பீஜாக்ஷரங்கள் ஐம், க்லீம், ஸெள: என்பன. இம்மூன்று அக்ஷரங்களையும் ஒவ்வொரு கூடத்தின் முதலில் ஒன்றாகச் சேர்த்து உபாஸிப்பது ஸெளபாக்ய பஞ்சதசாக்ஷரியாகும். வாக்பவ கூடம், அம்பாளின் முகமாகவும், காமராஜ கூடம் அம்பாளின் உடலாகவும், சக்தி கூடம் அம்பாளின் இடுப்பு முதல் பாதம் ஈறான பாகம் என்றும் லலிதா ஸஹஸ்ரநாமம் கூறுகின்றது.

ஸ்ரீமத் வாக்பவ கூடைக ஸ்வரூப முகபங்கஜா
கண்டாத: கடிபர்யந்த மத்யகூட ஸ்வரூபிணீ
சக்தி கூடைகதாபன்ன கட்யதோபாகதாரிணீ

श्रीमद्वाग्भवकूटैकस्वरूपमुखपङ्कजा ।
कण्ठाधःकटिपर्यन्तमध्यकूटस्वरूपिणी ।
शक्तिकूटैकतापन्नकट्यधोभागधारिणी ॥

அந்த அக்ஷரங்களில் இருக்கும் மஹாகாமேச்வரி. மஹாவஜ்ரேச்வரீ மஹாபகமாலினி என்பவர்கள் அம்பாளின் சரீரமேயாவர். இம்மூவரின் ஸமஷ்டியே அம்பாள் என்பது ஆகின்றது. மந்த்ர தந்த்ர சாஸ்த்ரங்களில் "யோநி" என்ற சொல் பிறப்பிடம் என்ற பொருளிலும், முக்கோணம் என்ற பொருளிலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஜகஜ்ஜனனீயான சித்சக்தி உறையும் ஸ்தானம் முக்கோணமாய் இருப்பது பொருத்தமன்ரோ? இதற்கு இச்சா ஸித்தியும் ஸர்வபீஜமுத்ரையும் பொருந்தியிருப்பதும் ந்யாயமன்ரோ? இனி கடைசியாக

9. ஒன்பதாவது ஆவரணம்

இது ஸ்ரீசக்கரத்திலுள்ள பிந்து வடிவினது. அதனுல் டைந்தவ ஸ்தானம் என்றும் கூறுவர். இது எட்டாவது ஆவரணத்து முக்கோணத்தின் மத்தியில் திலகம் போன்று அமைந்திருக்கின்றது. சில சம்பிரதாயங்களில் பிந்து ஸ்தானத்தை முக்கோணத்தின் விட்டக்கோட்டுக்கு மேலிருக்கும் சதுஷ்கோணத்தில் போடுவதும் உண்டு. அந்த முறையில் மத்ய திரிகோணம் மேல் நோக்கியிருக்கும். இதை சிருஷ்டிக்ரமம் என்பர். ஸ்ரீ கைவல்யாச்ரமர் தாமெழுதிய ஸௌபாக்யவர்த்தனீ என்ற கிரந்தத்தில்

"கௌலசக்ரே த்ரிகோண மத்யகதோ பிந்துః ஸமயசக்ரே சதுஷ் கோணமத்யகதோ பிந்து:

(कौलचक्रे त्रिकोणमध्यगतो बिन्दुः। समयचक्रे चतुष्कोणमध्यगतो बिन्दुः)

என்று கூறியிருக்கிருர். அதாவது கௌல முறைப்படி த்ரிகோண மத்தியில் பிந்து, ஸமய முறைப்படி நாற்கோண மத்தியில் பிந்து என்று கூறியிருக்கிருர். த்ரிகோண மத்தியில் பிந்துவை வைத்து ஆராதிப்பது தான் பெருவாரியாகப் பழக்கத்தில் இருந்துவருகின்றது.

இந்த ஒன்பதாவது ஆவரணத்துக்கு ஸர்வானந்தமய சக்ரம் என்று பெயர். இங்கிருக்கும் பரதேவதைக்கு ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தரீ

பராபட்டாரிகா என்று பெயர். இவள் பராபராதிரஹஸ்ய யோகினீ யாவாள். சக்ரேச்வரி ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரியேயாகும். இதில் ப்ராப்தி ஸித்தியும், ஸர்வயோநி முத்ரையும் வியாபகமாயிருக்கின்றன.

நேயர்களுக்கு ஓர் சிறு குறிப்பு. முன்பு மூன்ருவது ஆவரணமான ஸர்வ ஸம்க்ஷோபணமென்ற அஷ்டதளபத்ம சக்ரத்துக்கு சக்ரேச்வரி "த்ரிபுரஸுந்தரி" ஸுஷுப்தி ஸ்வரூபா என்று கூறியது ஞாபகம் இருக்கும். ஒன்பதாவது சக்ரமான ஸமாதி ஸ்வரூபத்துக்கு சக்ரேச்வரி மஹாத்ரிபுரஸுந்தரி. ஸமாதி நிலேயும் ஸுஷுப்தி அவஸ்தையும் கிட்டத்தட்ட ஒரேமாதிரி அனுபவம்தான். அவித்யை நீங்காததால் ஜீவன் ஸுஷுப்தியிலிருக்கும் வரை ஸமாதி நிலேபோன்ற அனுபவமிருப்பினும் அது கலேந்த உடன் ஜாக்ர ஸ்வப்ன அவஸ்தைகள் குறுக்கிடும். ஆனுல் ஸமாதி நிலேயோ எனின் அது ஆன்மநிலே. தானே ப்ரஹ்மம் என்ற அத்வைத பாவத்தில் ஆழ்ந்து விடுவதால் ஸமாதி கலேந்தாலும் அனுபவம் மாறுவதில்லே. இதை எவ்வாறு எடுத்துரைக்க முடியும் ?

> " தன்னந்தனி நின்றது தானறிய
> இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ "

என்ற அருணகிரியார் வாக்குப்படி மனே வாக்குக்கெட்டாத ஓர் அனுபவம். இதை "பேசா அனுபூதி" என்கின்ருர் அருணகிரியார்.

பைந்தவஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பாளே துர்வாஸர் தமது ஸ்ரீ லலிதா ஸ்தவ ரத்னத்தில் 148-வது சுலோகம் முதல் 169 முடிய சுலோகங்களில் வர்ணித்திருக்கின்ருர். ஸௌந்தர்யலஹரி 8வது சுலோகம் "ஸுதாஸிந்தோ:" என்று ஆரம்பிக்கின்றது. இந்த ஸுதாஸிந்து என்பது பைந்தவஸ்தானம் தான். அதில் மணித்வீபம் சிந்தாமணி க்ருஹம், கதம்பவனம், கல்பகவனம், எல்லாம் இருக்கின்றனவாம். அந்த சிந்தாமணிக்ருஹத்தில் பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், மகேச்வரன் இவர்களே கட்டில் கால்களாகவும் சதாசிவனே மேல் பலகையாகவும் அமைந்த கட்டிலில் அம்பாள் அமர்ந்து இருப்பதாக தேவிபரமான ஸகல தந்த்ர சாஸ்த்ரங்களும் கூறுகின்றன.

த்ரிகோணம் நிதித்தியாஸனமாவதால் ஒன்பதாவது ஆவரணம் 'ஸ்வானுபூதி" ஆகின்றது. அவித்யா ஸம்பந்தம் சிறிதும் இன்றி,

அத்வைதானுபவமாகவே அஹம்பத லக்ஷியார்த்த ஆத்ம வடிவம் ஸச்சிதானந்த பரப்ரஹ்மமாகவே விளங்குகின்றது. ஜீவப்ரஹ்ம ஐக்கிய மாகின்ற சிவசக்தி ஸாமரஸ்யத்தினால் ஏற்படும் பிரஹ்மானந்த ஸ்வரூபமே ஸர்வயோனி முத்ரையால் குறிக்கப்படுவது. காளிதாஸனாலும் சங்கரராலும் ஓதப்பட்ட, ஸர்வ தீர்த்தாத்மிகை, ஸர்வ மந்த்ராத்மிகை, ஸர்வ தந்த்ராத்மிகை, ஸர்வ யந்த்ராத்மிகை, ஸர்வ சக்ராத்மிகை, ஸர்வ சக்தியாத்மிகை, ஸர்வ பீடாத்மிகை, ஸர்வ தத்துவாத்மிகை, ஸர்வ வித்யாத்மிகை, ஸர்வ யோகாத்மிகை, ஸர்வ நாதாத்மிகை, ஸர்வ வர்ணாத்மிகை, ஸர்வ சப்தாத்மிகை, ஸர்வ விச்வாத்மிகை, ஸர்வ தீக்ஷாத்மிகையாக விளங்கும் சிவாபின்ன பராபட்டாரிகையே ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுர ஸுந்தரியாகும். இவளில்லையேல் சிவனும் இல்லை, பிரபஞ்சமும் இல்லை. எதுவுமேயில்லை. அவளே ஸகலமும், ஸகலமும் அவளே, அவளே தத்பத லக்ஷியார்த்தம், அஹம்பத லக்ஷியார்த்தம் "ஓம் தத் ஸத்" என்று வேதம் கோஷிப்பது இவளையே.

ஸ்ரீ சக்ர விஷயமாக இன்னும் இரண்டு விவரங்களைக் கூறி இந்த அத்தியாயத்தை முடிப்போம். துர்வாஸர் எழுதிய லலிதா ஸ்தவ ரத்னம் என்ற ஸ்ரீ நகர விமர்சத்தில் ஸ்ரீ சக்ரத்தில் பூபுரத்துக்கு வெளியே இரும்பு எஃகு முதலிய 8 உலோகக் கோட்டைகளும், அவற்றிற்குள் 11 இரத்னபிராகாரங்களும் இருப்பதாயும், அவற்றின் நடுவே மஹா பத்மாடவி 6 பிராகாரங்களுடையதாயும் இவற்றின் மத்தியிலேயே பூபுரம் முதல் பிந்து ஈறாக ஒன்பது ஆவரணங்கள் உள்ள ஸ்ரீ சக்ரம் இருப்பதாயும் கூறியுள்ளார். மேலும் உலோகக் கோட்டைகளின் இடை இடையே கதம்பவனவாடிகை முதல் நானாவிருக்ஷ மஹா உத்யானம் வரை ஏழு வரிசைகள் இருப்பதாயும், இரத்ன பிராகாரங்களின் இடை இடையே ருத்ரன் முதல் ஸித்த கணங்கள் ஈறாக 11 வரிசை தேவர்கள் ரிஷிகள் ஸித்த கணங்கள் இருப்பதாயும் அவற்றினுள்புரம் மஹா பத்மாடவீ பிராகாரங்களின் இடை இடையே மன்மதன், சந்த்ரன், மார்த்தாண்ட பைரவன், குருகுல்லாதேவி, வாருணீதேவி, தாராதேவி முதலிய அறுவரின் வாசஸ்தலங்கள் இருப்பதாயும் கூறியிருக்கின்றார். இதுபோன்ற இதர விவரங்களுக்கு ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னத்தையே பார்ப்பது உசிதம். சாமான்ய மனதிற் கெட்டாத ஆழ்ந்த தத்துவங்களை காவ்ய ரஸனையோடு கல்பனாலங்காரம் நிறைந்த

அருமையான சுலோகங்களால் நமக்கு வழங்கியிருக்கிறூர் துர்வாஸர் "குரோத பட்டாரகர்" என்றழைக்கப்பட்ட மந்த்ர த்ரஷ்டர்.

ஸ்ரீ சக்ரத்தின் தத்துவத்தை விளக்குவது பாவனேபநிஷத். அதை இங்கு சுருக்கமாகக்கூறுவது மிகையாகாது. ஸ்ரீ பரதேவதையான மஹா தேவியின் ஸ்ரீ சக்ரரூபமாய் நமது தேகத்தையும் உபசாரரூபமாய் சேஷ்டா விருத்திகளையும் பாவிக்கவேண்டும் என்று நமக்கு உபதேசிப்பதால் இதற்கு பாவனேபநிஷத் என்று பெயராயிற்று. அகண்டமாயும் மண்டலாகாரமாயும் உள்ள ஸகல பிரம்மாண்டத்தையும் வியாபித்துக் கொண்டிருக்கும் ஸ்வயம்பிரகாசமான அரும்பெரும் ஜோதியை தியானம் செய்யவேண்டும். நமது அஞ்ஞான இருளைப்போக்கி மெய்ஞ்ஞான மாகின்ற பிரகாசத்தை உண்டாக்கும் பரமசிவமே குருநாதன். அவருக்கு சிருஷ்டியாதி க்ருத்யங்களுக்குக் காரணமாயிருப்பது பராசக்தி. இந்த சக்தியின் ஸம்பந்தத்தாலேயே அவர் ஈச்வரனுகின்றூர். இந்த பாவனை எதனுல் ஏற்படுகின்றது? தேகமும் ஒன்பது த்வாரங்களையுடையது. ஸ்ரீ சக்ரமும் ஒன்பது ஆவரணங்களையுடையது. இவ்விதம் ஸ்ரீசக்ரரூபமா யிருக்கின்ற இந்த தேகத்துக்கு தாதுக்களின் அதிதேவதையான வாராஹீ தேவி தகப்பனுர். மாம்ஸத்துக்கு அதிதேவதையான லலிதேவதை எனப்படும் குருகுல்லா என்பவளே தாயார். சதுர்வித புருஷார்த்தங்களே நாற்புறம் சூழ்ந்துள்ள சமுத்திரங்கள். இந்த தேகம் நவரத்னமயமான தீவு. த்வக் முதலிய ஏழு தாதுக்களோடு ரோமமும் ஓஜஸ்ஸும் சேர்ந்த தென்பதே நவரத்னம். ஸங்கல்பங்களே கல்பகவிருக்ஷங்கள். உள்ளொளி உண்டாக்கும் மனமே கற்பக உத்யானவனம். நாவால் அறியப்படும் இனிப்பு, புளிப்பு என்ற அறுசுவைகளும் வஸந்தம் முதலிய ஆறு ருதுக்கள். கிரியாசக்தி என்பது பீடம், குண்டலினீ என்னும் ஞானசக்தி கிருஹம். இச்சாசக்தியே மஹாத்ரிபுரஸுந்தரீ. அறிகிறவன் இயமானன் (ஹோதா) அறிவு அர்க்கியம். அறியப்படுவது ஹவிஸ், அறிவு, அறிபவன், அறியப்படும் பொருள் என்ற திரிபுடியற்ற அபேதபாவனையே ஸ்ரீ சக்ரபூஜையாகும்.

முதலாவரணம் சிருங்காரம் முதலிய ஒன்பது ரஸங்களோடு நியதியும் சேர்ந்ததே தச ஸித்திகள். காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாற்சரியம் புண்ணியம் பாவம் இவை எட்டும்

ப்ராம்ஹீ முதலிய எட்டு மாத்ருகா சக்திகள். மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களும், இவைகளுக்குமேல் உள்ள ஸஹஸ்ராரமும், கீழ் உள்ள குல ஸஹஸ்ராரமும், உண்ணுக்கு (இந்த்ரயோனி) இவற்றின் ஸமஷ்டி ஆக பத்தும் தசமுத்ரா சக்திகள். இந்த 28மே பிரகட யோகினிகள்.

இரண்டாவது ஆவரணம் பிருதிவி முதலிய ஐந்து பூதங்களும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஐந்தும், இவைகளால் பாதிக்கப்படும் மனமும் சேர்த்து பதினாறு தத்துவங்களே ஷோடச தளத்திலுள்ள காமாகர்ஷிணி முதலிய பதினாறு நித்யாதேவதைகளான குப்தயோகினிகள்.

மூன்றாவது ஆவரணம் ஐந்து கர்மேந்திரியங்களின் தொழில் களான பேசுதல் முதலிய ஐந்து செயல்களும் தியாகம், கிரகணம், உபேக்ஷை என்ற புத்தியின் செயல்கள் மூன்றும் சேர்ந்து அஷ்டதள பத்மத்திலிருக்கும் அனங்ககுஸுமா முதலிய எட்டு குப்ததரயோகினி களாவர்.

நான்காவது ஆவரணம் அலம்புஸா முதல் ஸுஷும்னு ஈறாக உள்ள 14 நாடிகளே சதுர் தசாரத்தின் ஸம்ப்ரதாய யோகினிகள்.

ஐந்தாவது ஆவரணம் பிராணன் முதல் தனஞ்ஜயன் ஈறான பத்து வாயுக்களும் பஹிர்தசாரத்திலுள்ள குலோத்தீர்ண யோகினிகள்.

ஆறாவது ஆவரணம் மேற்சொன்ன பத்து வாயுக்களின் சேர்க்கை யின் வித்தியாஸத்தால் ரேசகம், பூரகம், சோஷகம், (உலர்த்தல்) தாஹகம் (எரித்தல்) ப்லாவகம் (நிறைத்தல்) என்ற ஐந்துவகை தொழில்கள் நடைபெறுகின்றன. நாகன் முதலிய ஐந்து உபவாயுக் களுடன் பிராண வாயு சேர்வதினால் க்ஷாரகம், உத்தாரகம், ஜ்ரும்பகம், மோஹகம், க்ஷோபகம் * என்ற தொழில்கள் நடைபெறுகின்றன.

---

*க்ஷாரகம் :— உணவை ஜீரணம் செய்வதற்கு நமது தேகத்தில் உண்டாகும் ஓர் வகை நீர் சுரப்பு (உமிழ்நீர்) Flowing oozing Saline Acid.

உத்தாரகம் :— Vomitting

க்ஷோபகம் :— Excitement, Agitation, Irritation

வாயுக்களின் சேஷ்டையாலேயே பக்ஷயம், போஜ்யம், சோஷ்யம், லேஹ்யம், பேயம் என்ற ஐந்து வகைப்பட்ட ஆகாரங்களை ஜீரணம் செய்கின்றன. இந்தப் பத்துவித அக்கினி கலைகளே அந்தர் தசாரத்தில் இருக்கும் ஸர்வக்ஞா முதலிய பத்து நிகர்ப்ப யோகினிகளாகும்.

ஏழாவது ஆவரணம் குளிர்ச்சி, சூடு, சுகம், துக்கம், இச்சை இவற்றோடு, சத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களும் சேர்ந்த எட்டும் அஷ்டாரத்திலுள்ள வசினீ முதலிய எட்டு ரஹஸ்ய யோகினிகளாவர்.

எட்டாவது ஆவரணம் சப்தம், ஸ்பர்சம் முதலிய ஐந்து தன்மாத்ரைகள் புஷ்ப பாணங்கள். மனமே கரும்பு வில்லு, ஆசையே பாசம். வெறுப்பே அங்குசம். அவ்யக்தம், மஹத், அஹங்காரம் இவை மூன்றுமே காமேச்வரி, வஜ்ரேச்வரீ, பகமாலினீ என்ற அதி ரஹஸ்ய யோகினிகள். பதினைந்து திதிகளின் ரூபமாய் இருக்கும் காலமே பதினைந்து நித்யாதேவதைகள். மிகவும் மேலான சிரத்தையே அதி தேவதையான மஹா திரிபுரஸுந்தரி.

ஒன்பதாவது ஆவரணம் உபாதியற்ற ஞானமே காமேச்வரர். எப்பொழுதும் ஆனந்த பூரிதையாகவும் பூர்ணமாயும் உள்ள ஆத்ம ஸ்வரூபமே பரதேவதையான லலிதை.

இதுபோன்று தேவதைக்கு ஆவாஹனம் முதலிய உபசாரங்களையும் பாவனையாக சித்தாந்தப் படுத்தப்பட்டிருக்கின்றன. அங்கு கண்டு தெளிக.

நான், நீ, உண்டு, இல்லை. தக்கது, தகாதது, என்பனபோன்ற த்வந்துவ உணர்ச்சிகளை ஆத்மாவில் லயம் செய்தலே ஹோமம்.

இந்த மாதிரியாக ஓர் உபாஸகன் ஏகாக்ரமாய் மூன்று முகூர்த்தமோ, இரண்டு முகூர்த்தமோ, அல்லது ஒரு முகூர்த்தமாவது பாவனையில்

ஜ்ரும்பகம் :— ***கொட்டாவி :*** Yawning

மோஹகம் :— Loss of Consciousness, affliction, pain,

All these are actions of the five upa Vayus.

ஆழ்ந்திருப்பானுகில் ஜீவன் முக்தனுகின்ருன். அவனே சிவயோகி எனக் கூறப்படுவான். அவனுக்கு ஸித்தியாகாதது இம் மூவுலகிலும் இல்லே, என்று பாவனேபநிஷத் முடிகின்றது.

ஸ்ரீ சக்ரத்தை தகட்டில் லே க ன ம் பண்ணியிருக்கும்போது தோன்றுவதுபோல தட்டையாக இருப்பதாய் பாவனே செய்யக்கூடாது என்றும் அகலம் நீளம் உயரம் இம் மூன்றும் உடையதாய் ஒவ்வொரு ஆவரணத்தின்மேல் ஒவ்வொரு ஆவரணம் இருப்பதாய் பாவனே செய்யவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தப் படிவத்தை ஸ்ரீ சக்கரமேரு என்று சொல்லுவார்கள். மேலும் ஸ்ரீ சக்ரத்தைமேரு ப்ரஸ்தாரம் என்றும், கைலாஸ ப்ரஸ்தாரம் என்றும், பூப்ரஸ்தாரம் என்றும், மூன்று விதமாய் பாவனே செய்வது பழக்கத்தில் இருந்து வருகின்றது. மேரு ப்ரஸ்தாரம் என்பது ஷோடச நித்யைகளின் தாதாம்ய பாவனே என்றும், கைலாஸ ப்ரஸ்தாரம் மாத்ருகா தாதாம்ய பாவனே செய்வது என்றும், பூப்ரஸ்தாரம் என் ப து வசின்யாதி தாதாம்ய பாவனே செய்வது என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

ஸௌந்தர்ய லஹரிக்கு வியாக்யானம் செய்துள்ள மிகச் சிறந்த அனுபூதிமானுகத் திகழ்ந்த காமேச்வர ஸூரி என்ற நிபுணர் "சிவ: சக்த்யா" (**शिवः शक्त्या**) என்ருரம்பிக்கும் முதல் சுலோகத்துக்கு 14 விதமான பொருள் கொடுத்திருக்கின்ருர். அதில் 7-வது ஸ்ரீசக்ர பரமானது. அவர் கூறுவது சிவகோணங்களாகின்ற நான்கும் சக்தி கோணங்களான ஐந்தோடு சேர்ந்தாலன்றி ஸ்ரீ சக்ரத்தின் ஒன்பது ஆவரணங்களும் உண்டாகாது. அவ்வாறு இல்லேயேல் சிவ கோணங் களான நான்கினுல் மட்டும் யாதொரு பயனும் கிடைக்காது. மேலும் ஸ்ரீ சக்ரத்தை பூப்ரஸ்தாரம், மேருப்ரஸ்தாரம், கைலாஸப்ரஸ்தாரம் என்றும் பிரிக்கமுடியாது என்கின்ருர். அவர் இந்த சுலோகத்தில் வரும் குஶல: (**कुशलः**) என்ற பதத்தை மூன்ருகப் பிரித்து **कु** (கு) என்ருல் பூமி, **श** (ஶ) என்ருல் தங்க மயமானமேரு, **ल** (ல) என்ருல் கைலாசம் என்று பொருள் கொள்கின்ருர்.

ஸ்ரீ யந்த்ரத்தைப் பற்றிச் சொல்வதற்கு இன்னும் எத்தனேயோ இருக்கின்றது. ஏற்கனவே கொஞ்சம் விரிவாகவே எழுதிவிட்டோம்.

இதோடு நிறுத்திக்கொள்கிறேன். மேலும் தெரிய ஆவல் உள்ளவர்கள் அது சம்பந்தமான தந்த்ர சாஸ்த்ரங்களை வாசித்தோ அறிந்தவர்களிடம் கேட்டோ தெளிந்து கொள்ளவும். ஸ்ரீ சக்ர பூஜை என்பது ஜீவப்ரஹ்ம ஐக்கியத்தை ஆந்தர பாஹ்ய பூஜா வழியாக அடைவதற்கான ஸாதனம் என்பதை நேயர்கள் மறந்து விடக்கூடாது. அம்மட்டேயன்றி ஸ்ரீ சக்ர பூஜையால் அடையக்கூடாத ஐஹிக ஆமுஷ்மிக பலன்களே கிடையாது.

ஆறுவது அத்தியாயம்

தேவியின் மந்த்ரம்

மந்த்ரம் என்ற சொல் வடமொழி "மன்" என்ற தாதுவும் "த்ரி" என்ற தாதுவும் சேர்ந்து உண்டான பதம். மனனம் செய்கின்றவர்களை காப்பாற்றுவதால் இதற்கு மந்த்ரம் என்று பொருள். ஸூதஸம்ஹிதையில்

மனனத்ராண ரூபத்வாத் மந்த்ர இத்யபிசப்தித:

(मननत्राणरूपत्वात् मन्त्र इत्यभिशब्दितः)

என்று கூறப்பட்டிருக்கின்றது. காமிகாகமம் மந்த்ராவதாரப் படலத்தில்

"மனனம் ஸர்வவேதித்வம் த்ராணம் ஸம்ஸாரஸாகராத் ।
மனனத்ராண தர்மித்வாத் மந்த்ர இத்யபிதீயதே ॥"

(मननं सर्ववेदित्वं त्राणं संसारसागरात् ।
मननत्राणधर्मित्वात् मन्त्र इत्यभिधीयते ॥)

என்றும் கூறப்பட்டிருக்கின்றது. அநேகமாக எல்லா சமயங்களுமே சில பதச் சேர்க்கைகளுக்கு விசேஷ சக்தி யிருப்பதாகக் கருதுகின்றன. ஆயினும் நமது ஹிந்து சமயத்தில் மந்த்ரங்களின் தோற்றம், அளவு, பிரயோகம் போன்ற ஸகல விவரங்களும் நன்கு ஆராயப்பட்டு வெகு தெளிவாய் விளக்கப்பட்டும் இருக்கின்றன. அண்டத்திலும் பிண்டத்திலும் உண்டாகும் ஸூக்ஷ்ம சலனங்களையும் அந்த சலனங்களினால் ஏற்படும் சப்தங்களையும் கண்டும் கேட்டும் அனுபவித்தும் நம்

முன்னோர்கள் நமக்கு அளித்துள்ளார்கள். மந்த்ரங்களை முதன் முதல் கண்டு பிடித்தவர்களுக்கு மந்த்ர திரஷ்டாக்கள் அல்லது ரிஷிகள் என்று பெயர்.

"நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்பது தொல்காப்பியத்தின் 176வது சூத்திரம். நிறைமொழி மாந்தர்தாம் மந்த்ர த்ரஷ்டாக்கள். நமது சமயத்தில் எண்ணிலடங்காத அளவு மந்த்ரங்கள் உள. ஸகல தேவதாமூர்த்திகளுக்கும் மந்த்ரங்கள் இருக்கின்றன. வேதம் முழுவதுமே மந்த்ரங்களாகவே கருதப்படுகின்றது. மந்த்ர உபாஸனையால் ஸகல ஸித்திகளையும் அடையலாம் என்பது நமது சமயத்தின் அடிப்படையான ஸித்தாந்தம். விவர்த்தவாத அத்வைதிகளும் மந்த்ர பிரயோகத்தை அவலம்பிக்கிறார்கள். பரிணாமவாதிகளும் ப்ரம்ஹம் பரிணமித்து விரிந்து பிரபஞ்சமாகும்போது ஒவ்வொரு படியிலும் ஏற்படும் சப்த ஸ்பந்தனங்களே மந்த்ரங்கள் என்பதை தர்க்க ரீதியாக ஒப்புக் கொள்கின்றனர். இதுவே மந்த்ரத்தின் அடிப்படையான ரகசியம். ஒரு தத்துவத்தினின்று மற்றொரு தத்துவம் தோன்றும்போதெல்லாம் ஸ்பந்தனமும் (அசைவு **Vibration**) அதோடு சப்தமும் (ஓசை **Sound**) உண்டாகும் என்பது விஞ்ஞானிகளும் கண்ட உண்மை. இந்த ஸூக்ஷ்மஸ்பந்தன சப்தங்களே மந்த்ரங்களின் ஆரம்பம்.

ஸூதஸம்ஹிதை (யக்ஞவைபவகண்டம் 4-வது அத்தியாயம்) கூறுகின்றது. "சைதன்ய லக்ஷணமுள்ளதாயும், தன் சக்தியுடன் கூடியதாயுமுள்ள சிவனிடத்திலிருந்து பரமாயும் ஸூக்ஷ்மமாயும் ஜ்யோதிர்மயமாயுமுள்ள சப்தமானது ஸ்வபாவமாகவே அகண்டமாய் உண்டாயிற்று. இந்த சப்தமே ஸ்வயம்பிரகாசத்தாலும் ஸர்வகதத்தாலும், ஜகத்காரண தாதாத்மியத்தாலும் "சப்தபிரஹ்மம்" என்று சொல்லப்படும். பிராணிகளின் மூலாதாரத்தில் உருக்கிய தங்கத்துக்கு ஸமமான பிரபையுடன் இந்த சப்தம் பிண்டபூதமாக அதாவது த்வனியாத்மகமாக விளங்குகிறது. இதற்கு பரா வாக் என்று பெயர். நாபி ஸ்தானத்தை யடையும்போது மனதுடன்கூடி பச்யந்தியாகின்றது இந்த இரண்டும் ஸூக்ஷ்மதரமாயுள்ள சப்தம். ஹ்ருதயத்தையடையும்போது அக்னிப்ரபைபோல விளங்குகின்றது. இதுவே மத்யமா சப்தம். இது

ஸூக்ஷ்ம சப்தம். பிரஹ்மரந்திரஸ்தானமாகின்ற கண்டம் அல்லது கழுத்தை அடையும்போது வர்ணாத்மகமானதும் ஸ்தூலமுமான சப்தம் வெளிப்படுகின்றது. இதற்கு வைகரீ சப்தமென்று பெயர். இந்த ஆதி சப்தமே ஸ்வபாவமாகவே தோன்றியதாயும் பிரஸித்தமாயுமுள்ள பிரணவ மந்த்ரமாகும் ".

இதிலிருந்தே ஏனைய அக்ஷரங்களும் உற்பத்தியாகின்றன. இந்த லிபிகளே மந்த்ரங்களுக்கு மாதாவாக இருப்பதால் இவற்றை மாத்ருகை கள் என்றழைக்கின்றோம். இவ்விதமான அக்ஷர சேர்க்கைகளானவை களே மந்த்ரங்கள் ஆகும். எந்த ஸ்பந்தனத்தால் எந்த சப்தம் உண் டானதோ அதே சப்தத்தைத் திருப்பித் திருப்பி உச்சரிப்பதால் அதே ஸ்பந்தனத்தை உண்டுபண்ண முடியுமல்லவா! அதுபோன்றே அக்ஷர சப்தங்கள் நமது உடலின் பல்வேறு நாடிகளிலும் ஸ்தானங்களிலும் உண்டாவதால் இந்த அக்ஷரங்களால் ஆய மந்த்ரங்களை முறைப்படி ஜபிப்பதால் அந்தந்த ஓசைகளின் பரா பச்யந்தீ, மத்யமா என்ற ஸூக்ஷ்ம தமம், ஸூக்ஷ்மதரம், ஸூக்ஷ்மம் என்ற சலனங்கள் தோன்றும் நாடி களையும், ஸ்தானங்களையும் இயக்க முடியும் என்பது வெளிப்படை யல்லவா! இவ்வாறு மந்த்ர ஜபத்தால் ஸூக்ஷ்ம ஸ்பந்தனங்களை உண்டுபண்ண முடியும் என்பது மட்டுமல்லாமல் அந்த ஸ்பந்தனம் எந்தப் பொருள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்ததோ அதே பொருளையும் உண்டுபண்ணலாமே!

உதாரணமாக வருண ஜபத்தால் மழை வருகிறது என்றால் அந்த ஜபத்தால் ஸூக்ஷ்ம சலனங்கள் ஏற்பட்டு அந்த சலனங்களால் மேகங்கள் இழுக்கப்பட்டு மழையை வர்ஷிக்கின்றன. இது வெறும் கல்பனையல்ல. அனுமானமும் அல்ல. 1925ம் ஆண்டில் சிருங்கேரி ஸம்ஸ்தானம் ஜகத்குருவாக அப்போது பிரகாசித்த ஸ்ரீ சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் காரைக்குடியில் முகாம் இருந்தபோது அங்கு மழையில்லாத காரணத்தால், ஜலகஷ்டம் சமாளிக்கமுடியாத நிலையாக இருந்தது. அப்போது ஸ்ரீ மடத்து ஸர்வாதிகாரியாக இருந்த ஸ்ரீ கண்ட சாஸ்திரிகள் இதனை ஸன்னிதானத்தில் தெரிவித்தார்கள். மஹாஸன்னிதானங்களே ஜபம் செய்தார்கள். உடனே ஸந்தததாரையாக மழை பெய்தது. இந்த அற்புதத்தைக் கண்டவர்களில் அடியேனும்

ஒருவன். இன்னும் பலர் இருப்பார்கள். ஆனால் மஹாஸ்வாமிகளிடம் ஏகாந்தத்தில் இதன் தத்துவத்தை திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று தைரியமாகக்கேட்டவன் நான்தான். வருணஜபம் செய்வதாலும் விராட பர்வம் வாசிப்பதாலும் ஸூக்ஷ்ம சலனங்கள் உண்டாக்கப்பட்டு மழை மேகங்கள் ஆகர்ஷிக்கப்படுகின்றன. விராடபர்வாவில் வருணபீஜம் கிரமமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று உபதேசித்தார்கள். ஆயினும் இதன் உண்மையை உணர பல ஆண்டுகள் ஆயின. பல மந்த்ர சாஸ்த்ரங்களை வாசித்தும் பல பெரியார்களிடம் கேட்டும் தான் அறிய முடிந்தது. அன்று மஹாஸ்வாமிகள் கூறிய ஒரு சில வார்த்தைகள்தான் அடியேனை மந்த்ர சாஸ்த்ர ஆராய்ச்சியில் ஈடுபடுத்தின. இதுவே மந்த்ரத்தின் ரகசியம்.

ஸ்ரீ வித்யையில் அம்பாளுக்குப் பல மந்த்ர த்ரஷ்டாக்களால் கண்டு பிடிக்கப்பட்ட பல மந்த்ரங்கள் இருக்கின்றன. பொதுவாக இது பன்னிரண்டு வகைப்படும். ஒவ்வொரு பேதமும் ஒவ்வொரு மந்த்ர த்ரஷ்டாவால் கண்டுபிடிக்கப்பட்டது.

மனு: சந்த்ர: குபேரச்ச லோபாமுத்ரா ச மன்மத: ।
அகஸ்திரக்னி: ஸூர்யச்ச இந்த்ர: ஸ்கந்த: ஶிவஸ்ததா ।
க்ரோத பட்டாரகோ தேவ்யா த்வாதஶாமீ உபாஸகா: ॥

मनुश्चन्द्रः कुबेरश्च लोपामुद्रा च मन्मथः ।
अगस्तिरग्निः सूर्यश्च इन्द्रः स्कन्दः शिवस्तथा ।
क्रोधभट्टारको देव्या द्वादशामी उपासकाः ॥

என்றபடி 12 விதமான மந்த்ரங்கள் 12 மந்த்ர த்ரஷ்டாக்களால் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இவர்கள் தவிர சந்த்ரன், நந்திகேச்வரர், ஹரி, யமன் இவர்களுடைய மந்த்ரங்களும் இருப்பதாகத் தெரிகின்றது.

ஸாமான்யமாய் ஸ்ரீ வித்யை என்ற மந்த்ரமானது ஷோடசாக்ஷரீ தான் என்றும் பஞ்சதசாக்ஷரீ அதில் அடங்கியது என்றும் ஒரு கருத்து உண்டு. எனினும் பஞ்சதசாக்ஷரி என்பது மிக முக்யமான மந்த்ரம் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஸௌந்தர்யலஹரியின்

32-வது சுலோகத்துக்கு எழுதப்பட்ட வ்யாக்யானத்தில் ஸ்ரீமத் த்ரிபுர ஸுந்தரியின் மந்த்ரமானது பதினாறு (ஷோடச) அக்ஷரங்களையுடையது என்பதும் அது பஞ்சதசாக்ஷரியோடு மிகவும் ரகஸியமானதும் குருவின் உபதேசத்தின் மூலமாகவே தெரிந்துகொள்ளவேண்டியதுமான ஒரு அக்ஷரம் சேர்ந்து ஏற்பட்டது என்பதும் ஸ்ரீ வித்யையின் அதிரஹஸ்ய மான விஷயம். அந்த அக்ஷரம்தான் அக்னி, ஸூர்ய, ஸோம கண்டங் களுக்கு மேல்பட்ட சந்த்ரகலா கண்டமாகும். இந்த அக்ஷரத்தை "துரீயாக்ஷரம்" (நான்காவது எழுத்து) என்று பரிபாஷையாகவே கூறுவர். பஞ்சதசாக்ஷரியில் முக்யமாக இரண்டு பேதங்கள் உண்டு. காதி, ஹாதி என்பவை. அதாவது 'க' என்ற அக்ஷரத்தை ஆதியாக (முதலாக). உடையது. 'ஹ' என்ற அக்ஷரத்தை முதலாக உடையது என்று இரண்டுவிதம். இதில் 'காதி' வித்யையிலும் 5 பேதங்கள் உண்டு. அவற்றில் மன்மதனால் பிரகடனப்படுத்தப்பட்ட காதி வித்யையே அதிகமாகப் பழக்கத்திலும் இருந்துவருவதோடு அதற்கு ப்ராதான்யமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. லலிதா ஸஹஸ்ரநாமத்தில்

ஸ்ரீ வித்யைவ து மந்த்ராணும் தத்ர காதிர் யதா பரா ।

श्रीविद्यैव तु मन्त्राणां तत्र कादिर्यथा परा ।

— *லலிதா ஸஹஸ்ரநாமம் பூர்வபாகம் சுலோகம் 17.*

அதாவது மந்த்ரங்களுக்குள் ஸ்ரீவித்யை சிறந்தது. அதில் காதி வித்யை சிறந்தது என்று கூறப்பட்டிருக்கின்றது. காதி வித்யைக்கு காமராஜர் அல்லது மன்மதன் ரிஷியானதால் அதற்கு காமராஜ வித்யை என்றும் பெயர் உண்டு. "ஹ" என்ற அக்ஷரத்தில் ஆரம்பிக்கும் மந்த்ரங்கள் இருந்தபோதிலும் லோபாமுத்ரா வித்யை என்பதே சிறந்த தாகக் கருதப்படுவதோடு ஹாதிவித்யோபாஸகர்களால் பெரும்பாலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. லலிதா த்ரிசதியும் காமராஜ வித்யை என்ற காதி வித்யையின் வரிசையிலேயே அமைந்திருக்கின்றது. லோபா முத்ரா வித்யையின் அடிப்படையிலேயே க்ரோதபட்டாரகர் என்றழைக்கப் படும் துர்வாஸர் தமது மஹாஷோடசீ மந்த்ரத்தை அமைத்திருக்கின்றார். ஸ்ரீசக்ரத்தைப்பற்றிக் கூறினபோது அதன் பூஜையில் லயக்ரமம், ஸிருஷ்டிக்ரமம் என இரண்டுவிதம் கூறினது ஞாபகமிருக்கலாம். காதி வித்யையை அனுஷ்டிப்பவர்கள் லயக்ரமத்திலும், ஹாதி வித்யையை

அநுஷ்டிப்பவர்கள் சிருஷ்டிக்ரமத்திலும் ஆவரண தேவதைகளை அமைத்து ஸ்ரீ சக்ரபூஜை செய்வது ஸம்பிரதாயம். ஸ்ரீவித்யா மந்தரங்கள் எத்தனையானுலும் அவைகளுக்குள் தாரதம்யம் சொல்லுவது அபசாரமே யாகும்.

மந்த்ரங்கள் சாதாரணமாய் நான்கு வகைப்படும். அவை 1. ஸித்தம், 2. ஸாத்யம், 3. ஸ்வஸித்தம், 4. அரி என்பன. இவற்றுள் ஸித்தம் என்பது ஜபத்தால் பலனளிப்பது. ஸாத்யம் என்பது க்ரியைகளுடன் சேர்ந்தே பலனை அளிப்பது. ஸ்வஸித்தம் என்பது ஜபம், க்ரியை இரண்டும் இல்லாமல் பாராயணத்தாலேயே பலனை அளிப்பது. அரி அல்லது ரிபு என்பது ஆபிசார மந்த்ரங்கள். இந் நான்கில் பஞ்சதசாக்ஷரி மந்த்ரம் முதல் வகுப்பைச் சேர்ந்தது. அதாவது தகுந்த குருவினுல் யதோக்தமாய் தீக்ஷையும் மந்த்ரோபதேசமும் பெற்று ஏகாக்ரமாய் முறைப்படி ஜபம் செய்யவேண்டும். ஜபம் செய்யுமுன் ஸ்நானம்செய்து தூய வஸ்த்ரம் அணிந்து விபூதி ருத்ராக்ஷம் அணிந்து வடக்கு முகமாகவோ கிழக்கு முகமாகவோ ஆஸனத்தில் அமர்ந்து அங்கந்யாஸம் கரந்யாஸம் செய்துகொண்டு தேவதையின் தியான சுலோகத்தை அனுஸந்தானம்பண்ணி குரு உபதேசித்தபடி மந்த்ரத்தின் ரிஷி, சந்தஸ், தேவதை, பீஜம், கீலகம், சக்தி என்ற ஆறு வ்யாஹ்ருதிகளையும் சொல்லி ஜபத்தை ஆரம்பிக்கவேண்டும். ஆஸனம் பலகையாகவோ, தர்ப்பையாகவோ, தூய வஸ்த்ரமாகவோ, மான்தோலாகவோ அல்லது புலித்தோலாகவோ கூட இருக்கலாம். ஆஸனங்கள் அவரவர் ஆச்ரமத்தைப் பொறுத்தது. பொதுவாகப் பலகையும், தூய வஸ்த்ரமும் யாரும் உபயோகிக்கலாம். புலித்தோல் அதிவர்ணுச்ரமிகளுக்கே உரியது என்று கூறப்பட்டிருக்கின்றது. பிரம்மசாரி மான்தோல் உபயோகிக்கலாம். கிருஹஸ்தன் தர்பையாலான ஆஸனம் உபயோகிக்கலாம். இதுபோன்றே ஜபத்துக்கு உபயோகிக்கப்படும் ஜபமாலைகளுக்கும் ஆச்ரம பேதம் உண்டாம். வெள்ளி, பொன், முத்து, பவளம், ருத்ராக்ஷம், துளசிமணி, ஸ்படிகம் இந்த வகையில் ஏதேனுமான மணிகளை நூற்றெட்டு, ஐம்பத்து நாலு, இருபத்தேழு கொண்டனவாக மாலைகள் செய்து உபயோகிக்கலாம். ஸ்படிக மாலையால் ஜபம் செய்வதும் தரிப்பதும் ஸன்யாஸிகளுக்கு உரியது என்று கூறுவர். யாவற்றிலும் ருத்ராக்ஷ மாலையே மிகச் சிறந்தது.

ஸௌந்தர்யலஹரியில் இரண்டு சுலோகங்களில் ஸ்ரீ வித்யா மந்த்ரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. வ்யாக்யாதாக்களுக்குள் அபிப்பிராயபேதம் இருப்பதால் சிலர் 32-வது சுலோகம் காதி வித்யை என்றும் 33-வது சுலோகம் ஹாதி வித்யை என்றும் பொருள்கொள்கின்றனர். வேறு சிலர் 32-வது சுலோகம்தான் ஹாதி வித்யை என்றும் 33-வது சுலோகம் காதி வித்யை என்றும் கூறுகின்றனர். இவ்விரண்டாவது அபிப்பிராயம் கூறுவதில் முதன்மையானவர் கைவல்யாச்ரமர் என்பவர். முந்தின அபிப்பிராயமே பெரும்பாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு சுலோகத்திலும் அக்ஷரங்களுக்கு பதிலாய் பரிபாஷை பதங்களைப் பயன்படுத்தியிருப்பதால் இந்தவிதமான அபிப்பிராயபேதம் ஏற்படு கின்றது. அம்மட்டேயன்றி 33-வது சுலோகத்தில் காதி வித்யா பஞ்சதசாக்ஷரியோடு சேர்க்கவேண்டிய மூன்று மந்த்ராக்ஷரங்களைக் குறிப்பதாகக் கருதுகிறுர்கள். முடிவு நேயர்களைப் பொருத்தது.

இனி காதிவித்யா மந்த்ராக்ஷரங்களைக்கூறலாம் என்று கருது கிறேன். இவ்வாறு வெளிப்படையாய் மந்த்ரங்களைச் சொல்லக்கூடாது என்று இதுவரை கருதப்பட்டு வந்தது. ஆனுல் புஸ்தகத்திலிருந்து வாசித்து மந்த்ரங்களை ஜபம் பண்ணமுடியாது. மந்த்ரத்தின் கால அளவு ஒவ்வொரு அக்ஷரத்தின் ஜன்யம், ஸ்வரம், பாஹ்யபிரயத்ன, ஆந்தர பிரயத்னம் முதலிய பல விஷயங்களை குருமுகமாகக் கேட்டாலன்றி மந்த்ரஜபம் பண்ண இயலாது. ஆகையால் தற்காலத்தில் பல மேதாவிகள் மந்த்ரங்களை அச்சிட்டு வழங்குவதின் தாத்பர்யம் அவற்றின் மீது படிப்பவர்களுக்கு ஓர் ருசியும் ஆஸக்தியும் உண்டாக்கவேண்டும் என்பதுதான். "தீ" என்று சொல்வதினுல் வாய் வெந்துபோகாது.

32வது சுலோகத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது காதிவித்யையே என்பது அடியேனின் கருத்து. அதன்படி பஞ்சதசாக்ஷரீமந்த்ரமானது

क ए ई ल ह्रीं ह स क ह ल ह्रीं स क ल ह्रीं

என்ற 15 அக்ஷரங்களாலாயது. இவற்றில் 'க, ஹ' என்ற அக்ஷரங்கள் சிவாக்ஷரங்கள் என்றும் 'ஏ ஈ ல ஸ' என்பவை சக்த் யக்ஷரங்கள் என்றும் 'ஹ்ரீம்' என்பது சிவசக்தி சம்மேளன அக்ஷரம் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

கத்ரயம் ஹத்வயம் சைவ சைவோ பாக: ப்ரகீர்த்தித: I
சக்த்யக்ஷராணி சேஷாணி ஹ்ரீம்கார உபயாத்மக: II

कत्रयं हद्वयं चैव शैवो भागः प्रकीर्तितः ।
शक्त्यक्षराणि शेषाणि ह्रींकार उभयात्मकः ॥

(லலிதாத்ரிசதி பலச்ருதி 9)

இந்த 15 அக்ஷரங்களும் இயற்கையாகவே மூன்று பாகங்களாக அமைந்திருக்கின்றன. க ஏ ஈ ல ஹ்ரீம் (क ए ई ल ह्रीं) என்பது முதல்பாகம். இதனை வாக்பவகூடம் என்று கூறுவர். லலிதா ஸஹஸ்ர நாமத்தில் 85வது நாமா,

" ஸ்ரீமத் வாக்பவகூடைக ஸ்வரூப முகபங்கஜா "

श्रीमद्वाग्भवकूटैकस्वरूपमुखपङ्कजा ।

என்பது. இந்த கூடத்திற்குமட்டும் 'ஸ்ரீ' என்ற சிறப்பு சேர்க்கப்பட்டிருப்பதற்குக் காரணம் இதில் அம்பாளின் அதிச்ரேஷ்டமான அக்ஷரமாகிய 'ஈம்' என்ற பீஜாக்ஷரம் இருப்பதுவே. மேலும் இந்த கூடமே அம்பாளின் திருமுகமண்டலமாகக் கருதப்படுகின்றது. சரீரத்தில் அதிமுக்ய பாகம் முகம் அல்லவா ?

அடுத்துவரும் 6 அக்ஷரங்களான ஹ ஸ க ஹ ல ஹ்ரீம் (ह स क ह ल ह्रीं) என்பது காமராஜகூடம் எனப்படும். இதை ஸஹஸ்ர நாமாவில் 86-வது நாமாவில்

கண்டாத: கடிபர்யந்த மத்யகூட ஸ்வரூபிணீ

कण्ठाधःकटिपर्यन्तमध्यकूटस्वरूपिणी ।

என்று கூறப்பட்டிருக்கின்றது. அம்பாளின் கழுத்திலிருந்து கடிப்ரதேசம்வரை இந்த ஆறு அக்ஷரங்கள்.

அடுத்துவரும் 4 அக்ஷரங்கள் ஸ க ல ஹ்ரீம் (स क ल ह्रीं) என்பன சக்திகூடம் என்று கூறப்படும். அது அம்பாளின் கடிப்ரதேசத்திலிருந்து பாதம்முடிய உள்ள பாகம். ஆக இந்த 15 அக்ஷரங்களும் அம்பாளின் மந்த்ரரூபமாகும். அம்பாளின் ஸ்தூலரூபம் "க்வணத்காஞ்சீதாமா" क्वणत्काञ्चीदामा என்ற ஸௌந்தர்யலஹரி

7-வது சுலோகத்திலும், யந்த்ரரூபமான ஸ்ரீ சக்ரம் "சதுர்பி: ஸ்ரீ கண்டை:" **चतुर्भिः श्रीकण्ठैः** என்ற 11-வது சுலோகத்திலும், மந்த்ரரூபம் 32-வது சுலோகத்திலும் கொடுக்கப்பட்டிருக்கின்றது காண்க. லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் 'மூலகூடத்ரயகளேபரா' (**मूलकूटत्रयकलेबरा**) என்ற 88-வது நாமாவை பஞ்சதசாக்ஷரீ மந்த்ரத்தின் மூன்று கூடங்களைத் தன் சரீரமாக உடையவள் என்று ஒரு பொருள் கொள்கின்றனர். பின்னால் இதற்கு வேறு பொருள் கூறப்படும்.

இனி மூலாதாரம் முதலிய ஆறு ஆதார ஸ்தானங்கள் அடங்கிய ப்ரதேசத்தை குலப்ரதேசம் என்று கூறுவது மரபு. அது அக்னிமண்டலம் ஸூர்யமண்டலம், சந்த்ரமண்டலம் என்று மூன்று பிரிவுகளாக இருக்கின்றது. ஒவ்வொரு மண்டலத்தின் முடிவிலும் ப்ரம்ம க்ரந்தி, விஷ்ணுக்ரந்தி, ருத்ரக்ரந்தி என்று மூன்று முடிச்சுகள் உள்ளன. அதே மாதிரி பஞ்சதசாக்ஷரீ மந்த்ரத்தின் மூன்று பாகங்களையும் சொல்லலாம். வாக்பவ கூடத்தின் முதல் நான்கு அக்ஷரங்கள் அக்னிமண்டலம் அதிலுள்ள ஹ்ரீம்காரம் ப்ரம்மக்ரந்தி. அடுத்த காமராஜகூடத்தின் முதல் 5 அக்ஷரங்கள் சூர்யமண்டலம். அதில் வரும் ஹ்ரீம்காரம் விஷ்ணுக்ரந்தி. அடுத்த சக்தி கூடத்தின் மூன்று அக்ஷரங்கள் ஸோமமண்டலம். அதில் வரும் ஹ்ரீம்காரம் ருத்ரக்ரந்தி இதனை அடுத்த அத்தியாயம் "பராசக்தியும் குண்டலினியும்" என்பதில் விவரிப்போம்.

பஞ்சதசீ மந்த்ரத்தின் பாவார்த்தம், தத்துவார்த்தம் முதலிய 15 விதமான அர்த்தங்களையும், அதற்கும் பூர்ணகாயத்ரீ மந்த்ரத்துக்குமுள்ள ஸாம்யத்தையும் அறியவேண்டும். அறிய விரும்புகின்றவர்கள் ஸ்ரீ பாஸ்கரராயரால் அருளப்பட்ட "வரிவஸ்யா ரஹஸ்யம்" இரண்டாவது அம்சத்தைப் பார்க்க. ஈண்டு கொடுக்க இடவசதியில்லை.

மந்த்ரோபாஸனை விஷயமாக ஒரே ஒரு விஷயம் அவசியம் அறிய வேண்டும். வியாகரணம் முதலிய வேத இலக்கண நூல்களில் ஒவ்வொரு எழுத்துக்கும் எட்டு அம்சங்கள் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது. அவை:—

1. த்வனி: **Sound**
2. ஸ்தானம்: **Place of origin.** இது நான்கு.
   பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ.

3. கரணம் : action of organs of Pronouncing

4. ப்ரயத்னம் : Exertion in producing the sound இது இரண்டுவிதம் ஆந்தரப்ரயத்னம் or Internal exertion & பாஹ்யப்ரயத்னம் or External exertion.

5. மாத்திரை : Time கால அளவு

6. ஸ்வரம் : mode of pronouncing இது மூவகை : உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம்

7. தேவதை : Presiding Deity

8. ஜாதி : ஊஷ்ம, ஸௌம்ய, ஆக்னேய என்று மூன்று வகை.

மந்த்ர உபாஸனையில் குறிப்பிட்ட மந்த்ரத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தின் மாத்திரைக்கணக்கு, உற்பத்தி ஸ்தானம், அதில் பிரதான ஸ்தானம் எது உதவிஸ்தானம் எது என்னும் விபரம், ஒவ்வொருஎழுத்தும் உச்சரிக்க வேண்டிய ஸ்வரம் அதாவது ஏற்றியும் தாழ்த்தும் அழுத்தியும் சொல்ல வேண்டிய முறை, அப்பொழுது சரீரத்தில் ஏற்படும் ஆந்தர, பாஹ்ய ப்ரயத்னங்கள், ஒவ்வொரு ஸ்வரத்துக்கும் ஆதாரமான காற்றை விடும் முறை முதலியன அறியவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இவ்வாறு அறிந்து ஜபிக்கப்படும் மந்த்ரங்களே கோரிய ஸ்பந்தனங்களை (Vibration) தரும். அதோடு அந்தந்த அக்ஷர ஸ்தானங்களின் நாடிகள் பாதிக்கப்படுவதால் குண்டலினி சலனம் உண்டாக ஹேதுவாகின்றது. ஒரு எழுத்தோ, ஒரு ஸ்வரமோ, ஒரு கால அளவோ, உச்சரிப்போ மாறிவிட்டால் உத்தேச பலன் மாறிவிடும் அல்லது விபரீத பலனையும்கூட உண்டுபண்ணிவிடும். ஆனால் தகுந்த குருமுகமாக உபதேசிக்கப்பட்டு அவர் உச்சரிக்கும் முறை கால அளவு முதலியன அறிந்து அவராலேயே அங்கீகாரம் பண்ணப்பட்ட பின் ஜபம் செய்தால் இந்த விரைங்கள் முழுதும் உபாஸகர்களுக்குத் தெரியாவிட்டாலும் மந்த்ரம் பலன் அளிக்கும். அதனாலேதான் மந்த்ரங்களை தகுந்த குரு மூலமாகவே கிரஹிக்கவேண்டும். குருவும் சிஷ்யனை நன்கு பரீக்ஷை பண்ணி தகுதியுள்ளவனாகக்கண்டு மந்த்ரத்தை தானம் செய்யவேண்டும்.

தற்காலத்தில் இந்த முறை மாறிவருகின்றது. அது வருந்தத் தக்கது. ஒருசிலர் எவ்வாறே மந்த்ரங்களை ஸ்வாதீனம் செய்து கொண்டு நிறைய பணம் கொடுப்பவர்களுக்கெல்லாம் தீக்ஷையும்செய்து மந்த்ரோபதேசம் செய்துவிடுகின்றனர். வரிவஸ்யாரஹஸ்யத்தில் முதலம்சம் **14–19** சுலோகங்களில் பஞ்சதசாக்ஷரியின் மாத்திரை, ஸ்தானம் பிரயத்னம் முதலிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் அதையும் குருமுகமாகவே தான் அறியவேண்டும். ஏட்டுச் சுரைக்காய் எப்பவும் கரியாகாது. பஞ்சதசாக்ஷரீ மஹாமந்த்ரத்தோடு, அதன் இறுதியில் குருவினுல் உபதேசிக்கப்பட்ட ஓர் அக்ஷரத்தைச் சேர்ப்பதினுல் அது ஷோடசாக்ஷரியாகின்றது என்பது முன்பே கூறப் பட்டது. அது தவிர ஒவ்வொரு கூடத்தின் முதலிலும் பாலாமந்த்ரத்தின் மூன்று அக்ஷரங்களில் ஒவ்வொன்றைச்சேர்த்தால் அது ஸௌபாக்ய பஞ்சதசாக்ஷரீ ஆகின்றது. இதுதான் சாதாரணமாய் பழக்கத்தில் இருந்துவருகின்றது. அப்படி ஆகும்பொழுது மந்த்ரம் இந்த ரூபத்தை யடைகின்றது.

ऐं क ए ई ल ह्रीं क्लीं ह स क ह ल ह्रीं सौः स क ल ह्रीं

இதன் உச்சரிப்பு, கால அளவு முதலியவற்றை குரு முகமாகவே அறிந்து ஜபிக்கவேண்டும் என்பதைத் திரும்பவும் வலியுறுத்திச் சொல்லுகிறேம்.

மந்த்ரத்தின் கால அளவு இன்னெருவிதத்திலும் முக்யமாகின்றது. பிராணயாமம் செய்து குண்டலினியை எழுப்ப பிரயத்னம் பண்ணும் ஸாதகர்களுக்கு பூரகம் செய்யும்போது எவ்வளவு அளவு பிராண வாயுவை உள்ளே இழுக்கவேண்டும், எவ்வளவு நேரம் உள்ளே கும்பகம் செய்யவேண்டும் எவ்வளவு கால அளவில் ரேசகம் செய்யவேண்டும் என்ற நியதி உண்டு. இதை எப்படி அளப்பது? வலதுகைப் பெரு விரலால் வலது நாசியை அழுக்கி மூடிக்கொண்டு, மோதிரவிரலால் இடது நாசியை லேசாக அழுத்திக்கொண்டு மந்த்ரத்தை ஒரு தரம் முறைப்படி, குரு உபதேசித்தபடி சொல்லும் காலத்தில் பிராண வாயுவை உள்ளே இழுத்து, மந்த்ரத்தை இரண்டு முறை சொல்லும் கால அளவில் உள்ளே கும்பித்துப் பின் மந்த்ரத்தை ஒரு முறை

உச்சரிக்கும் கால அளவில் மெதுவாக வலது நாசி வழியாக விட வேண்டும். மூச்சை உள்ளே இழுந்த உடன் கட்டை விரலாலும் மோதிர விரலாலும் இரண்டு நாசியையும் மூடி விடவேண்டும். பின்பு ரேசகம் செய்யும்போது கட்டை விரலை மட்டும் தளர்த்தி வலது நாசி வழி ரேசகம் செய்யவேண்டும். இது ஆரம்ப ஸாதகர்களுக்கு. பழகிப் பழகி கும்பக நேரத்தை அதிகப்படுத்திக்கொண்டே வரவேண்டும். மூச்சுத் திணரும் அளவுக்கு முயற்சி செய்யக்கூடாது. நிதானமாக நீண்டகாலப் பழக்கத்தால் கும்பகத்தின் நேரம் அதிகரிக்கும்படி செய்து வந்தால் ஓர் குறிப்பிட்ட அளவில் குண்டலினீ சலனத்தை நன்கு உணரலாம். நாதமும் கேட்கும். குண்டலினியைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் கூறுவோம்.

ஒருவாறு மந்த்ரத்தைப் பற்றிக் கூறினோம். விவரம் அதிகம் வேண்டியவர்கள் குருவின் மூலமோ நூல்கள் மூலமோ அறியலாம்.

ஏழாவது அத்தியாயம்

பராசக்தியும் குண்டலினியும்

லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தின் 38, 39, 40-வது சுலோகங்கள்

மூலாதாரைகநிலயா ப்ரஹ்மக்ரந்தி விபேதினீ ।
மணிபூராந்தருதிதா விஷ்ணுக்ரந்தி விபேதினீ ॥

ஆக்ஞா சக்ராந்தராளஸ்தா ருத்ரக்ரந்தி விபேதினீ ।
ஸஹஸ்ராராம்புஜாரூடா ஸுதாஸாராபிவர்ஷிணீ ॥

தடில்லதாஸமருசி; ஷட்சக்ரோபரி ஸம்ஸ்திதா ।
மஹாஶக்தி: குண்டலினீ பிஸதந்துதனீயஸீ ॥

(मूलाधारैकनिलया ब्रह्मग्रन्थिविभेदिनी ।
मणिपूरान्तरुदिता विष्णुग्रन्थिविभेदिनी ॥
आज्ञाचक्रान्तरालस्था रुद्रग्रन्थिविभेदिनी ।
सहस्राराम्बुजारूढा सुधासाराभिवर्षिणी ॥

तटिल्लतासमरुचिः षट्चक्रोपरिसंस्थिता ।
महाशक्तिः कुण्डलिनी बिसतन्तुतनीयसी ॥)

என்று குண்டலினி சக்தியை சுருக்கமாக விவரிக்கின்றன. இதைப்பற்றி பூர்ணமான அறிவு அடைய விரும்புகிறவர்கள் ஆர்தர் ஏவலன் என்ற ஆங்கில ஆசிரியர் எழுதிய "செர்பன்ட்பவர்" என்ற நூலைப் பார்க்கவும். வேறெந்த நூல்களிலும் இவ்வளவு தெளிவாய் இந்த விஷயம் விளக்கப் பட்டிருப்பதாக அடியேனுக்குத் தெரியவில்லை. ஸம்ஸ்கிருதத்தில் "ஷட்சக்ர நிருபணம்" என்ற நூல் "பூர்ணானந்தர்" என்ற ஸித்தரால் எழுதப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. அங்கும் காணலாம். சாக்த உபாஸகர்கள் குண்டலினியைப்பற்றி அவசியம் தெரிந்தே இருப்பார்கள். ஆகையால் ஈண்டு மிகச்சிறிய அளவில் ஒருவாறு கூறலாம் என்று நினைக்கின்றேன். ஸமய மார்க்கத்தின் உபாஸனுக்ரமம் ருத்ரயாமளத் தில் பத்து படலங்களில் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றது. சுருக்கமாகக் கூறுவோம். ஸாதகனானவன் தீக்ஷையடைந்தபின், குருவின் கடாக்ஷத்தால் சதுர்வித ஐக்யாநு ஸந்தானம் ஏற்பட்டு பிறகு மஹாநவமியில் "மஹாவேதா" என்ற தீக்ஷாஸம்ஸ்காரம் அடைந்து, தியானம், ஜபம் பூஜை முதலியவற்றை குரு உபதேசப்படி செய்து கொண்டுவர நாளடைவில் குண்டலினீசக்தியானவள் மூலாதாரத்தில் விழித்து மேலே கிளம்பி வரிசையாக ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி ஆக்ஞை என்ற ஷட்சக்ரங்களையும் மூன்று கிரந்தி களையும் பேதித்துக்கொண்டு ஸஹஸ்ராரபத்மத்தை அடைந்து சந்த்ரகலா மண்டலத்தில் பெருகும் அமிர்தத்தால் சரீரத்தின் 72000 நாடிகளையும் நனைத்து ஜீவன்முக்தி நிலையை அருள்வாள் என்பதுதான் தாற்பரியம்.

நமது சரீரத்தின் முதுகு எலும்புக் கோர்வைக்கு மேருதண்டம், வீணாதண்டம், பிரம்மதண்டம் என்றெல்லாம் பரிபாஷா நாமங்கள் உண்டு. அதன் உள்புரத்தில் ஸுஷும்னா அல்லது சுழுமுனை என்ற நாடி இருக்கின்றது. அதன் இரண்டு பக்கங்களிலும் பிங்கலா என்ற சூரிய நாடியும், இடா என்ற சந்த்ர நாடியும் இடசாரி வலசாரியாக மேலே செல்லும். அவை சுஷும்னையை மூன்று இடங்களில் சந்திக்கின்றன. இந்த சந்திகளுக்கு கிரந்திகள் என்று பெயர். கிரந்திகள் என்றால்

முடிச்சு என்று பொருள். சுஷும்னையில் ஆறு ஆதார ஸ்தானங்கள் உள. அவை அடியிலிருந்து,

(1) மூலாதாரம் என்பது குத ஸ்தானத்துக்கும் குஹ்ய ஸ்தானத்துக்கும் மத்தியில் இருக்கின்றது. திருமூலர் வாக்குப்படி எருவிடு வாசலுக்கும் கருவிடு வாசலுக்கும் மத்தி. இதில் 4 இதழ்கள் இருக்கின்றன. இது பிருதிவி ஸ்தானம். இங்குதான் குண்டலினீ தன்னையே 3½ சுத்துச் சுற்றிக்கொண்டு உறங்கிக்கொண்டிருக்கும். இதன் உச்வாச நிச்வாசமே அஜபா மந்த்ரமாகும்.

(2) அதற்குமேல் குஹ்ய ஸ்தானத்தில் ஸ்வாதிஷ்டானம் என்ற ஆதாரம் இருக்கின்றது. இதற்கு ஆறு இதழ்கள் இது அப்புஸ்தானம்

(3) அதற்குமேல் நாபிஸ்தானத்தில் மணிபூரகம் என்ற ஆதாரம் இருக்கும். மணிபூரகத்துக்கும் ஸ்வாதிஷ்டானத்துக்கும் இடையே மூன்று நாடிகளும் சந்திக்கின்றன. அந்த சந்திக்கு பிரம்ம க்ரந்தி என்று பெயர். மூலாதாரத்திலிருந்து இந்த பிரம்ம க்ரந்தி வரையிருக்கும் பாகத்துக்கு அக்னி மண்டலம் என்று பெயர். இந்த அக்னி மண்டலத்தில் மூலாதாரமும் ஸ்வாதிஷ்டானமும் உள.

மணிபூரகம் என்பது 10 இதழ் கொண்ட ஆதார ஸ்தானம். இது அக்னியின் கூறு.

(4) அதற்குமேல் ஹ்ருதய ஸ்தானத்தில் 12 இதழ் கொண்ட அனுஹதம் என்ற ஆதார ஸ்தானம் இருக்கின்றது. இது வாயுவின் கூறு.

(5) அடுத்து கண்டப்ரதேசத்தில் (கழுத்து) விசுத்தி என்ற ஸ்தானம் இருக்கின்றது. விசுத்திக்கும் அனுஹதத்துக்கும் இடையே மூன்று நாடிகள் சந்திக்கும். அந்த சந்திக்கு விஷ்ணுக்ரந்தி என்று பெயர். இதில் 16 இதழ்கள் இருக்கும். ஆகாச ஸ்தானம்.

(6) இதற்குமேல் புருவங்களின் மத்தியப்ரதேசத்தில் இருப்பது ஆக்ஞை என்ற ஆதாரஸ்தானம். இது மனஸ் தத்துவம். இரண்டு இதழ். இந்த இடத்தில் மூன்று நாடிகளும் சந்திக்கின்றன. ஆகையால் இதற்கு திரிவேணீ சங்கமம் என்றும் பெயர், பிரம்ம க்ரந்திக்கும்

விஷ்ணு க்ரந்திக்கும் இடையே இருக்கும் ப்ரதேசத்துக்கு சூர்ய மண்டலம் என்று பெயர். இம்மண்டலத்தில் மணிபூரகம் அனுஹதம் என்ற இரண்டு ஆதார கமலங்கள் உள. ஆக்ஞையில் மூன்று நாடிகளும் சந்திக்கும் முடிச்சுக்கு ருத்ர க்ரந்தி என்று பெயர். விஷ்ணு க்ரந்திக்கும் ருத்ர க்ரந்திக்கும் இடையில் இருக்கும் ப்ரதேசத்துக்கு சந்த்ர மண்டலம் என்று பெயர்.

இந்த ஆறு ஆதாரங்களுக்குமேல் நமது சிரஸின் உள் பாகத்தில் இருப்பதுதான் ஸஹஸ்ரார கமலம் அல்லது ஆயிரம் இதழ் தாமரை. இங்கு குண்டலினி வந்து சேரும்போது அமிர்தம் வர்ஷிக்கின்றது. இதைத்தான் லலிதா ஸஹஸ்ர நாமாவில்

" ஸஹஸ்ராராம்புஜாரூடா ஸுதா ஸாராபிவர்ஷிணீ "

'सहस्राराम्बुजारूढा सुधासाराभिवर्षिणी'

என்று கூறப்பட்டிருக்கின்றது.

நமது சரீரத்தை பிண்டாண்டம் (microcosm) என்றும் பிரபஞ்சத்தை பிரம்ஹாண்டம் (macrocosm) என்றும் சொல்லுவார்கள். பிரம்ஹாண்டத்தில் இருப்பதெல்லாம் நமது சரீரத்திலும் இருப்பதால் இதனை க்ஷுத்ர (சிறிய) பிரம்ஹாண்டம் என்றும் கூறுவர். அண்டத்திலுள்ளது பிண்டத்தில் என்பது பழமொழி. பிரம்ஹாண்டத்தில் ஸமஷ்டிரூபமாய் இருப்பது நமது சரீரத்தில் வியஷ்டிரூபமாய் இருக்கின்றது. பரப்ரம்ஹத்தின் இரண்டு பரிணுமங்களான சிவம் சக்தி இரண்டும் நமது சரீரத்திலும் இருக்கின்றன. நமது ஆன்மா சிவ ஸ்வரூபம். சக்தியின் ஸ்வரூபமே குண்டலினீ. பிரபஞ்சமானது சக்தியின்றி செயல்படாது. அதுபோல குண்டலினீயின்றி நமது சரீரமும் செயல்படாது. அதனுல்தான் ஸஹஸ்ர நாமாவிலும் " மஹா சக்தி: குண்டலினி " என்று இரண்டும் சேர்த்துச் சொல்லப்பட்டது.

குண்டலினி ஓர் ஸர்ப்பம்போல மூலாதார க்ஷேத்ரத்தில் இருக்கும் ஓர் கர்ணிகையை தன் சரீரத்தால் 3½ சுத்து சுற்றிக்கொண்டு அந்த கர்ணிகையின் உச்சியில் தன் சிரஸைவைத்துக்கொண்டு உறங்குவதாகச் சொல்லப்படுகின்றது. குண்டலாகாரமாய் இருப்பதாலேயே குண்டலினீ என்று பெயர் வழங்கப்படுகின்றது. இது மின்னல்கொடி போன்று

பிரகாசமாய் இருக்கின்றதாம் (தடில்லதா ஸமருசி:) தாமரைத்தண்டி லிருக்கும் நூல் போன்று லேசானதாம் (பிஸதந்து தனீயஸீ) குண்டலினி எழும்பி சுஷும்னுவழியாக மேலேறிச்செல்லுங்கால் வேல் போன்று தோற்றம் அளிக்கும். குண்டலினியே முருகன் என்றும் முருகன் பராசக்தியின் வியஷ்டிரூபம் என்றும், அண்டத்துக்கு பராசக்தி எப்படியோ அப்படியே பிண்டத்துக்கு முருகன் என்றும் சித்தாந்தப் படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே தாயும் சேயும் ஒரே தத்துவத்தின் இரண்டு பரிணமங்கள்.

ஸமய மார்க்கப்படி மூலாதாரத்தில் உறங்கிக்கொண்டிருக்கும் குண்டலினியை எழுப்பி ஷட்சக்ரங்களின் வழியாக மேலே கொண்டு போய் ஸஹஸ்ராரத்தில் சேர்ப்பதுவே லக்ஷியம். அவ்விதம் ஸஹஸ்ராரத் தில் சேர்க்கும் ஸாதகனே யோகி, சித்தன், ஜீவன்முக்தன் ஸஹஸ்ராரத் தில் சிவசக்திகள் இருவரும் ஐக்கியப்பட்டு ஒன்ருகவே திகழ்வார்கள். இங்குள்ள சிவத்துக்கு ஸதாசிவம் என்றும் சக்திக்கு மனோன்மனி என்றும் பெயர். குண்டலினியை யோகாப்யாஸத்தினுல் எழுப்புவது உண்டு. யோகாப்யாஸம் இல்லாதவர்களும்கூட மந்த்ரஜபம், த்யானம் இவைகளால் ஏற்படும் பாவனுதார்ட்யத்தால் அச்சக்தியை எழுப்பமுடியும். இதற்கு ஆகார நியதியும் பூரணபிரம்மசர்யமும் அவசியம். இந்திரிய நிக்ரஹம் இல்லாதவன் எதையுமே ஸாதிக்கமுடியாது.

மேலே சொன்ன மஹா வேதா என்ற ஸம்ஸ்காரத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறலாம். குருவினிடமிருந்து உபதேசமாகவேண்டிய தான மஹா வித்யையை அவரிடமிருந்து தெரிந்துகொண்டு உபதேச ப்ரகாரம் ரிஷ்யாதி ந்யாஸங்களுடன் மூல மந்த்ரத்தை ஜபம் செய்து அப்யாஸமான பிறகு அர்ப்பசி மாதம் சுக்ல பக்ஷத்தில் வரும் நவமி யன்று (அதாவது அஷ்டமியின் நடு நிசியில்) குருவினுடைய சரணர விந்தங்களையடைந்து அவரால் ஹஸ்தமஸ்தக ஸம்யோகம் செய்யப் பட்டு பின்பு மந்த்ரோபதேசம், ஷட்சக்ரபூஜா பத்ததி உபதேசம் ஷட்வித ஐக்யானுஸந்தான உபதேசம் இவற்றைப்பெறுவதே மஹா வேதா என்ற ஸம்ஸ்காரம் என்று தந்த்ர சாஸ்த்ரங்களில் கூறப்பட்டிருக் கின்றது. இவ்வாறு தீக்ஷா ஸம்ஸ்காரம் பெற்ற சிஷ்யன் தீர்க்க கால நைரந்தர்ய ஸத்காரம் செய்துவரவேண்டும்.

குண்டலினீ சக்தியை குலாங்கனையென்றும், ஷட்சக்ரங்களடங்கிய ஸுஷும்ன மார்க்கத்துக்கு ராஜவீதி, குலபதம் என்றும் கூறுவது மரபு.

இந்த ஆறு சக்ரங்களும் மூலாதாரத்திலிருந்து மேல் வரிசையில் ப்ருதிவீ, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், மனஸ் என்ற ஆறு தத்துவங்களின் ஸ்தானங்கள் என்று முன்பு சொன்னோம். இதில் சில தந்த்ரங்கள் மணிபூரம் அப்பு தத்துவம், ஸ்வாதிஷ்டானம் தேயு தத்துவம் என்று வரிசைமாறிக் கூறுகின்றன. ஸ்ரீ சங்கரரும் ஸௌந்தர்ய லஹரீ 9 வது சுலோகத்தில் மூலாதாரத்துக்கு அடுத்தபடி மணிபூரகத்தையே கூறியிருக்கின்றார். ஷட்சக்ர நிரூபணம் என்ற கிரந்தத்திலும், ஆர்தர் ஏவலன் எழுதியுள்ள 'செர்பென்ட் பவர்' என்ற ஆங்கில நூலிலும் மூலாதாரத்துக்கு அடுத்தபடி ஸ்வாதிஷ்டானத்தைக் கூறுவதுடன் அதுவே அப்புவின் ஸ்தானம் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. குண்டலினீ யோகம் அப்யஸித்த ஓர் மஹான் தன் அனுபவத்தில் ஷட்சக்ர நிரூபண வரிசையே சரி என்று கண்டிருப்பதாகச் சொன்னார்.

ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் அருளிய ஸௌந்தர்யலஹரியின் முதல் 41 சுலோகங்களிலும் சாக்தோபாஸனைக்குத் தேவையான சக்திதத்துவம் குண்டலினி, ஷட்சக்ரங்கள், காமகலை, யந்த்ரம், மந்த்ரம் இவைபோன்ற வேறு விஷயங்களும் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. ஸௌந்தர்ய லஹரிக்கு அநேக வ்யாக்யானங்கள் இருக்கின்றன. தெரிந்தவரையில் 36 வ்யாக்யானங்கள் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது. இவற்றுள் லக்ஷ்மீதரர் வ்யாக்யானமே மிகச்சிறந்ததாகப்பண்டிதர்களால் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

குண்டலினீ சக்தியைக் கண்டுபிடித்து அதனைப் பயன்படுத்துவதை அறிந்த நமது முன்னோர்களின் சாமர்த்தியம் சொல்லவொண்ணாதது. தற்கால விக்ஞான சாதனங்களால்கூட அறியமுடியாத இந்த அரிய தத்துவத்தை அனுபவ பூர்வமாக கண்டறிந்த நமது மந்த்ர த்ரஷ்டாக்கள் இறைவியின் அம்சமே என்றுதான் சொல்ல முடியும். அதிலும் சரீரம் ஜீவிய தசையில்தான் இதை அனுபவிக்க முடியும். எக்ஸ்ரேயும் ஏனைய தற்கால சாதனங்களும்கூட இதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதைக் கண்டுபிடித்த நமது மஹரிஷிகள் நமது புராணங்களில் எல்லா

தேவதைகளுக்கும் பாம்பை ஆபரணமாகவும், படுக்கையாகவும், கங்கணமாகவும், யக்ஞோபவிதமாகவும் புகுத்தினதுமட்டுமல்லாமல் பாற்கடல் கடைந்தது போன்ற புராணக் கதைகளையும் உருவகமாக நமக்கு அளித்துள்ளார்கள். சித்தர் நூல்களில் குண்டலினியைப்பற்றிய விரங்கள் வெகுவாகக் காணப்படுகின்றன. அருணகிரியார் பாடல் களிலும், தாயுமானவர் பாடல்களிலும், குண்டலினியின் பிரயோகம் கூறப்பட்டிருக்கின்றது. 'திருமூலர் திருமந்திரம்', 'ஔவை குறள்', 'ஔவை விநாயகர் அகவல் இவற்றிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. சுருங்கச்சொன்னால் நமது சமய சித்தாந்தங்கள் யாவுமே குண்டலினி யின் பிராதான்யத்தைக் கூறுவனவாக உள. வடமொழி போன்றே தமிழிலும் ஏராளமான நூல்கள் இருக்கின்றன. குண்டலினீ சக்தியைப் பற்றி மேலும் அறிய விரும்புகிறவர்கள் அந்த நூல்களை அப்பியஸித்து அறிந்துகொள்ளலாம்.

எட்டாவது அத்தியாயம்

"காம கலை"

அம்பாளுடைய ஸூக்ஷ்மரூபத்தை, ஸூக்ஷ்மம், ஸூக்ஷ்மதரம், ஸூக்ஷ்மதமமென்று மூன்று வகையாக சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஸூக்ஷ்மரூபமே பஞ்சதசீவித்யாமந்த்ரம். ஸூக்ஷ்மதரம் என்பதுவே காமகலாக்ஷரம், ஸூக்ஷ்மதமம் என்பது குண்டலினி என்று சொல்லப் படும். காமகலாக்ஷரரூபமான அம்பாளுடைய ஸூக்ஷ்மதரரூபத்தை தியானம் செய்யும் முறையை

"பிந்துநா முகம், பிந்துத்வயேன குசௌ, ஸபரார்த்தேன யோனிம் க்ருத்வா காமகலாமிதி த்யாத்வா"

(बिन्दुना मुखं बिन्दुद्वयेन कुचौ सपरार्धेन योनिं कृत्वा कामकलामिति ध्यात्वा)

என்று பரசுராம கல்ப ஸூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. சங்கரருடைய ஸௌந்தர்யலஹரீ 19-வது சுலோகம்

"முகம் பிந்தும் க்ருத்வா குசயுகம் அதஸ்தஸ்ய தததோ
ஹரார்தம் த்யாயேத் யோ ஹரமஹிஷி தே மன்மதகலாம்"

(मुखं बिन्दुं कृत्वा कुचयुगमधस्तस्य तदधो
हरार्धं ध्यायेद्यो हरमहिषि ते मन्मथकलाम्)

என்று கூறுகின்றது.

ஸ்ரீமத் பரமஹம்ஸ மஹாயோகி புண்ணியாநந்தநாதர் என்பவரால் இயற்றப்பட்ட "காமகலா விலாஸம்" என்ற சீரிய கிரந்தம் ஒன்று உளது. அது ஆர்தர் ஏவலன் என்பவரால் ஆங்கிலத்தில் வியாக்யானத்தோடு அச்சிடப்பட்டிருக்கிறது. ப்ரம்மஸ்ரீ அபிநவபாஸ்கர வரகவி ந. சுப்ரமண்ய அய்யர் அவர்களால் தமிழில் வியாக்யானத்தோடு பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. பாஸ்கரராயர் எழுதிய வரிவஸ்யா ரஹஸ்யத்திலும் காம கலை பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

காம கலையே ஜகத் காரண வஸ்து என்பது நமது சித்தாந்தம். பிரகாசாம்சமான ப்ரம்மமும், விமர்சாம்சமான சித்சக்தியும் சேருவதாலேயே பிரபஞ்ச உற்பத்தி ஏற்படுகின்றது. காம கலையில் கூறப்படும் மூன்று பிந்துக்களில் முதலாவது சுக்லபிந்து என்பது ப்ரம்மத்தையும், ரக்தபிந்து என்பது சித் சக்தியையும் மிச்ரபிந்து என்பது இருவரின் சம்மேளனத்தையும் குறிக்கும். காமகலாக்ஷரம் क्लीं (க்லீம்) என்பது. காமகலாத்யானம் அதிரஹஸ்யமான விஷயம். குரு முகமாகவே அறிந்து அனுஷ்டிக்கப்பட வேண்டும். ஆகையால் ஈண்டு அதனைக் கூறவில்லை. இதைப்பற்றி அறிய ஆவல் உள்ளவர்கள் காமகலா விலாஸம் என்ற அரிய க்ரந்தத்தையோ, அதன் ஆங்கில மொழிபெயர்ப்பையோ, அல்லது தமிழ் மொழிபெயர்ப்பையோ வாசித்துத் தெரிந்து கொள்ளலாம். சாக்த சித்தாந்தம் என்று தொடங்கிய இந்த வியாஸத்தில் காம கலை என்பதைப்பற்றி பிரஸ்தாபிப்பது அவசியம் என்பதால் இம்மட்டும் கூறினேம்.

ஒன்பதாவது அத்யாயம்

நவராத்ரி பூஜை

சாக்தோபாஸகர்கள் ஒவ்வொரு சுக்ரவாரத்திலும் பௌர்ணமி தினங்களிலும், விஷு புண்யகாலங்களிலும் மகர சங்க்ராந்தியிலும் நவாவரண பூஜை செய்து வரவேண்டும். நித்யானுஷ்டானமாக ஜபம் செய்து வர

வேண்டும். மற்ற தினங்களில் ஸ்ரீ சக்ரத்துக்கு தூப தீப நைவேத்ய உபசாரம் செய்து வர வேண்டும்.

முக்யமாக நவாத்ரியில் 9 நாளும் நவாவரண பூஜை செய்து வர வேண்டும். நவராத்ரி மஹிமையைப்பற்றி தேவீ பாகவதம் மூன்ருவது ஸ்கந்தம் 26. 27வது அத்யாயங்களிலும் 5வது ஸ்கந்தம் 34, 35-வது அத்யாயங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது.

வஸந்தருது, சரத்ருது என்னும் இரண்டு ருதுக்களில் சித்திரை மாதத்திலும், புரட்டாசி மாதத்திலும் நவராத்ரீ கொண்டாடப்பட வேண்டும். அவ்விரண்டில் சரத்ருது புரட்டாசி சுக்லபக்ஷத்தில் வரும் நவராத்ரீ மிகவும் விசேஷமானது. உலகத்தில் பிரவிருத்தியையுடைய வர்களாய் காம்ய க்ருத்யங்களைச் செய்யும் மனிதர்கள் அவரவர் விரும்பும் காம்ய பலனை அடைவதற்கு கன்னியை அடைந்த சூரியன் மூலமாக இறைவனை வழிபட வேண்டும் என்பது நியதி. சூரியன் கன்னியில் சேரும் மாதம் புரட்டாசி மாதம். கன்னிராசி புதனுக்கு ஆட்சி வீடாகவும் மூலத்ரிகோண வீடாகவும் சொல்லப்படுகிறது. புதன் புத்தியின் பிரேரகன். சூர்யன் ஆன்மா. ஆகவே புரட்டாசி மாதத்தில் செய்யப்படும் வழிபாடு புத்திபூர்வமாய் சிரத்தையுடன் செய்யப்பட வேண்டும் என்பது புலனுகின்றது. அதுபோலவே ஞானபிரேரகனுன பிருஹஸ்பதிக்கு தனுர் ராசி ஆட்சிவீடாகவும் மூலத்ரிகோண வீடாகவும் அமைவதால் சூரியனுகிய ஆன்மா தனுர் ராசியில் பிரவேசிக்கும் மார்கழி மாதம் நிஷ்காம்ய உபாஸனைக்கு உகந்ததாய்க் கருதப்படுகின்றது.

பிரம்மாண்டம் முழுவதும் ஹிரண்ய கர்பருடைய சரீரம். அதைப் பன்னிரண்டு ராசிகளாகப்பிரித்து அவற்றில் முறைப்படி இறைவனுடைய சக்திகள் ஒவ்வொன்றும் இந்த்ராசிகளில் செல்லுகின்றன. ஆதித்தியர் பன்னிரண்டாய் இருப்பதால் பிரம்மாண்டத்தையும் 12 பாகங்களாக அல்லது இராசிகளாகப் பிரித்திருக்கிருர்கள். அந்தந்த ராசிகளின் வழியாக இறைவனின் சக்திகளுக்கு நம்முடைய பிராணவாயுவைப்போல போக்கு வரத்தாகிய சஞ்சாரம் ஏற்பட்டிருக்கிறது. அப்படி அவைகள் சஞ்சரிக்கையில் சகல சராசரங்களும் அவைகளாலே பாதிக்கப்பட்டு சுக துக்கபலன்களை அடைகின்றன. இறைவனின் பின்ன சக்திகளை

கிரஹித்துக்கொண்டு உலகத்தில் உள்ள சராசரங்களை ஆண்டு நடத்த அதிகாரம்பெற்ற தேவதைகள் அனந்தயானவர்கள். அவர்களுக்கு ‘கிரகம்’ என்று பெயர். அவர்களில் முக்யமானவர்கள் ஒன்பதுபேர். சூரியன் ஆன்மா, சந்திரன் மனம், இராகு கேதுக்கள் மனதின் சங்கல்ப விகல்பங்கள், செவ்வாய் அதிர்ஷ்டம் அல்லது ப்ராப்தம், புதன் புத்தி, வியாழன் ஞானம், வெள்ளி போகம், சனி மரணம். இந்த முறையில் ராசிகள் கல்பனையான ஸங்கேதங்களே. அவைகளுக்கு ரூபம் ஏதும் இல்லை. ஆயினும் ஸாமானியர் உணரும் பொருட்டு அந்தந்த ராசிகளுக்கு சில வடிவங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன அவ்வளவுதான். ஆக சூரியனாகிய ஆன்மா புத்தியாகிய புதன் வீட்டில் அதாவது கன்யா ராசியில் பிரவேசிக்கும் காலமாகிற புரட்டாசி மாதம் காமியமான ஆராதனைக்குப் பொருத்தமாய் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் சாக்தர்கள் இந்த நவராத்ரீ பூஜை ஐஹிகபலனுக்காகச்செய்யப்படுவது அல்ல என்பதை முக்கியமாய் உணர வேண்டும். ஆமுஷ்மிகமான தேவியோடு தாதாத்ம்யம் அடையும் பரமசாயுஜ்ய பலனைக்கோரியே நவராத்ரீ பூஜை நடத்த வேண்டும் என்பது விதி.

மேலும் சித்திரை மாதமும் புரட்டாசி மாதமும் யமன் என்னும் காலனுடைய இரண்டு கோரப்பற்கள் என்று தேவீ பாகவதம் கூறுகின்றது. கோரப்பற்கள் என்றால் விஷத்தன்மையுடையவை. அந்த மாதங்களில் மானிடர்களுக்கு தெய்வானுக்கிரகம் கிடைக்காதபடி தடை செய்யும் பகையான ரோகம் முதலியன உண்டாவது கண்கூடு. ஆகையால் பண்டிதர்கள் இம்மை மறுமை இன்பங்களையடையவேண்டி இவ்விரண்டு மாதங்களிலும் சரீரத்துக்கு ஏற்படும் இடையூறுகளைத் தடுக்க தேவியை பூஜைசெய்ய வேண்டும் என்று தேவீ பாகவதம் 3வது ஸ்கந்தம் 26வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கின்றது. சித்திரை மாதத்தில் வருவதற்கு வஸந்த நவராத்ரி என்றும், புரட்டாசி மாதத்தில் வருவதற்கு சரத் நவராத்ரி என்றும் பெயர். இவ்விரண்டினுள் சரத் நவராத்ரி வ்ருதமே பிரபலமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

நவராத்ரி பூஜைக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற திரவியங்களை அமாவாசை தினத்திலேயே சேகரித்துக்கொள்ள வேண்டும். அன்று ஒருவேளை போஜனத்துடன் இரவில் உபவாஸமிருந்து மறுநாள் பிரதமையில்

பூஜையை ஆரம்பிக்க வேண்டும். பூஜைக்குரிய மண்டப வேதிகைகளை பசுவின் கோமயத்தால் மெழுகி செம்மண் கோலம் முதலியன இட்டு மேலே விதானம் அமைத்து நன்கு அலங்கரிக்க வேண்டும். வாழை மாவிலைத் தோரணங்கள் அமைக்க வேண்டும்.

மறுநாள் பிரதமையன்று சுப முகூர்த்த நேரத்தில் நன்கு ஸ்நானம் செய்து மடி உடுத்தி துவாரபூஜை செய்து பூஜை வேதிகையில் கலச ஸ்தாபனம் செய்து அதில் அம்பாளை ஆவாஹனம் செய்தல் வேண்டும். கலசத்துக்கு திருமாங்கல்யம் காதோலை முதலிய ஆபரணங்கள் அணிவிக்க வேண்டும். கலசத்துக்கு புஷ்பத்தால் நன்கு அலங்கரித்தல் வேண்டும். பூஜாபத்ததியில் கூறியிருக்கும் பிரகாரம், 1. ப்ரம்ஹ வித்யா ஸம்ப்ரதாய குரு ஸ்தோத்திரம், 2. யாக மந்திரப்ரவேசம், 3. தத்வ ஆசமனம், 4. குருபாதுகா மந்த்ரம், 5. கண்டா (மணி) பூஜை 6. ஸங்கல்பம், 7. ஆஸன பூஜை, 8. தேஹ ரக்ஷை, 9. லகு ப்ராணபிரதிஷ்டா, 10. மந்திர பூஜை, 11. தீப பூஜை முதலியன செய்தல் வேண்டும். கலசத்தோடு ஸ்ரீ சக்கரத்தையும் பிரதிஷ்டை செய்திருக்கவேண்டும். இரண்டு பக்கங்களிலும் இரண்டு குத்து விளக்குகள் வைக்க வேண்டும். அவற்றில் வலது புரத்து விளக்கில் நெய் வார்த்து வெள்ளை நூல் திரியிட வேண்டும். இடது புரத்தில் எண்ணெய் வார்த்து சிவப்பு நூல் திரியிட வேண்டும். மந்திரபூஜை என்பது அம்ருத சமுத்ரத்திலிருந்து ரத்னத்வீபம், உத்யானம், பஞ்ச வாடிகை முதல் மஹாவிதானம் முடிய 44 மந்த்ரங்களால் கற்பித்துக் கொள்ள வேண்டும்.

அதன் பின்பு பூதசுத்தி, ஆத்மப்ராண பிரதிஷ்டை, விக்னோத்ஸாரணம் என்ற மூன்றும் மந்த்ரக்ரியா பூர்வமாகச் செய்தல் வேண்டும்.

அதன் பின்பு பத்ததியில் கூறியிருக்கும் மாத்ருகாந்யாஸம் முதல் ஸம்மோஹன ந்யாஸம் முடிய 15 விதமான ந்யாஸங்களைச் செய்தல் வேண்டும்.

அதன்பின் பாத்ரஸாதனம், அதாவது பூஜா பாத்ரங்களை ஸ்தாபனம் செய்தல். இவை 1. வர்த்தனி கலசம், 2. ஸாமான்யார்க்ய பாத்திரம், 3. விசேஷார்க்ய பாத்திரம், 4. சுத்திபாத்திரம், 5. குரு

பாத்திரம், 6. ஆத்ம பாத்திரம், 7. சங்கம், ஆக ஏழு ஸ்தாபித்தல் வேண்டும். சிலர் 5 பாத்திரங்களே வைக்கின்றனர்.

அதற்குப் பிறகு 1 அந்தர்யாகம், 2 தியானம், 3 ஆவாஹனம், 4 சது:ஷஷ்டி உபசாரங்கள் செய்து முடிக்க வேண்டும்.

பின்பு சதுராயதன பூஜை என்று 1 கணபதி 2 ஸூரியன் 3 விஷ்ணு 4 சிவன் இவர்களுக்கு பூஜை செய்ய வேண்டும்.

அதற்கு மேல் ஸ்ரீ சக்ர பூஜை ஆரம்பிக்க வேண்டும். முதலில் 15 நித்யா தேவதைகளையும் பின்பு குருமண்டல பூஜையும் செய்து முதலாவது ஆவரணம் பூபுரத்திலிருக்கும் தேவதைகளுக்கு பூஜை செய்ய வேண்டும். இவைகளின் ஸ்தானம் முதலியன ஸ்ரீசக்ர விவரணத்தில் முன்னமே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு நவாவரண பூஜை ஒவ்வொருநாளும் மாலையில் தொடங்கிச் செய்து வர வேண்டும்.

பகலில் தேவீமாஹாத்மியம் என்ற துர்கா ஸப்தசதி பாராயணம் செய்தல் வேண்டும். மத்யானத்தில் திரிசதி குங்குமார்ச்சனை செய்து நைவேத்யம் பண்ணி பூஜை செய்யலாம். மாலையில் ஸ்ரீ சக்கரத்துக்கு பால் தயிர் முதலியவற்றால் அபிஷேகங்கள் செய்து பின் பூஜைக்கு ஆரம்பிக்கலாம். நவாவரண பூஜை முடிந்த உடன் ஸஹஸ்ரநாம குங்குமார்ச்சனை செய்யவேண்டும்.

ஸாதகன் இந்த 9 தினங்களும் உபவாஸமாகவேயிருக்க வேண்டும். நைவேத்யம் செய்யப்பட்ட க்ஷீரத்தோடு விசேஷார்க்யம் சிறிது சேர்த்து இஞ்சித்துண்டோடு உட்கொள்வது தவிர வேறு ஆகாரம் சாப்பிடக்கூடாது. தினம் மூன்று வேளை ஸ்நானம் செய்து மடி உடுத்திக் கொள்ள வேண்டும். பகலில் தூங்கக்கூடாது. க்ஷவரம் அப்யஞ்ஜனம் ஸ்திரீ ஸங்கமம் இவற்றை விலக்க வேண்டும் இரவில் தரையில் படுத்து உறங்க வேண்டும். தன் மேலிருக்கும் வஸ்த்ரத்தைத்தவிர வேறு விரிப்பு தலையணை கூடாது. காலை நான்கு மணிக்கே எழுந்து ஸ்நானத்தை முடித்துக்கொண்டு ஜபம் செய்யவேண்டும். காலையிலும் நடுப்பகலிலும் பாலோ, பழமோ இயன்றதை நைவேத்யம் செய்து பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து பூஜை செய்யலாம்,

நவராத்ரியில் 3, 5, 7 தினங்களில் கன்னிகைகளுக்கு அப்யஞ்ஜனம், வஸ்த்ரம், போஜனம் அளித்து பூஜை செய்யவேண்டும். 7-வது நாள் ஸுவாஸினி பூஜை (சுமங்கலிகளுக்குப் பூஜை) செய்யவேண்டும் இயலாதவர்கள் ஒருநாள் செய்யலாம். கன்னிகைகள், ஸுவாஸினிகள் 3, 5, 7 என்ற கணக்கில் இருத்தல் வேண்டும். இதற்கு அர்ஹதை யுள்ள கன்னிகைகள் ஸுவாஸினிகளின் லக்ஷணங்கள் தேவீ பாகவதம் 3வது ஸ்கந்தம் 26வது அத்யாயத்தில் கூறப்பட்டிருக்கின்றன. இரண்டு வயது முதல் பத்து வயதுவரை இருக்கவேண்டும். இரண்டு வயதுக்குக் குறைந்தவர்களும் பத்துக்கு மேல்பட்டவர்களும் ஆகா. அங்கஹீனர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், தீட்டு சம்பந்தப்பட்டவர்கள் உதவாது. அது போல் 27வது அத்தியாயத்தில் ஸுவாஸினிகளின் லக்ஷணம் கொடுக்கப் பட்டிருக்கின்றது.

மேலும் நவராத்ரி ஆராதனையில் பராசக்தி ஆகின்ற ஸமஷ்டி சக்தி ரூபத்தையே பிரதான தேவதையாகவும் பின்ன சக்திகளை வஹிக்கும் மற்றெல்லா தெய்வங்களையுமங்கதேவதைகளாகவும் கொண்டு உபாஸிக்க வேண்டும். நவராத்ரி காலத்தில் பின்ன சக்திகளெல்லாம் பூர்ணசக்தியில் அந்தர்கதமாகின்ற முறையைத்தான் தேவீ மாஹாத்மியம் இரண்டாவது அத்யாயத்தில் எல்லா தேவதைகளும் அவரவர்களுடைய சக்திகளை ஸமஷ்டி சக்தியாகின்ற பரதேவதையிடம் ஒப்புவித்ததாகக் கூறப் பட்டிருக்கின்றது.

நமது தேவதைகளுக்கு உரிய ஆயுதங்கள் என்பவை அந்தந்த தேவதைகளின் சக்தியேதான். மஹிஷாசுரனின் அக்ரமச் செயல்களை, தேவர்கள் யாவரும் பிரம்மாவை முன்னிட்டுக்கொண்டு பரமசிவனும் விஷ்ணுவும் சேர்ந்து இருக்கும் இடம் சென்று முறையிட்டனர். (தேவீ மாஹாத்மியம் 2ம் அத்தியாயம் சு. 4 முதல் பார்க்க.) அவ்விருவரும் கோபாவேசராய்த் திகழ்ந்தனர். மும்மூர்த்திகளின் முகங்களிலிருந்து கோப ஜ்வாலையுடன் ஓர் மஹத்தான ஒளி தோன்றியது. அதுபோன்றே ஏனைய தேவர்களின் சரீரங்களிலிருந்தும் ஒளி உண்டாயது. எல்லாம் சேர்ந்து ஒன்றாயிற்று. அந்த ஒளி ஓர் பெண்ணுருவாயிற்று. சம்புவின் ஒளியே அவள் முகம். யமனுடைய ஒளி அவளுடைய கேசம். விஷ்ணுவின் ஒளி புஜங்கள். சந்திரனே இரண்டு ஸ்தனங்கள். இந்திரனுடையது (மின்னல்) இடை. வருணனுடையது இரு துடைகளும் முழங்கால்களும்,

பூமியின் காந்தியால் பிருஷ்டபாகம் (நிதம்பம்). பிரம்மாவின் ஒளியே இரு பாதங்கள். சூரிய ஒளி கால் விரல்கள். வசுக்களின் ஒளி கை விரல்கள். குபேரனின் ஒளி மூக்கு. பிரஜாபதியின் ஒளி பல் வரிசைகள். அக்னியின் ஒளியிலிருந்து மூன்று கண்கள் உண்டாயின. ஸந்தியை களின் ஒளியே இரு புருவங்கள். வாயுவின் ஒளி இரு காதுகள். இவ்வாறுக மற்ற தேவர்களின் ஒளியாலும் மங்கள வடிவான தேவியின் ஆவிர்ப்பாவம் ஏற்பட்டது. (சுலோ. 18)

பின்பு இவ்வாறே ஒவ்வொரு தேவதையும் தனது ஆயுதங்களை அம்பாளிடம் ஸமர்ப்பித்தார்கள். பரமசிவன் சூலத்தையும், விஷ்ணு சக்கரத்தையும், வருணன் சங்கத்தையும், அக்னி சக்தி ஆயுதத்தை யும், வாயு வில்லையும் அம்புகள் நிறைந்த இரண்டு அம்புறுத்தூணிகளை யும், இந்திரன் வஜ்ராயுதத்தையும், மணியையும், யமன் தண்டத்தையும் அம்பு பதி பாசத்தையும், பிரம்மா அக்ஷமாலையையும் கமண்டலுவையும் சூரியன் தனது கிரணங்களையும், காலன் கத்தியையும் கேடயத்தையும், பாற்கடல் நிர்மலமான ஹாரத்தையும், விச்வகர்மா அம்பாள் அணிந்து கொள்ளும்படி, சூடாமணி, குண்டலங்கள், கடகங்கள், அர்த்த சந்திர பிரபை, தோள் வளைகள், நூபுரங்கள், அட்டிகைகள், ரத்ன மிழைத்த மோதிரங்கள் முதலிய எல்லா ஆபரணங்களையும், பரசு என்ற ஆயுதத் தையும், அநேகவிதமான அஸ்திரங்களையும், பிளக்க முடியாத கவசத் தையும், கடலரசன் தாமரை மாலையையும், ஹிமவான் சிம்ம வாஹனத் தையும், குபேரன் மது பாத்திரத்தையும், ஆதி சேஷன் நாகஹாரத்தை யும், இவ்வாறே மற்றுமுள்ள தேவர்களும் ஆயுதங்களையும், ஆபரணங் களையும் அளித்தார்கள். இந்த பரதேவதையே சண்டிகா என அழைக்கப் பட்டவள். இவளே மஹிஷாசுரனைக் கொன்றாள்.

4ம் அத்தியாயம் முழுவதும் தேவர்கள் தேவியை ஸ்துதி செய்த தைக்கூறுகின்றது. அவற்றை பாடம் பண்ணிவைப்பது நல்லது. 36, 37 வது சுலோகங்களில் "மாசற்ற வதனமுடைய தேவி! எந்த மனிதனாயினும் இந்த ஸ்தோத்திரங்களால் உன்னைத் துதித்தால், தாயே! எங்களுக்கு அருள் சுரந்து இன்னல் களைந்தது போல, அவனுக்கும் குறைவற்ற செல்வத்தையும் எல்லாவைபவங்களையும் நல்க வேண்டும்." என்று தேவர்கள் பிரார்த்தித்தார்கள். இது புராணம்.

மஹிஷன் என்பவன் பிரபஞ்சத்தில் இருக்கும் ஸகல அநாத்ம வ்ருத்திகளின் ஸமஷ்டி. காமம், குரோதம் போன்ற ஷட்வர்க்கங்களும், சோம்பல், டம்பம், அஹங்காரம், மௌட்யம், ஜாமரண தாபங்கள், விஷப் பூண்டுகள், விஷ ஜந்துக்கள், விஷக் காற்றுக்கள், நோய்கள் இவைகளே அவனுக்கு சைன்யங்களாயும் ஆயுதங்களாயும், அவனுடைய ஸமஷ்டி உருவமாயும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. பிரபஞ்சத்தில் இருப்பதுபோலவே நமது சரீரமாகிற க்ஷுத்ர ப்ரம்மாண்டத்திலும் நல்லவை கெட்டவை என்ற இரண்டு தத்துவங்களும் இருக்கின்றன. ஆத்ம ஞானத்துக்குச் சாதகமான வ்ருத்திகளைக்கொண்டு, அநாத்ம வ்ருத்திகளை முழு பலத்துடன் தாக்கி நசிக்கச்செய்ய வேண்டியது மானிட ஜன்மா எடுத்ததின் சீரிய லக்ஷியமாக இருக்கவேண்டும் அல்லவா! இதுதான் சுருக்கமாக மஹிஷாசுரன் கதை. இவ்வாறு ஆவிர்பவித்த பரமேச்வரியை நவராத்ரி தினங்களில் மூன்று ஸ்வரூபங்களாக வழிபடுகின்றோம். அவர்கள் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி என்பவர்கள்.

ஓர் மனிதன் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமானுல் மூன்று அம்சங்கள் தேவைப்படுகின்றன, 1. ஆற்றல், 2. செல்வம், 3. அறிவு. இம்மூன்றும் இருந்தாலன்றி நாம் எக்காரியத்திலும் வெற்றி காண முடியாது. அக்ஞானத்தையும், அஹம்பாவத்தையும் மிருக பலத்தையும் ஸமஷ்டியாகக் குறிக்கும் எருமைக்கடா ரூபமான அசுரனை பலம், செல்வம், அறிவு என்ற மூன்றின் ஸமஷ்டியான அம்பாள் வதம் செய்தாள் என்பதுதான் அடிப்படையான தத்துவம்.

ஓர் காரியம் தொடங்குமுன் அக்காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற இச்சை அவசியம், இதற்கு இச்சாசத்தி என்று பெயர். அக்காரியத்தை செய்யும் சக்திக்கு கிரியா சக்தி என்று பெயர். இதை இவ்வாறு செய்ய வேண்டும் என்ற அறிவுக்கு ஞான சக்தி என்று பெயர். இம் மூன்றையும் முறையாக துர்க்கா, லக்ஷிமி, ஸரஸ்வதி என்ற மூன்று சக்திகளாக வழிபடுகின்றோம். இதை முன்னமே மூன்ருவது அத்தியாயத்தில் விவரித்தோம். இந்த ஒவ்வொரு ஸ்வரூபத்துக்கும் மூன்று நாள் வீதமாக ஒன்பது தினங்களில் பூஜை செய்கிறோம். இம் மூன்று சக்திகளும் மும் மூன்று உபசக்திகளாக ஆவிர்பவிக்கின்றனர். ஆக நவசக்திகள் ஏற்படுகின்றனர். அவர்கள் 1 மாஹேச்வரி

2 கௌமாரி, 3 வாராஹி என்ற மூவரும் துர்க்கையின் அம்சம். இம் மூவருக்கும் நவராத்ரியின் முதல் மூன்று நாட்களில் பிரதான ஆவிர்பாவம் அடுத்து 4 மஹாலக்ஷிமி, 5 வைஷ்ணவீ, 6 இந்திராணி இம் மூவரும் மஹாலக்ஷிமியின் அம்சங்கள். அவர்களுக்கு நான்காவது, ஐந்தாவது, ஆருவது நாட்களில் பிரதான ஆவிர்பாவம். அப்புறம் 7 பிராம்ஹீ 8 நாரஸிம்ஹீ, 9 சாமுண்டி என்ற மூவரும் ஸரஸ்வதியின் அம்சங்கள். இம் மூவருக்கும் 7, 8, 9-வது தினங்களில் பிரதான ஆவிர்பாவம்.

இவ்விதமாக ஒவ்வொருநாளும் ஓர் அம்சம் பிரதானமாகவும் மற்ற அம்சங்கள் பரிவாரங்களான அங்க தேவதைகளாகவும் வைத்து பூஜை செய்ய வேண்டும். இந்த முறையை அனுசரித்துத்தான்

"அஷ்டமாத்ருக மத்யஸ்தாம் அஷ்ட பைரவபூஜிதாம்"

(अष्टमातृकमध्यस्थां अष्टभैरवपूजिताम्)

என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரதான சக்தியும் பரிவாரசக்திகளும் நவராத்ரியில் ஒவ்வொரு நாளும் அமையும் விதத்தை ஓர் படம் வரைந்து காட்டலாம்.

முதல் நாள்

2 கௌமாரி	3 வாராஹி	4 மஹாலக்ஷிமி
9 சாமுண்டா	1 மாஹேச்வரி	5 வைஷ்ணவி
8 நாரஸிம்ஹி	7 ப்ராம்ஹி	6 இந்திராணி

2வது நாள்

1 மாஹேச்வரி	3 வாராஹி	4 மஹாலக்ஷிமி
9 சாமுண்டா	2 கௌமாரி	5 வைஷ்ணவி
8 நாரஸிம்ஹி	7 ப்ராம்ஹி	6 இந்திராணி

3வது நாள்

1 மாஹேச்வரி	2 கௌமாரி	4 மஹாலக்ஷிமி
9 சாமுண்டா	3 வாராஹி	5 வைஷ்ணவி
8 நாரஸிம்ஹி	7 பிராம்ஹி	6 இந்திராணி

4வது நாள்

1 மாஹேச்வரி	2 கௌமாரி	3 வாராஹி
9 சாமுண்டா	4 மஹாலக்ஷிமி	5 வைஷ்ணவி
8 நாரஸிம்ஹி	7 பிராம்ஹி	6 இந்திராணி

5வது நாள்

1 மாஹேச்வரி	2 கௌமாரி	3 வாராஹி
9 சாமுண்டா	5 வைஷ்ணவி	4 மஹாலக்ஷ்மி
8 நாரஸிம்ஹி	7 பிராம்ஹி	6 இந்திராணி

6வது நாள்

1 மாஹேச்வரி	2 கௌமாரி	3 வாராஹி
9 சாமுண்டா	6 இந்திராணி	4 மஹாலக்ஷ்மி
8 நாரஸிம்ஹி	7 பிராம்ஹி	5 வைஷ்ணவி

7வது நாள்

1 மாஹேச்வரி	2 கௌமாரி	3 வாராஹி
9 சாமுண்டா	7 ப்ராம்ஹி	4 மஹாலக்ஷ்மி
8 நாரஸிம்ஹி	6 இந்திராணி	5 வைஷ்ணவி

8வது நாள்

1 மாஹேச்வரி	2 கௌமாரி	3 வாராஹி
9 சாமுண்டா	8 நாரஸிம்ஹி	4 மஹாலக்ஷ்மி
7 பிராம்ஹீ	6 இந்திராணி	5 வைஷ்ணவி

9வது நாள்

1 மாஹேச்வரி	2 கௌமாரி	3 வாராஹீ
8 நாரஸிம்ஹி	9 சாமுண்டா	4 மஹாலக்ஷ்மி
7 பிரம்ஹி	6 இந்திராணி	5 வைஷ்ணவி

நவராத்ரியில் கடைசியில் மூன்று நாட்களும் ஸரஸ்வதியின் ரூபங்களுக்கு ஆவிர்பாவம் இருப்பதால் அத்தினங்களில் ஸரஸ்வதி பூஜை, ஆயுதபூஜை என்று அனுஷ்டிக்கப்படுகின்றன. ஞானத்தால்தான் அநாத்ம வ்ருத்திகள் நாசமடைய வேண்டுமாதலால் மஹிஷாசுர வதமும் அப்பொழுது கொண்டாடப்படுகின்றது. ஆயினும் நவசக்திகளும் ஒவ்வொருநாளும் பிரதான தேவதையாகவோ பரிவார தேவதைகளாகவோ வழிபடப்படுவதால் பூஜா மந்த்ரத்தில்

" துர்க்காலக்ஷ்மீஸரஸ்வதீம் பூஜயாமி, தர்ப்பயாமி நம: "

(दुर्गालक्ष्मीसरस्वती पूजयामि तर्पयामि नमः)

என்று முழக்கமாய் ஜபிக்கப்படுவதைக்காண்க.

ஓர் குறிப்பு: — நமது ஆலயங்களில் நவராத்ரியின்போது அம்பாளுக்கு வித விதமாக அலங்காரம் செய்துவைப்பதைப்பார்க்கிறோம். ஆயினும் அதில் ஓர் நியதியோ ஒற்றுமையோ இருப்பதாகத்தெரியவில்லை. ஆலய நிர்வாக ஸ்தாபனத்தார் இந்த ஒன்பது தினங்களிலும் மேலே சொன்ன மாஹேச்வரி, கௌமாரி முதலிய ஒன்பது சக்திகளாக ஒவ்வொரு நாளைக்கு ஒன்றாய் அலங்காரம் செய்து வழிபட்டால் இந்த தத்துவம் யாவருக்கும் புரியும்படி செய்யலாம். அர்ச்சகருக்கு இஷ்டப் பட்ட அலங்காரத்தைச் செய்ய அனுமதிக்கக்கூடாது.

ஸரஸ்வதி பூஜையை மட்டும் சிறிது விரிவாகக் கூறுவோம். நவராத்ரியின் 6வது 7வது தினத்தில் மூல நக்ஷத்திரம் உச்சமாய் இருக்கும்போது ஸரஸ்வதியை ஆவாஹனம் செய்ய வேண்டும். இது ஸரஸ்வதி பிறந்த நாள் என்பது ஐதிஹ்யம். இந்த ஸரஸ்வதி பூஜை சிரவணம் என்னும் நக்ஷத்திரம் உச்சமாகும் தினத்தில் பூர்த்தி செய்யப் படும். மூலம் என்றால் ஆரம்பம் என்று பொருள். அன்று ஓர் புதிய விஷயத்தை, புதிய சாஸ்திரத்தை, புதிய வித்யையைக் கற்க ஆரம்பித்து மறு வருஷம் அந்த தினம் வருவதற்குள் அதனை நன்கு கற்று, ஆராய்ந்து தேர்ச்சி பெறவேண்டுமென்பது அடிப் படையான தத்வம். சிரவணம் என்றால் கேட்டல் என்பது பொருள். நவமி திதியும் சிரவண நக்ஷத்திரமும் சேரும் தினம் மிகவும் விசேஷம். அன்று மந்த்ரோபதேசம் பெறுவதற்கு உகந்த நாள் என்று கருதப்படு கின்றது. மேலும் மூலத்தில் ஆரம்பித்து சிரவணத்தில் முடியும் ஸரஸ்வதி பூஜையில் புதிய வித்தையை ஆரம்பித்தல், பழகுதல், கேட்டல், சிந்தித்தல் தெளிதல் என்ற சிரவண மனன நிதித்யாஸன வழியாக ஸ்வாநுபூதி அடையும் வரை அப்யஸித்தல் என்ற நியதியும் இதில் அடங்கி இருக்கின்றது. தற்காலத்தில் ஸரஸ்வதி பூஜை என்பது நம் வீட்டு பழய புஸ்தகங்களை அடுக்கிவைத்து பூஜை செய்வதோடு நின்று விட்டது. அப்படியும் இந்த வழிபாடு பிரயோஜனமற்றதாகி

விடவில்லை. இவ்வழக்கமில்லாவிடில் நம் நாட்டிலுள்ள பழய ஓலைச் சுவடிகள் புஸ்தகங்கள் யாவும் செல்லுக்கு இரையாகியிருக்கும்.

இவ்வாறு நவராத்ரீ பூஜையானது சாக்த உபாஸகர்களுக்கு இன்றியமையாத ஸாதனையாய் இருப்பதோடல்லாமல் ஸாமான்னியருக்கும் பயன்படக்கூடிய ஓர் விழாவாக நமது முன்னோர்கள் அமைத்திருக்கிற விந்தை போற்றற்குரியதன்றோ.

மேலே சொன்னபடி ஸகல தேவதைகளின் சக்திகளும் பரப்ரஹ்ம மஹிஷியான பராசக்தியில் ஒடுங்குவதே மஹாலயம் என்ற அமாவாசையின் கருத்து. பின்பு சக்திகள் ஒன்றிலிருந்து ஒன்று ஸ்புரித்து மறுபடியும் எல்லா தேவதைகளும் பராசக்தியை வழிபட்டு தமது சக்திகளைத் திரும்பப்பெறுகின்றார்கள். நவராத்ரியின் மஹிமையைப்பற்றி தேவீ பாகவதத்தில் பரக்கக் காணலாம். ஸ்ரீராமரே இராவண ஸம்ஹாரத்துக்கு இலங்கைக்கு ஏகுமுன் தென்மதுரையில் மீனாக்ஷி சன்னிதியில் நவராத்ரி வ்ரதம் யதோக்தமாய் அனுஷ்டித்து தேவியின் அருளைப்பெற்றார் என்று கூறப்பட்டிருக்கின்றது. 3வது ஸ்கந்தம் 30வது அத்தியாயத்தில் நாரதரே ஸ்ரீ ராமருக்கு சக்தியின் ப்ராதான்யத்தையும், ஆவிர்பாவத்தையும் உபதேசித்து அவர் உபாஸனை செய்வதற்குத் தானே ஆசார்யனாக இருந்தார் என்று கூறுகிறது. அந்த அத்தியாயம் 46 முதல் 59வது சுலோகம் முடிய தேவீ பிரஸன்னமாகி ஸ்ரீ ராமருக்கு கடாக்ஷித்த விருத்தாந்தத்தைக் கூறுகின்றது.

தேவீ மந்த்ரோபதேசம், தீக்ஷை முதலியன இல்லாதவர்கள் கூட நவராத்ரி தினங்களில் ஸப்தசதி பாராயணமும், ஸஹஸ்ரநாம பாராயணமோ, அல்லது தேவியின் திருவுருவத்துக்கு ஸஹஸ்ரநாம குங்குமார்ச்சனையோ செய்து பொங்கல், பாயஸம், தித்திப்பு பக்ஷியங்கள் பழங்கள் முதலியன ஸமர்ப்பித்து தூப தீபாராதனை செய்து வருவது அவர்களுக்கு இகபரஸுகங்களை நல்கும் என்று சாஸ்த்ரங்கள் ஒருமுகப்பட்டு முழங்குகின்றன.

இந்த அத்தியாயத்தை நமது ஜகத்குரு மஹா சன்னிதானங்கள் 23—8—65௳ யன்று சேலத்திலிருந்து விடுத்த ஆசிச்செய்தியில் ஓர் பகுதியைக் கூறி முடித்துக்கொள்வோம்,

"ஸ்ரீஸர்வ ஜகஜ்ஜனனியான பகவதீ பரமேச்வரீ அகண்ட சச்சிதானந்த லக்ஷணை. அவளுடைய ஞானத்துக்கோ ஐச்வரியத்துக்கோ, ஆற்றலுக்கோ எல்லை கிடையாது. உலகில் காணும் சகல சக்திகளின் ஸமஷ்டியே அவள். அனந்த கருணாசாலினீ, அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹை. உண்மையில் பிரிக்க முடியாத அத்வைத ஸச்சிதானந்த ஸ்வரூபிணியாக அவள் இருந்த போதிலும் ஜீவாத்மாக்களுக்கு அவரவர் செய்யும் வினைக்கு ஈடாக பலவித பலன்களைக்கொடுப்பதற்காக தன் நிஜ ஸ்வரூபத்திலே சேர்ந்த ஸத்வரஜஸ்தமோ குணங்கள் என்ற உபாதியால் புருஷரூபத்தை அவலம்பித்து ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், முதலான பல புருஷரூபங்களை ஸ்வீகரித்துத்தன் இஷ்டப்படி ஸரஸ்வதீ, லக்ஷ்மீ, துர்க்கை முதலான ஸகல ஸ்திரீ தேவதா ஸ்வரூபங்களையும் அடைகிருள். இவ்வாறு உபாஸகர்களை அனுக்ரஹிப்பதற்காக அவரவர்களுக்குப் பிரியமான பற்பல உருவங்களையும் அடைந்து சிருஷ்டியாதி க்ருத்யங்களைச் செய்துவருகிருள். ஆண் உருவமும், ஸ்திரீ உருவமும் கொண்ட ஏனைய ஸகல தேவதைகளும் பரதேவதையின் ஓர் அம்சமானதால் அவர்களின் ஞானம், ஐச்வர்யம் சக்தி எல்லாம் ஓர் அளவுக்கு உட்பட்டவையே. ஆகையால் "சண்டிகா" என்ற பெயரால் ப்ரஸித்தமான இந்த பூர்ணமான பரதேவதைக்குச் செய்யப்படும் பூஜையானது இவளுடைய அம்சமாக விளங்கும் மற்றெல்லா தேவதைகளுக்கும் செய்யப்பட்டதாகவே ஆகும்.

"ப்ரதானே ச க்ருதோ யத்ன: பலவாங் பவேத்"

(प्रधाने च कृतो यत्नः फलवान् भवेत्)

என்ற நியதிப்படி தனித்தனியாக எல்லா பரிவார தேவதைகளையும் ஆராதிப்பதற்கு பதிலாக பிரதானமாயும், அங்கியாயும் இருக்கும் ஞானம், பலம், ஐச்வர்யம், சக்தி, வீர்யம், யசஸ் என்பன முழுதும் நிறைந்தவளான பகவதி ஸ்ரீ சண்டிகையை ஆராதிப்பதால் எல்லாப் பலன்களும் சுலபமாய்க் கிடைப்பதால் அறிவாளிகளான உபாஸகர்கள் பக்தி சிரத்தையுடன் இந்த ப்ரதான தேவதையான ஸ்ரீ சண்டிகையையே யதோக்தமாய் ஆராதிக்கிருர்கள். இந்த சண்டிகையோ அப்ராக்ருதமான திவ்யமங்கள விக்ரஹத்தில் பாதி பாகம் புருஷரூபமாகவும் விளங்குகின்ருள். ஒரே வியக்தியில் சிவஸ்வரூபமும் சக்தி ஸ்வரூபமும் இருப்பு

தால் இரண்டும் ஒன்றே என்பது தெரிகின்றது. இவ்வாறு அவளுடைய பாதி சரீரமாக விளங்கும் புருஷரூபமான ஸ்ரீருத்ரனும் அவளைக்காட்டிலும் வேறான தத்துவமாக இல்லாமல் இருப்பதால் அவளுக்குச் சமமான குணங்களும், மஹிமைகளும் கொண்டவர் என்று ஸ்ரீ ருத்ரம், ச்வேதாச்வதரம், கைவல்யம் முதலான உபநிஷத்துக்களிலும், இவற்றை விளக்கவந்த புராண இதிஹாசங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. உலகத்துக்கே அம்மையும் அப்பனுமான ஸ்ரீ சண்டிதேவியும் ஸ்ரீ ருத்ரனும் தேவதைகளுக்கெல்லாம் ஸார்வ பௌமர்கள். ஸ்திரீ, புருஷன் என்ற கல்பிதமான தர்மங்களால் இருவர்களாகத் தோன்றியபோதிலும் உண்மையில் ஒரே தத்துவமே.''

பத்தாவது அத்தியாயம்

ஸ்ரீ தேவீ மாஹாத்மியம்

மஹாபாரதம் என்ற இதிஹாஸத்துக்குள் நாயகமாக விளங்கும் 700 சுலோகங்கள் கொண்ட பகவத்கீதை போன்று மார்க்கண்டேய புராணத்தில் 74 முதல் 86-வது அத்தியாயம் முடிய அமைந்திருக்கும் 700 சுலோகங்கொண்ட ''தேவீ மாஹாத்ம்யம்'' என்ற பகுதி மிகச் சிறப்பு வாய்ந்தது. நமது பாரத வர்ஷம் முழுவதிலும் இந்த 700 சுலோகங்களை பாராயணம் செய்தும், சண்டிஹோமம் நடத்தியும் வருகிறார்கள். இதனுடைய முக்யத்வம் அதில் கூறப்பட்டிருக்கும் ஆழ்ந்த உருவக தத்துவங்கள் அடங்கிய கதைப் பகுதிமட்டுமல்ல. இந்த 700 சுலோகங்களும் 700 மந்த்ரங்கள் என்பதை உணரவேண்டும்.

ஶப்தாந்வய விஹீநாய ஶப்தலப்யாய ஸாக்ஷிணே
(शब्दान्वयविहीनाय शब्दलभ्याय साक्षिणे)

என்ற பிரமாணத்தால் வாக்குக்கு எட்டாத பரம்பொருள் மந்த்ரத்தால் அடையப்படுகிறது. ஆதலால் ஸப்தசதீ பாராயணத்தால் அம்பாளின் அநுக்ரஹம் ஸுலபமாய்க் கிடைக்கின்றது. இந்த மந்த்ர சாஸ்த்ரம் ''ஸ்வஸித்தம்'' என்ற வகுப்பைச் சேர்ந்தது. அநாவது பாராயணத்தினாலேயே பலனை அளிக்கவல்லது. எப்படி எனில் ஒவ்வொரு சுலோகத்திலும் மந்த்ராக்ஷரங்களும், அந்த சுலோக பாராயணத்தால் ஸூக்ஷ்ம

சலனங்களும் ஏற்பட்டுப் பலனை அளிக்கின்றன. இதுபற்றி முந்தி மந்த்ர அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

தேவீ மாஹாத்ம்யம் பாராயணம் பண்ணுகின்றவர்களுக்கு ஸ்ரீ வித்யையும் ப்ரம்ஹ வித்யையும் ஒன்றே என்பது புலப்படும். உபநிஷதங்கள் பொது. ஸ்ரீ வித்யை சிறப்பு. வேதம், சட்டம், ஸ்ரீ வித்யை சாதனை. வேதத்தில் கூறப்பட்ட மஹா வாக்யங்களின் தாற்பரியத்தை ஸ்ரீ வித்யோபாஸனை சித்தியடையச் செய்கின்றது. ஸ்ரீ சங்கரரும் தமது ப்ரபஞ்சஸாரத்தில்,

“உபநிஷதங்களில் கோஷிக்கப்படும் ஓம் என்ற பிரணவம் ஸ்ரீ வித்யையில் “ஹ்ரீம்” எனப்படுகின்றது. இரண்டும் வேறல்ல. பரப்ரம்ஹத்தினின்று அதன் ஆற்றலை (சக்தியை) பிரிக்கமுடியாது. “ஹ்ரீம்” என்பது மாயாபீஜம் என்றும், புவனேச்வரீபீஜம் என்றும் கூறப்படும். இந்த “ஹ்ரீம்” என்ற அக்ஷரத்திலிருந்தே மஹாகாளி, மஹா லக்ஷ்மி, மஹா ஸரஸ்வதி என்ற மூன்று சக்திகளும் ஆவிர் பவித்தனர்.” என்று கூறுகிறார்.

ஸ்ரீ தேவீ மாஹாத்மியம் 700 சுலோகங்களால் ஆனதால் அதற்கு “ஸப்தசதி” என்ற பெயர் ஸித்தித்தது. இந்த நூலுக்கு 40க்கு மேற்பட்டதான வியாக்யானங்கள் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது. அதிலிருந்தே இந்த கிரந்தத்தின் சிறப்பை ஒருவாறு அறியலாம். ஸ்ரீ வித்யோபாஸனையானது முன்பே கூறப்பட்டபடி வேதவிருத்த மாகாது. ஏனெனில் ப்ரஹ்ம தத்துவத்துக்கும் சக்தி தத்துவத்துக்கும் யாதொரு வித்யாசமும் கிடையாது.

“ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்” (**सदेव सोम्येदमग्र आसीत्**) என்ற சாந்தோக்ய சுருதிப்படி ஆதியில் “ஸத்” ஒன்றே இருந்தது. அது விகாரமற்றது. அகண்டிதமானது. நாமரூபமற்றது. உபாதி யற்றது. கேவல சின்மயமானது. அந்த நிலையை **“Primordial Energy”** என்று மேனாட்டு மேதைகள் கூறினர். அது **Static Energy** என்று விஞ்ஞானம் கூறிக்கொண்டது. அந்த நிலையில் அதற்கு “ஸ்தாணு” என்று நம் மந்த்ரதிரஷ்டாக்கள் கூறினர். **Energy** என்றிருந்தால் அது **Static** ஆக எப்பவும் இருக்கமுடியாது.

அதில் அபின்னமான ஆற்றல் விரவியுள்ளது. இந்த ஆற்றல் ஓர் "துடிப்பு" "ஸ்பந்தனம்" **Vibration** என்ற ரூபத்தில் இருந்தது. இந்த ஸ்பந்தனம் தான் "சக்தி" என்று கூறப்பட்டது.

ஸ்பந்தேன லக்ஷ்யதே வாயு: வன்ஹி: உஷ்ணேன லக்ஷ்யதே ।
சின்மாத்ரம் அமலம் சாந்தம் சிவ இத்யுதிதம் து யத் ।
தத் ஸ்பந்தமய சக்த்யைவ லக்ஷ்யதே ந அந்யதா கில ॥

(स्पन्देन लक्ष्यते वायुः वह्निरूष्णेन लक्ष्यते ।
चिन्मात्रममलं शान्तं शिव इत्युदितं तु यत् ।
तत्स्पन्दमयशक्त्यैव लक्ष्यते नान्यथा किल ॥)

என்ற பிரமாணப்படி சக்தி என்பது "ஸ்பந்தம்" அல்லது துடிப்பு என்று ஏற்படுகின்றது. இதனை சாந்தோக்யம்,

"ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேய இதி"

(तदैक्षत बहु स्यां प्रजायेयेति)

என்று அழகாகக் கூறியது. எப்பொழுது "ஸத்" என்ற "**Primordial energy**" விரிவோம் என்று சங்கல்பித்ததோ அப்பொழுது இந்த ஸ்பந்தனம் தோன்றுகிறது. இப்பொழுது இதை **Potential energy** என்று விக்ஞானம் கூறும். இந்த நிலையிலும் பிரம்மத்தினின்று சக்தி வேறாகாமல் அத்விதீயமாகவே இருக்கிறள். அடுத்த நிலையில் சக்தி பிரம்மத்தினின்று ஸ்புரித்து பிரபஞ்ச சிருஷ்டி தொடங்குகின்றது. இப்பொழுது அதை **Kinetic energy** என்று விக்ஞானம் கூறுகின்றது. இதை நாதப்ரம்ஹம் என்றன நமது சாஸ்த்ரங்கள். சக்தி ஸ்புரிக்கும் போது ஏற்படும் ஸ்பந்தன சப்தங்களே விந்து நாதம் எனக்கூறப்படுவன. ஆக சக்தி என்பது பிரம்ஹத்தினின்று வேறல்ல. பிரம்ஹத்தின் அங்குராவஸ்தையே சக்தி. இதைத்தான் மஹாமாயை என்றும் பரப்ரம்ஹ மஹிஷி என்றும், ப்ரக்ருதி என்றும், சக்தி என்றும், அம்பிகை என்றும் கூறுகிறோம். இந்த நிலையில் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் ஸாம்யாவஸ்தை என்றும், அவ்யக்தம் என்றும் கூறுவர். பிரம்மம்

பிரகாசாம்சம் என்றும் சக்தி விமர்சாம்சம் என்றும் கூறுவர். அதாவது பிரம்ஹத்தின் வெளித்தோற்றம் என்று கூடக்கூறலாம்.

இத்தன்மை வாய்ந்த சக்தியானது ரஜோகுணத்தை அடைந்து படைக்கும் சக்தியாக பிரம்மா, ஸரஸ்வதி என்ற இரு உருவங்களாயும், ஸத்வகுணத்தையடைந்து பாலநம் செய்யும் சக்தியான விஷ்ணு லக்ஷ்மியாயும், தமோகுணத்தை அடைந்து ஸம்ஹார சக்தியான ருத்ரன் ரௌத்ரீயாகவும் அழைக்கப்படுகிருள். ப்ராம்ஹி, லக்ஷ்மி, ரௌத்ரீ என்ற சக்திகள் பிரஹ்மத்தின் பரிணுமங்களேயன்றி வேறல்ல. இவைகள் ஸகுண ப்ரஹ்மத்தின் ஞான, க்ரியா, இச்சா சக்திகளாக சித்தாந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. மேலும் மஹத் தத்துவம், அஹங்கார தத்துவம், பஞ்சதன்மாத்ரைகள், பஞ்சபூதங்கள் யாவும் சக்தியின் பல்வேறு பரிணுமங்களே. அவைகளும் ப்ரஹ்மத்தினின்றும் வேறல்ல. ஆதலால் அவை ப்ரஹ்மத்தின் பரிணுமங்கள் என்று சொல்வதில் குற்றமில்லே

பரப்ரஹ்மத்தின் ஆற்றல் பெண்பாலாகக் கருதப்பட்டு அதற்கு சண்டி, சாமுண்டா, மஹாமாயா, யோகநித்ரா என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்த மஹாமாயைதான் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து, ரக்ஷித்து, லயப்படுத்திக்கொள்கின்ருள். இவள் பிரபஞ்சத்தின் சகல சராசரங்களிலும் அந்தர்யாமியாய் நீக்கமற நின்று இயக்குகின்ருள்.

இந்த தத்துவங்களே தன்னுள் அடக்கியிருப்பதே "ஸப்தசதி" என்ற இந்த மஹாகிரந்தம். இதில்வரும் மஹிஷாசுர வதம், சண்ட முண்டர் சம்ஹாரம், சும்பநிசும்பர் அழிவு போன்ற கதைப்பகுதிகளும் அம்பாளின் ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுடைய செய்கையே என்பது இந்த சீரிய கிரந்தத்தின் லக்ஷியார்த்தம். இது வெறும் கற்பனேக்கதையல்ல. விவேகமில்லாதவர்களுக்கு அவ்வாறு தோன்றலாமே ஒழிய ஆஸ்திகப் பெருமக்கள் இதன் தத்துவத்தை உணர்வார்கள். இதில் வரும் கதாபாத்திரங்களில் ஸுமேதஸ் என்ற அந்தணன், ஸுரதன் என்ற க்ஷத்திரியன், ஸமாதி என்ற வைசியன் இந்த மூவரின் தத்துவம் என்னவெனில்:— "ஸுமேதஸ்" என்ருல் நல்ல பரிபக்குவமடைந்த புத்தியைக்குறிக்கும். ஸுரதன் என்ருல் ஆத்மாவுக்கு ரதமாக விளங்கும் சரீரத்தையே குறிக்கும்.

ஆத்மானம் ரதினம் வித்தி ஶரீரம் ரதமேவ து

(आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव तु)

என்று கூறப்பட்டிருக்கின்றதல்லவா ! ஸமாதி என்பது ஸமாதியிலே நிலைத்திருக்கும் சித்தத்தின் நிலையைக் குறிக்கும். ஸுரதனும் ஸமாதியும் மாயையினால் பீடிக்கப்பட்டு பரம துக்கத்தையடைந்தார்கள். அவர்கள் ஸுமேதஸ் என்ற ஆசார்யனையடைந்து பராசக்தியை ஆராதிக்கும் முறைகளைத் தெரிந்துகொண்டு துக்க நிவர்த்தியடைந் தார்கள் என்பதுதான் இந்த நூலின் அடிப்படையான ஸாரம்.

இந்நூலுக்கு மந்த்ரம், யந்த்ரம், ந்யாஸம், பாராயணம், ஹோமம், புரஶ்சரணம், ப்ரயோகவிதிகள் முதலியவற்றை குரு மூலம் தெரிந்து கொள்ளுதல் நலம். அல்லது சிறந்த உபாஸகர்களைக்கொண்டு பூஜை பாராயணம், ஹோமம், ஜபம் முதலியன செய்யச் சொல்லியும் பலனடையலாம்.

பதினொன்றுவது அத்யாயம்

முடிவுரை

அம்பாளின் பரம கிருபையாலும், எனது குருநாதரின் அனுக்ரஹத் தாலும், ஜகத்குரு மஹா ஸன்னிதானங்களின் திவ்ய கடாக்ஷத்தாலும் என் சிற்றறிவுக்கு எட்டியவரை மனோவாசாமகோசரமான பராசக்தியின் தத்துவத்தை ஒருவாறு எழுதி முடித்திருக்கிறேன். அடியேனின் அறிவும் அநுபவமும் மிகமிகக் குறைந்தவை. மேலும் அடியேனின் கருத்துக்களும் அனுபவங்களும்தான் முடிவு என்றோ வித்வான்களால் அங்கீகரிக்கப்படும் என்றோ என்னால் உறுதியாய்க் கூறமுடியாது. ஸ்ரீ சிருங்கேரி குரு பரம்பரையில் 34-வது பட்டத்தில் எழுந்தருளிய ஸ்ரீ சந்த்ரசேகர பரரதீ மஹா ஸ்வாமிகளின் சிஷ்யர்களில் ஒருவரான ஓர் மஹானால் ஸ்ரீ வித்யை யதோக்தமாய் உபதேசிக்கப்பட்டு 1937ம் ஆண்டுமுதல் உபாஸனை செய்தும் 12 ஆண்டுகள் நவராத்ரிவிரதம் இருந்தும், பலமஹனீயர்களை அண்டிப் பாடம் கேட்டும், பல கிரந்தங் களைப் படித்தும், அடியேன் அடைந்த அனுபவங்களையே இந்நூலில் இயன்றவரை கூறியுள்ளேன்.

ஸ்ரீ வித்யை ஓர் சமுத்ரம் போன்றது. அதில்யாரும் பாண்டித்யம் அடைந்து விட்டோம் என்று கூற இயலாது என்பதை நான் அறிவேன். சிருங்கேரி ஜகத்குரு மஹாசன்னிதானங்கள் போன்ற ஜீவன் முக்தர் களால்தான் ஒருவாறு கூறமுடியும். அதை அடியேன் கூறமுயன்றது கம்பன் சொன்னது போல ஓர் பூனை பாற்கடலை குடித்து விடலாம் என்று முயற்சிப்பது போலாகும்.

உபாஸகர்களில் பலதிறப்பட்டவர்கள் இருக்கக்கூடும். அவரவர் களுடைய அனுபவமும் வெவ்வேறுகவும் இருக்கமுடியும். அத்தகைய பெரியோர்கள் அடியேனின் இந்த அல்ப முயற்சியில் குற்றம் குறை கூறவும் முடியும். ஆயினும் பள்ளிப்பிள்ளை உபாத்தியாயரிடம் பாடம் ஒப்புவிப்பதுபோல நான் கண்டு அனுபவித்த உண்மைகளைக் கூற முன் வந்தேன். அம்பாளின் எல்லையற்ற கருணையே முன்னின்று இப் பணியைச் செய்து முடிக்க உதவியது. 1958ம் ஆண்டில் நமது ஆசார்யாள் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள் தொடர்ந்து 5 தினங்கள் அடியேனுக்கு அரிய ரஹஸ்யங்களை உபதேசித்தருளினுர்கள். ஸ்ரீ வித்யா மந்த்ராக்ஷரங்கள் அடங்கிய ஸ்ரீ சக்ரயந்த்ரத்தை செப்புத் தகட்டில் செய்து சமர்ப்பித்ததை அங்கீகரித்து அனுக்ரஹித்தார்கள். அதன் பின்பு எனது ஸகோதரர் இலஞ்சி வள்ளல் உயர்திரு I. A. சிதம்பரம் பிள்ளை மூலமாக அந்தச் செப்புத்தகடு 15 பிரதிகள் செய்யுமாறு ஆக்ஞாபித்தபடி அவைகளும் ஸமர்ப்பிக்கப்பட்டன. சன்னிதானங்கள் 13-7-64ல் திண்டுக்கல்லுக்கு விஜயம் செய்தபோது அடியேனை ஆசீர்வதித்து மந்த்ராக்ஷதை அருளின தோடு பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவு நடத்தும்படியும் ஆக்ஞா பித்தார்கள். அவர்களுடைய தேஜோமயமான அருளே அடியேனை இப் பணியில் ஈடுபடுத்தியது. அதோடு ப்ரம்ம ஸ்ரீ K. R. வேங்கடராமய்யர் அவர்கள் எழுதிய சிருங்கேரி குரு பரம்பரை ஆங்கில சரித்திரத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் பாக்கியமும் கிட்டியது. அதனை மஹா சன்னிதானங்களே தமது திருக்கண்களால் கடாக்ஷித்தருளினுர்கள். இத்யாதி காரணங்களாலேயே இந்நூலும் இன்று தனுர்மாசம், பகுள பஞ்சமி (11—1—66) யன்று முடிவடைகின்றது.

யத்ரைவ யத்ரைவ மனோ மதீயம் தத்ரைவ தத்ரைவ தவ ஸ்வரூபம் ।
யத்ரைவ யத்ரைவ ஶிரோ மதீயம் தத்ரைவ தத்ரைவ பதத்வயம் தே ॥

(यत्रैव यत्रैव मनो मदीयं तत्रैव तत्रैव तव स्वरूपम् ।
यत्रैव यत्रैव शिरो मदीयं तत्रैव तत्रैव पदद्वयं ते ॥)

த்ரிபுரஸுந்தரீ வேத பாதஸ்தவம் சு. 110.

ஜபோ ஜல்ப: ஶில்பம் ஸகலமபி முத்ரா விரசனா
கதி: ப்ராதக்ஷிண்ய க்ரமணம் அஶனாத்யாஹுதிவிதி: ।
ப்ரணாம: ஸம்வேஶ: ஸுகமகிலமாத்மார்பணத்ருஶா
ஸபர்யாபர்யாயஸ்தவ பவது யன்மே விலஸிதம் ॥

जपो जल्पः शिल्पं सकलमपि मुद्राविरचना
गतिः प्रादक्षिण्यक्रमणमशनाद्याहुतिविधिः ।
प्रणामः संवेशः सुखमखिलमात्मार्पणदृशा
सपर्यापर्यायस्तव भवतु यन्मे विलसितम् ॥

ஸௌந்தர்யலஹரீ சு. 27.

மனஸ்தே பாதாப்ஜே நிவஸது வச: ஸ்தோத்ரபணிதௌ
கரௌ சாப்யர்ச்சாயாம் ச்ருதிரபி கதாகர்ணனவிதௌ ।
தவ த்யானே புத்திர் நயனயுகளம் மூர்த்திவிபவே
பரக்ரந்தான் கைர் வா பரமஶிவ ஜானே பரமத: ॥

मनस्ते पादाब्जे निवसतु वचः स्तोत्रफणितौ
करौ चाप्यर्चायां श्रुतिरपि कथाकर्णनविधौ ।
तव ध्याने बुद्धिर्नयनयुगलं मूर्तिविभवे
परग्रन्थान् कैर्वा परमशिव जाने परमतः ॥

சிவானந்தலஹரீ சு. 7.

ஸ்ம்ருதௌ ஶாஸ்த்ரே வைத்யே ஶகுனகவிதா கானபணிதௌ
புராணே மந்த்ரே வா ஸ்துதிநடன ஹாஸ்யேஷ்வசதுர: ।

கதம் ராக்ஞாம் ப்ரீதிர் பவதி மயி கோஹம் பஶுபதே
பஶும் மாம் ஸர்வக்ஞ ப்ரதிதக்ருபயா பாலய விபோ ॥

स्मृतौ शास्त्रे वैद्ये शकुनकवितागानफणितौ
पुराणे मन्त्रे वा स्तुतिनटनहास्येष्वचतुरः ।
कथं राज्ञां प्रीतिर्भवति मयि कोहं पशुपते
पशुं मां सर्वज्ञ प्रथितकृपया पालय विभो ॥

சிவாநந்தலஹரி சு. 5.

இந்நூல் தயார் செய்ய உதவிய நூல்கள்.

1. லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்
2. லலிதா த்ரிசதீ
3. ஸௌந்தர்யலஹரீ
4. தைத்திரீய உபநிஷத்
5. ச்வேதாச்வதரோபநிஷத்
6. சாந்தோக்யோபநிஷத்
7. பகவத் கீதை
8. சியாமளாதண்டகம்
9. ருக் வேதம்
10. முண்டகோபநிஷத்
11. ஸூதஸம்ஹிதை
12. ஈசோபநிஷத்
13. தேவீ மாஹாத்மியம்
14. பதஞ்ஜலியோக சூத்ரம்
15. வரிவஸ்யாரஹஸ்யம்
16. ஞானர்ணவதந்த்ரம்
17. ஞானவாஸிஷ்டம்
18. திருமூலர் திருமந்திரம்
19. சம்பந்தர் தேவாரம்
20. அப்பர் தேவாரம்
21. திருவாசகம்
22. பெரிய புராணம்
23. கந்தர் அநுபூதி
24. திருக்களிற்றுப்படியார்
25. சிவஞான போதம்
26. சிவஞான சித்தியார்
27. காரணகமம்
28. திருவுந்தியார்

29. கந்த புராணம்

30. பாவனோபநிஷத்

31. ஸபர்யா பத்ததி

32. ஸபர்யா பத்ததி வாஸனு

33. யோகினீஹ்ருதயம்

34. ஸௌபாக்ய வர்த்தனீ

35. காமிகாகமம்

36. தொல்காப்பியம்

37. திருக்குறள்

38. Serpent power

39. பரசுராம கல்ப சூத்ரம்

40. தேவீபாகவதம்

41. ஸ்வயம் ப்ரகாச விஜயம்

42. Sringeri Souvenir, Madras 1965

43. ப்ரபஞ்சஸாரம்

44. சிவானந்தலஹரீ

45. நாநாஜீவவாதக்கட்டளை.



श्रीराजराजेश्वरी पराभट्टारिका

(पञ्चप्रेतासनासीना)

ஸ்ரீ ராஜராஜேஶ்வரீ பராபட்டாரிகா

(பஞ்சப்ரேதாஸநாஸீநா)

Courtesy: Artist Narayana Rao, Wadul Watch Co., Bangalore.



श्री शारदाम्बा, शृङ्गेरी।

ஸ்ரீ சாரதாம்பாள், சிருங்கேரி.



देवी कुमारी

தேவீ குமாரி

Courtesy: *Amuda Surabhi*

தேவீ ஸௌபாக்யத்ரிபுரஸுந்தரி : இரண்டாம் ராஜராஜன் (1146—73) எடுப்பித்த தாராசுரத்திலுள்ள "ராஜ ராஜேச்வரம்" ('ஐராவதேச்வரம்') என்ற ஆலயத்திலுள்ள சிற்பம்.

இவை மூன்றும் சோழர் காலத்து சிற்பக்கலையின் முழு மலர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

முகப்படமாகிய ஸ்ரீ சக்ரம், ஸ்ரீ N. சுப்ரமண்யய்யர் ('அண்ணா') அவர்களின் பிரசுரங்களிலுள்ள படத்தை அனுஸரித்து தயாரிக்கப்பட்டது. படங்கள் கொடுத்து உதவிய நண்பர்கள் எல்லோருக்கும் நன்றி.